திருவருட்சகாயம்.

# ஞானசித்தப்பிரபாவம்.

உ F. 31 அ

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

ஸ்ரீ புவனாம்பிகைபக்தஜன சித்தசபையார்

விருப்பத்தின்படி,

திருவொற்றியூர்

பட்டினத்துச்சுவாமிகள் கோயில் தருமகர்த்தர்

ஆத்தங்குடி

சு. மு. நாகப்பசெட்டியாரவர்களால்

சென்னை:

பண்டித மித்திர யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

பராபவஹு-சித்திரைமீ.


1906.



ஸ்ரீமத். ஞானசித்த சுவாமிகள்.



அஷ்டாவதானம்-பூவை. கலியாணசுந்தர முதலியார்.



உ

திருவருட்சகாயம்.

# ஞானசித்தப்பிரபாவம்.

## வணக்கம்.

போற்றுக மனனே போற்றுக மனனே
கூற்றுறு மிடர்தபக் குறித்துப் போற்றுக
பிரணவா னனமலிர் பேழுல வைத்தே
குறவிதோண் மணந்த குறிஞ்சி நற்கோ
பொற்சவை முகத்துப் புரியல் புரியிறை
அந்நடங் காணூஉ மருஞ்சீ தமையே
போற்றுக மனனே போற்றுக மனனே

அதா அன்று,

தமிழ்தேம் விடுக்குந் தனிமல யத்துக்
குரவெனப் பராவு குடமுனி யாதி
பஃறொன் பானுப் பரவிய சித்தர்சீர்
தென்மொழி மறைபொழி தெய்வப் பெற்றியர்
அத்து விதமெய் கண்ட வறிஞர்பேழ்
போற்றுக மனனே போற்றுக மனனே.

## நூல்.

வேதாகம புராணேதிகாசங்கள் விளங்கிவருவதாகிய புண்ணிய பூமியாம் பரதகண்டத்திலே, அறுபான் மும்மை நாயன்மார்கள் அவதாரஞ் செய்த தென்றேயத்திலே, அமிழ்தினு மினிய பைந்தமிழ் பரவு பாண்டி நாட்டிலே, பூங்கொத்துகள் அலர்ந்து கமழ்கின்ற இதழ்களை யுடையனவாகிய மலர்களைச் சூடித் தலைமை முதிர்ந்து புலவர் வாயிற் கவிகளைத்தான் பெற்று நகரைச்சூழ்ந்து வருதலிற் பெரிய நிலமடந்தை தான் ஒரு பூமாலையைச் சூழ்ந்துகொண்டிருந்த தன்மைபோல அழகுபொலிவுபெற்ற பொருநை நதியானது நீர் சூழ்ந்து மதிலைப் பொரும்பகையன்றிப் பகைவர் போரால் வளைத்தலைச் சிறிதும் அறியாத புரிசை சூழ்ந்த புனலையுடைத்தாகிய நெல்லையம்பதியிலே, பலமணிகள் போலும் நிறங்களை யுடையனவாகிய மலர்களையுடைய பொய்கையிலே சேவலோடு மகிழ்ந்து விளையாடும் அன்னப்பெடை தனது அழகு மிக்க சேவலன்னத்தை அகன்ற தாமரையிலை மறைத்ததாக அதனைக் காணுமற் கதுமெனக் கலங்கி அந்த அறியாமையை யுடைய பெடை மதியினுடைய நிழலை நீருக்குள்ளே கண்டு அச்சேவலென்று உவந்து ஓடிச்சென்று தன்னைச் சேருதற்கு எதிரே வருகின்ற சேவலைக்கண்டு மிகவும்

நாணிப் பல்பூக்களின் செறிவுக்குட் புக்கு ஒளித்திருக் கும்பழனநிலைஞ்சூழ்ந்த மேலப் பாளையத்திலே, தொன்று தொட்டு வசித்து வரும் பழைய சைவவேளாளர் மரபி லே, சிவபக்தி குருபக்தி அடியாரபக்தி முதலியவற் றிற் சிறந்து அருந்தவர்ப் போற்றலும விருந்தினர்க் காத்தலும கடமையாக்கொண்டு விளங்கிய முத்துசாமி யாபிள்ளை என்னுஞ் சற்குணசீலர் ஒருவரிருந்தனர். இவர் "இளமையிற்கல்" என்ற வண்ணமே உரியகாலத் தே கருவிநூல் பற்பல கற்று, "கற்கக் கசடறக் கற் பவைகற்றபின்நிற்கவதற்குத்தக" என்றவாறே உயிர்க் குறுதி பயப்பனவாகிய சிவஞான போத முதலிய மெய்கண்ட சாத்திரப் பயிற்சியிற் சிறந்து அடக்கம், வாய்மை, இன்சொல், ஈகை யாதிய நற்குணங்கட்கு இருப்பிடமாய் வாழ்ந்து, "மூர்த்தி தலந்தீர்த்த முறை யாத் தொழுபவர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே." என்றவாறுபல திவ்விய சிவத் தல யாத்திரைசெய்து, அளவில் சித்தர் அமர்ந்து வாழப்பெற்ற அழகிய சதுரகிரி மலையினை யடுத்து அங் கு ஒரு சித்த மூர்த்தியின் கருணைக்குப் பாத்திரராகிப் பலநாள் தங்கியிருந்து அனுபூதிச் செல்வரா யிருந்து வருங்கால் அச்சித்தர் ஆணையின்படி வீரராகவபுரம் வந்து அந்நகரில் தமது குலத்திற்கும் நலத்திறுக் குந் தக்க பசுங்கிளி என்னும பெயர்பூண்ட ஒருபெண் மணியினை விவாகஞ்செய்துகொண்டு இல்லறம் நடத்தி வருங்கால் முன்னை வினையின்பயனாய் அம்மாது சிவ பதமடைந்தனர்.

இங்ஙனமாக ஆழ்வார்திருநகரியென்னும் திருக் குருகூரிலே பரம்பரை ஆயுர்வேதியராகிச் சின்னபண்


டிதர் எனப் பிரசித்தியுற்ற முத்துசாமிபிள்ளை என்பவர் இல்லறம் நடத்திவருகையில் யாவருக்கும் தேகப்பிணிக்கு அவிழ்தம் கொடுத்து வருவதுடன், பசிப்பிணிக்கும் அமுதளித்து அடுத்த அன்பர்கட்குச் சிவஞான யோகப் பயிற்சிகளையும் போதித்துவந்தனர். இத்தகையினர் ஒழுக்கத்தினையும் ஞானமுதிர்ச்சியினையும் கேள்வியுற்ற சங்காமூர்த்திசுவாமிகள், சிற்றம்பலவடிகள், அவதூதசுவாமிகள், குணங்குடிமஸ்தான், மாத்திரைக்கோல்சுவாமிகள், இராஜநந்தசுவாமிகள் முதலிய அநேகம் பெரியோர்கள் இவர்பால்வந்து இவருடன் வருடக்கணக்காய் வசித்துவந்தனர். இத்தகைய மகான்கள் பலர்கட்கு இவர் அன்னமிட்டு வந்த புண்ணியமே ஒருருவெடுத்தாற்போன்று இவருக்கு ஒருபெண்மகவு உண்டாக அக்குழந்தையினுக்குச் சிதம்பரவடிவம்மை எனத் திருநாமமிட்டு நாளொருமேனியும்பொழுதொருவண்ணமுமாக வளர்த்துவருங்கால், இவ்வருந்தவப் பெண்மணிக்கு மணப்பருவம் வரக்கண்டு தந்தையார் தன் புத்திரிக்குத் தக்க உத்தமச் சிவபக்தியிற் சிறந்த கணவன்வேண்டுமெனக்கருதி விசாரித்துவருங்கால், தமது குலமும், கோத்திரமும், ஒழுக்கமும், கல்வியும், பக்தியு முதலிய சகல நற்குணங்கட்கும் இருப்பிடமாகி விளங்கிய மேலப்பாளையத்தில் வசித்துவந்த முத்துசுவாமியா பிள்ளையை அழைத்துவந்து தமது அருந்தவப்பேறுகிய அம்மையாரை அவருக்கு மணம்புரிவித்துத் தமது இல்லத்திலேயிருத்திக்கொண்டனர்.

முத்துசுவாமியாபிள்ளையும் சிதம்பர வடிவம்மையும் உடலிரண்டு உயிரொன்றென்னும்படி ஒற்றுமையுடனிருந்து மலரு மணமும்போல இல்லறமாகிய நல்

லறத்தினை இயற்றிவருகையில் எல்லாவிதத்தாலும் பெருமகிழ்ச்சியினையே யுடையவராயினும் மக்கட்பேறின்மையால் கவலைகொண்டு "பெறுமவற்றுள் யாமறிவதில்லையறிவறிந்த மக்கட்பேறல்லபிற" என்று எண்ணியெண்ணிநெடுமூச்செறிந்து என்செயக்கடவோமென வருந்தி அவ்வில்லறக்கிழவோர் இருவரும் தாம் வழிபடுமூர்த்தியாகிய திருச்செந்தூர்க்கந்த னெந்தையையடைந்து அடியவர்கள் எண்ணிய வெண்ணியவாங்கு முடித்துத்தந்தருளும் பெருங்கருணைத்தடங்கடலாகிய பெருமானைப் பிரார்த்தித்து அனேகமானகட்டளைகளை நடத்திக் காலத்தோறுஞ்சென்றுவணங்கிப்பலவுபவாசமிருந்து செந்தமிழ்ப் பாமாலை பலபாடிச்சாத்தி வாழ்ந்துவருங்கால், ஒருநாளிரவில் சிவஞானச்செல்வராகிய முத்துசுவாமிபிள்ளை கனவில் அருட்பெருஞ் சோதியாநமது அறுமுகக்கடவுள் எழுந்தருளி அன்ப! அஞ்சேல், நினக்கோர் புத்திரப் பேறு தந்தருளுகின்றோம். அப்புதல்வனுக் குரிய இலக்கணங்களையே சுக்கிரநாடி, நந்திநூல், கமலமுனிநூல், உருக்குமணி சம்வாதம், அகத்தியற்கு நாம் கூறிய சோதிட நூல் முதலிய பன்னூல்கள் விரித்துக்கூறும். சங்குரேகை, சக்கரரேகை, மறுமாலை, மச்சரேகை முதலிய பத்து அடையாளங்களும் அவனது கால்மார்புமுதுகு முதலிய அவயவங்களினாலே காணப்படும். அக்குழந்தையால் இவ்வுலகத்தினுக்கு அனேக நன்மைகள்விளையும். அவனால் அனேக அடியார்கள் சிவானுபூதியினைப் பெறுவர். அவனால் அனேக பெருவியாதிகள் தீர்க்கப்படும். மணிமந்திர அவுடதங்களின் பெருமையினையும், ஆயுர்வேத நிலையினையும் உலகினர்க் கறிவிப்பன்.

அப்பாலகனுக்கு ஞானசித்தன் எனப் பெயர் விளங்கும். கொல்லம் ௲௪௩-ம் ஆண்டுக்குச் சரியான பிரபவவருடம் மார்கழி மாதம் ௯௨ எமது நட்சத்திரமாகிய விசாகநாளில் மிதுன ஓரையில் பிறப்பன் என்று கட்டளையிட்டு மறைந்தருளினர். அதுகண்டுவிழித்தெழுந்து அடங்கொணாப் பெருமகிழ்வுகொண்டு ஆனந்தக்கூத்தாடிச் செந்திமலம் பெருமானைப் பலதரம் வணங்கி விடைபெற்றுத் திருக்குருகூரினுக்குச் சென்று வாழ்ந்து வருவராயினர்.

சிதம்பர வடிவம்மையார் முத்துக்களைக் கருவில் வைத்த செங்கரும்புபோல்வயிறுவாய்த்து விளங்கினர். மாதம் வளருந்தோறும் புர்சவனம், சீமந்த முதலிய கருப்பக்கடன்கள் நிறைவேற்றப்பட்டன. பத்துத் திங்களுமாகவே கருணாநிதியாகிய கந்தனெம்பெருமான் கட்டளையிட்டிருந்த நன்னாளிலே,




இவ்விதம் கிரகங்கள் அமைந்தபோது சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவம் மென்மேலும் வழங்

கவும், தண்டமிழ் தழைக்கவும் எமது ஞானசித்தர் அவதாரஞ்செய்தருளினர். பெற்றோர்க்கு உள்ளக் கிளர்ச்சியும், ஊக்கமும், களிப்பும் பொங்கியெழுந்தன. தந்தையார் தேவாலயங்கட்குச சிறப்புச்செய்து, ஆச்மார்த்த தெய்வபூசனையும் வேள்விசாந்தியும் முடித்துப் புத்திரபேறு திருவிழாக்கொண்டாடினர். அப்பால் பத்து நாளும் எண்ணெய்விழா முதலிய சிறப்புச்செய்து பதினோரா நாள்பெற்றோ ரிருவரும் நீராடி அருமை மகவுக்கும் நீராட்டி, நீறிட்டு, தொட்டிலிற் கிடத்தித் தெய்வக்காப்புச் செய்து நல்லோரையில் பந்துக்கள் வேதியர் முதலியோர் புடைசூழ விருந்து விதிப்படி அருமை பல செய்துவந்தார்கள்.

அக்காலத்தில் பாளையங்கோட்டையின் கண்ணே எழுந்தருளி யிருந்த மகாராஜசாமி என்னும் பெரியவர் சித்தமூர்த்திகள் திருவவதாரமான செய்தியினைத் திருவருளா லுணர்ந்து அங்குப்போந்து சைவாசாரதுல்யரான முத்துசுவாமிபிள்ளையினை யழைத்து சிவஞானச்செல்வரே! நம்பால்அவதரித்தவர்சிவகாருண்ணிய சொரூபரான ஞானசித்தரேயாவர். இவர்பெருமைகளை எமது ஆசிரியர்பெரிதும்அருளியதுடன்அகத்தியர் பெருங்காவியம், தீக்கைவிதி, கேசரிநூல், குருநூல் முதலியனவிரித்துக் கூறப்பட்ட விட்டகுறையாளர்க் குற்றவடையாளங்களுடன்விளங்குவர் காண்பாயெனக்காட்டிச் சிவானந்தச் செல்வக் குழந்தைத் தரிசித்தகன்றனர். அதுகேட்ட தந்தையாரும், தாயாரும், மாதாமகர் முதலாயினோரும் மிகமகிழ்வடைந்து தம்முயிரினுஞ் சிறப்பக் கருதிவளர்த்து வருவாராயினர், சின்னாளைக்குப்பின் சிவானுபூதிமானாகிய மற்றொரு சிவயோகி

யார் சித்தர் அவதரித்ததைத் தெரிந்துவந்து அருமந்த திருமகவை யுற்று நோக்கி மனங்குழைந்து அக்குழவியின் தாய்தந்தையரை நோக்கிச்சிவஞான சம்பன்னரே! இக்குழந்தைக்கு மூன்றாவது வயது வருங்கால் ஒரு தத்து உண்டாகும். அது தீர்வதற்கு ஓர் அரச மரத்தின் வேர்ப்புதரில் அக்குழந்தையைப்பெற்றோர் தம் கையால் பதினொரு வாரம் உள்ளே கொடுத்து எடுத்து வருவீராயின், அப்புதரினின்றும் வெளிவரும் ஒரு சர்ப்பத்தின் பரிசத்தால் அத்தத்து நிவர்த்தியா மென்று கூறிப் போந்தனர். அவ்வாறே மூன்றாமாண்டு வந்துழி சித்தர்க்குத் தேகமிளைத்து வருதல்கண்டு சிவயோகியார் முன்னர் சொன்னதை நினைத்துத் திருக்குருகூர் ஆண்டபெருமாள் பிள்ளை மண்டபத்தருகேயுள்ளதும் அவ்வூரார் தொழுது வருவதுமான அரசமரத்தை வலம்வந்து குழந்தையைப் புதரிற்கொடுத்து வாங்கிப் பதினோராம் வாரத்தன்று விசேட அபிடேக முதலிய செய்து குழந்தையை அவ்வரசினருகில் வைத்துத் தூரத்து நின்றனர். நெடுநாளாக அம்மரப்பொந்தில் வாழ்ந்துவந்த ஒருபெரிய நாகம் படத்தைவிரித்துப் பிள்ளையருகில் வரக்கண்ட பெற்றோர் அஞ்சிநடுங்கி யோடிப் பதுங்கச் சிறிது நேரத்திற் கெல்லாம் அந்நாகம் எமது சித்தப்பெருமானை மூன்றுதரம்முத்தமிட்டகன்றது. அகன்றவுடன் தாய்தந்தையரும் பிறரும் மகிழ்ந்தோடிவந்து குழந்தையை யெடுத்துக்கொண் டளவிலா வானந்த மடைந்தனர். இக்காரணத்தானே அன்று அவ்வற்புதக் காட்சியைக்கண்ட பெரியோர் பலர் முத்துசுவாமியாரென்றும், முத்தானந்தர் என்றும் திருநாமங்கூறிக் களித்தனர்.

சர்வலோக ஆதார பூதனாகிய சண்முகப் பெருமான் திருவாக்கால் ஆதியில் சித்தனிவன் என்று கடளையிட்டருளினமையாலும் மகான்கள் பலர்வந்து வியந்து புகழ்ந்து தரிசித்துப் போவதாலும், சர்ப்பம் முத்தமிட்டகன்றமையாலும், கல்விபயிற்றும் பருவத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த தந்தையார் அங்ஙனம்செய்யாது திருவருளையே சிந்தித்துக் கொண்டிருந்தனர். அந்நகரிலுள்ள சிறுதெய்வங்களின் உற்சவாதிகளைப் பார்த்தற்குப் பெற்றோர் நமது சித்தரைக் கூட்டிச்சென்று அத்தெய்வங்களை வணங்கச் சொல்லுகையில் தாம் அவ்வாறு செய்யாமலும், அவை தெய்வங்களாகாதென்றும் விடை பகர்வதைக் கண்டவர் கேட்டவர் பலரும் நமது சித்தரைக் கருவிலே திருவுடைய பெரியர்போலுமென் றதிசயித்து வாழ்த்தி வந்தனர். ஓரைந்து வயதுஅடைய சித்தர் தோன்றிய திருவயிற்றின்கண்ணே கௌரியை யனைய ஒருகன்னிகை யுதித்தனள். பாற்கடலீந்த பாவைபோற் றோன்றிய அப்பெண்மணிக்குக் காந்திமதி என்ன நாமம் புனைந்து வளர்த்துவந்தனர். சித்தர்பெருமான் ஐந்தாவது வயதில் ஓதுங்கல்வியை ஈரைந்து வயதுவரதும் ஒருசிறிதும் கற்காதிருந்தும் முழுமுதற் கடவுளாகிய முருகப் பெருமான் திருவருட் பேற்றால் எல்லாக் கலைகளையும் உணர்ந்து திருச்செந்திலம்பதியை யடைந்து பூந்தனநட்பா முதலிய பற்பலஅற்புத விற்பனச்செய்யுள்கள் திருவாய்மலர்ந்தருளினர், குமரகுருபரசுவாமிகள் திவ்விய சரிதத்தைக் கேட்டறிந்த அடியவரனைவரும் நம்சித்தமூர்த்திகள் மகிமையைக் கண்ணாரக் கண்டும் பண்ணாரப்பாடும் பாக்களைக் கேட்டும் பரவசமுறுவா

ராயினர். அப்போது அக்காலத்திற்றானே பத்திவைரா க்கியத்தினையும் ஞானானுபவத்தினையும் இனிது விளக்கி ஞானபாஸ்கரோதயம் ஆயிரம் என்றதொரு சிறந்த நூலை யும் இயற்றியருளினர். அதனானே ஆண்டுள்ள பெரி யோர் பலரும் பலபாராட்டி ஞானநேசிகன் எனத் திரு நாமமிட்டுப் போற்றினர். இவ்வாறு பெயர்பெற்ற நமதுசித்தமூர்த்திச்செல்வர் நித்தியானந்த நிலைமையை உணர்த்தும் பரமாசாரியர் காட்சிபெறும் நற்காலத் தை எதிர்நோக்கி நின்றதை யுணராது அந்நகரில் தமிழுபாத்தியாயராய்நாத்திக நிலையிலிருந்தபூவலிங்கப் பிள்ளையென்னும் சைவவேளாளர் ஒருவர் சித்தருக்கு இலக்கியவிலக்கணத் தேர்ச்சி செய்வித்துத்தம் மாணாக் கராக்கிக்கொள்ள விரும்பிச் சிறிது பயிற்றுவித்து வரும்போது, நம் சித்தர்பால் அவ்வக் காலங்களில் இயற்கையினிகழும் அற்புதச்செயல்களைக் கண்டு ஆச் சரியமுற்றுத் தம் நினைவைமாற்றி ஆத்திகராய், நன் னெறிபெற் றுய்ந்தனர். இதுகண்ட பெற்றோர் சித்த ரின் மேம்பட்ட நிலைக்கு மகிழ்ச்சியும், பெரியோர்கள் முன்புசொன்னபடி தம் தநயர் தம்பாலுறையார் என்ற தனாலுண்டாகிய துக்கமுமெய்திப் பெரிதும்வாடியிருந் தனர்.

சின்னாளைக்குப்பின் ஞானாசிரியரைக் காணக்கருதி முறுகிவளர்ந்த சிந்தனையிழுக்கச்சென்று திருக்குற்றா லத்தைச் சித்தரடைந்தனர். அங்குச் செண்பகாடவி யும், சித்திரகங்கையும், திரிகாலவுணர்ச்சியைத் தரும் தருவும், சோதிவிருக்கமும், உரோமவிருக்கமும், பேதி விருக்கமும், சாயாவிருக்கமும், சல்லியகரணியும், சௌ பாக்கிய கரணியும், மிருத சஞ்சீவியும், கந்தகமடுவும்,

ருதக்கினாறும், சூரிய காந்தமும், சந்திர காந்தமும் அயக்காந்தமும், கருநெல்லியும், வெண்சாரையு முதலிய அரியபெரிய பொருள்களனைத்து நிறைந்த திரிகூடமலையிலுள்ள ஒருகுகையிடத்தே சென்று மரவுரி தரித்துக்கனியும், கிழங்கும், காயும், சருகும், காற்றும் அருந்திப் பனியும் வெயிலும் பருமழையும் பாராது தவமுஞற்றி வதிந்தபோது தாவருஞ்சித்தியினும்மேவருஞானத்தினுந் தேவரினும் முனிவர் யாவரினுமேம்பட்டு உலகமெலாந் தொழுதேத்த நிற்குந் தெய்வப் பெற்றியாள ராகிய அகத்தியனார்க்கு அகவல்விளம்பித் துதித்தும், ஏனையசித்தர் எல்லாரையும்அந்தாதியால்போற்றியும் வருங்கால், ஆண்டுள்ள அருந்தவமுனிவர் பலர் போந்து இவர்நிலைகண்டு இவர்க்குச்சிந்தநாதரெனத் திருநாமமளித்து அளவளாவி யுறையுங்கால் குறுமுனியாகிய குருமுனியா னருள்பெற்றுத் திருவானைக் காவுக்குச் செல்லுமாறு ஒருப்பட்டு,

"வேத வாகமச் சென்னியில் விளைபொரு ளபேதம்
பேத மாகிய பிணக்கறுத் திருட்பிணி யவிழ்த்து
நாத னாகிய தன்னையு மென்னையு நல்கும்
போத னாகிய குருபரன் வருவதெப் பொழுதால்"

என்று இடையறாச் சிந்தனையே துணையாக்கொண்டு வழிகடந்து திருவானைக்கா வென்னுந் திவ்விய தலத்தினையடுத்தனர். இவ்வாறு மனங்குழைந்து சித்தர்பிரான் வருகையைத் திருவுளங் கொண்ட பச்சைமலைச்சந்த்ர தேசிகன் மகவை நோக்கி வரும் தாயைப் போல அருளுருத் தாங்கித் திருவானைக் கோவில் ஆலயத்துள்ளே வாயுதிசையிலுள்ள இலாங்கலிச் சோலையில் வந்து வீற்றிருந்தருளினர்.

வேதநூலொரு மருங்கினும் மெய்வழிச் சைவப் போதநூலொருமருங்கினும் புராணத்துட்கிடந்த, சித நூலொருமருங்கினும் கிளைகொழு சமய, பேதநூலொரு மருங்கினும் வாய்விட்டுப் பிறங்கவடவால விருட்சத்தி னீழலில் வீற்றிருந்த பராமாசாரிய வடிவமும் திருவரு ணிறைந்த நோக்கமுங்கொண்டு குருநாதன் எழுந்த ருளி யிருக்கின்றாராக, நமது சித்தமூர்த்தி காவிரி நீராடிக் கரையிலாப் பேரன்பு கசிந்தொழுகு மனத்து டன் மேலைக்கோபுரவாயிலை யடைந்து வணங்கி யுட்புகு ந்தார். இலாங்கலி வனத்தருகே சென்று தன்னையே நோக்கியிருந்த தயாபர குருமூர்த்தியைத் தரிசித்து ஆனந்தப் பரவசமுற்று கைகள் தலைமேலேறக் கண்ணி லானந்த வெள்ள மெய்யெலாம் பொழியவிழுந்து பணி ந்து எழுந்து,

கண்டாருளமவிழக்காதலாமேனியொடுந்
தண்டாச்சினந்தீர்ந்தசாந்தகுணத்தோடும்
விண்டாரறியாவிமலவுருவாகக்
கொண்டாடத்தக்ககுரு வடிவங்கண்டேனே.

எளியார் எங்குள்ளாரென்று தேர்ந்து தேர்ந்து அளியை யாவது உன்னருளின் வண்ணமே என்று போற்றிப்படிமிசை பலதரம் விழுந்து அடிமலரிரண்டு முடிமிசை யணிந்து வணங்கி நின்றனர்.

பற்றற்று விளங்கும் பரம கருணாநிதியாகிய பச் சைமலைச் சற்குருநாதன் திருவாய் மலர்ந்து அன்புரு வாக வமைந்த வரிய மைந்தனே! திருச்செந்திலம் பதி யான் திருவருட்பேற்றால் முந்தைநா ளருந்தவக்குறை முடிந்திட மகவாகவந்து தோன்றினை, பொதிகாசலத் தே நமது திருவருள் பெற்றுளாய், இதுகாறும் நினது வரவை நாடியே நாமிங்கிருந்தனம், இங்கே நமது கரு

னைக் கிலக்காயினை செம்பைத்தானே வேதிகையிட்டுப் பொன்னாக்குவதுபோல நோக்கினாலும், வாக்கினாலும் பரிசத்தாலும், பாவனையாலும், ஆகமத்தாலும், ஔத்திரியாலும், அட்டமாசித்திகளையும், நினக்குணர்த்திப் பதிவிளக்கம் செய்விக்கின்றாம் எனக்கூறித் திருவடி தீட்சை செய்தருளி எல்லாமா யல்லதுமா யிருந்தபடி யிதுவென்ன விருந்து காட்டிப் பின்னுங் கூறுவாராயினர். குழந்தாய்! வானிலே பறக்கவும், மண்ணிலே நுழையவும், வானவர் வணங்கவும், மற்றொருவர் ஊனிலே புகுதவும், அவரவருளந்தனி னினைந்ததையுரைக்கவும், போனவுயிரை யெழுப்பவும், எண்சித்தியெல்லாம் கைவரினும் இவையனைத்தும் ஞானசாதகனது பாததூளிக்கு மிணையாகா, ஆதலின் நம்முடன் பச்சைமலையடைந்து சிவாநுபவ ஞான போதநிலையைப் பெற்றுக் கொள்வாயாக இதற்குரியவனீயே நினது தேகத்துள்ள அடையாளங்களையும் செந்திற்கந்தன் கட்டளையிட்டருளி யிருக்கின்றானெனக் கூறிப் பதிபசுபாச இலக்கணங்களைத் தெளிய வுபதேசிப்பாராயினர்.

சிவநேசச்செல்வ! பதிபசுபாசங்கள் மூன்று மநான்ய பதார்த்தங்களும், ஒன்றிலொன்று விஜாதிகங்களுமாம். இவற்றுள் பதிசத்தாயுள்ளது, பாசம் அசத்தாயுள்ளது. பசு சத்தோடுசேர்ந்தவழிச் சத்தாயும் அசத்தோடு சேர்ந்தவழி அசத்தாயு முண்மையில் சத்துமாகாமல் அசத்துமாகாமல் சதசத்தாயுள்ளது. இனிப்பதியாகிய முதல்வன் ஞானக்கிரியாஸ்வரூபனாய்ப் பசுவை ஞானக்கிரியைகளாலும், பாசத்தைக் கேவலங் கிரியையாலுமியங்கப்பண்ணுவன். அங்ஙனம் பண்ணுங்கால் சுவப்பிரயோசனங்கருதாது பரப்பிரயோசனத்தையே திரு

யுள்ளமிசைந்தியற்றும் நம்பரன் ஆணவகேவலத்திற்கிடந்த பசுக்களென்று மெண்ணிறந்த வுயிர்களையு மவரவர் வினைக்கேற்ப மாயையைத் தனுவாகச்சேர்த்து வெளிப்படுத்துவன். இதனால், பதியேகமும், பசுபலவும், பாசமூன்றுமென வெளிப்படும். பாசத்தையும் பசுவையும் சேர்க்கவும் பிரிக்கவும் வல்லபதியா னியங்கும்போது தனது சத்தியால் அனந்த மூர்த்திகளாவன், பாசம் அனந்த ரூபமாய்ப் பதியாற்காரியப் பாட்டைப்பெறும். பசு பல யோனிகளிற் புக்குழலா நிற்கும், பதியினுடைய வனந்தவடிவங்கள் விபூதியென்று வேதங்களும் பசுவினுடைய அனந்த சனனங்களை வினைப்போகமென்று சுருதியும் பேசும், பாசத்தினுடைய காரியப்பாடுகளைச் சிருட்டியென்று முதனூல் செப்பும். சிவம் நிர்மலமுடையதாகலினதனிடத்தில் சமல ரூபியாகிய வுயிர்க்குற்பத்தி கூறுதல் கூடாது. பாசம் கேவலம் மலமேயாகையால் நிர்மலமாகிய சிவத்திற் காரியப்படாது, சிவனும் சீவனுஞ்சித்தாயிருப்பினு மவையறிவிக்குஞ் சித்தும், அறியும் சித்துமாயிருக்கு முண்மையால், அறிவிக்கும் சித்தாகியசிவத்திலறியுஞ் சித்தாகிய உயிர்க்குற்பத்தி யுரைத்தல் கூடாது, பாசம் கேவலம் சடமாகையால் மேலாய சித்துக்களி லிதற்கிடமில்லை, அசித்தாகியபாசத்தின் காரியமெல்லாஞ் சித்தேயாம். இடையேயின்றவுயிர் பாசத்தோடு சேர்ந்தவழிப்பந்தத்தையும், பாசத்தினின்று நீங்கிச்சிவத்தோடு சேர்ந்தவழி முத்தியையும் பெறும்.

சிவானந்தச்செல்வ! இம்முத்தியிலே தசகாரியவனுட்டிப்பான் சித்தியாகும் அவையாவன, முப்பத்தாறு தத்துவங்களுடைய தொழிலைத் தனக்கு வேறு

யறிதலாகிய தத்துவரூபமும், தத்துவங்களைச் சடமென் றறிதலாகிய தத்துவதரிசனமும், அவைகளைச் சிவஞா னத்தாலே தனக்கன்னியமென்றறிதலாகிய தத்துவசு த்தியும் மலங்கள்நீங்கி ஆத்மஞானமெனவறிவேவடிவெ னவறிதலாகிய ஆத்துமரூபமும், தனக்கொருசெய்தியு மில்லையென்றறிதலாகிய ஆத்துமதரிசனமும், பெத்தத்தி னும் முத்தியினுஞ் சிவனைப்பிரிக்கிறதென்னுந் தன்னு டைய அடிமையையறிந்து சிவஞானத்திலே யழுந்துதலா கிய ஆத்துமசுத்தியும், ஆணவமலத்திலே கிடக்கிற வான்மாவைச் சிவன் பஞ்சகிருத்தியங்களைச் செய்து மலங்களை நீக்கி மோட்சத்திலே விடுவனென்று திடமா யறிதலாகிய சிவரூபமும், சிவன்செய்யும் பஞ்சகிருத்தி யத்தை ஆன்மா செய்யானென்றறிந்து ஆன்மாவைத் தரிசிப்பித்து நின்ற ஞானமாகிய சிவதரிசனமும், சிவ சத்திசெய்யும் கிருத்தியமெல்லாம் சி*னுக்குச் சற்று மில்லையென்றறிந்து சிவசத்தியையன்றித் தனக்கும் பிற ருக்குஞ் சற்றுஞ்செய்தியில்லையென்று தெரிந்து திருவ ருளோடு அழுந்துதலாகிய சிவயோகமும், சிவத்தோடி ரண்டற நின்று அத்துவித சாயுச்சிய ஆனந்தத்தைப் புசித்து வாழ்தலாகிய சிவபோகமுமாம், இதுவே சுத் தாத்துவிதமாம், இவ்வத்துவித மொன்றினையே "ஞா நிநோயோகிநஶ்சைவ ஸர்வேஷாம் | தஜ்ஜயா [illegible] ஸர்வாஸாம் தஸ்ய ஸம்ஸ்தவம் |" எனச் சுருதிகொண்டாடி மகிழும். அன்ப! இந் நிலையானது பூர்வசென்மாந்தர புண்ணியமுற்றவர்க்கே கைவல்லியமாகும் இத்தகைய சிவாநுபூதியினை நீயடை தற்கேற்ற இலக்கணங்களை வாய்ந்துள்ளாய் அங்ஙனமே ஆண்டவனருளால் அடைக என ஆசிர்வதித்துத் தம்

போடழைத்துக்கொண்டு பச்சைமலைக் கெழுந்தருளினர். இடையிடையேதோன்றிய பரவசத்தால்

இன்பத்தை மெல்ல வெறுப்பு மின்பத்து
ளென்னை விடுக்கு, மின்பத்து ளேறவும்
வைக்கு மின்பத் திழியவி ருக்கு, மின்பத்து
ளாட வெடுக்கு மின்பத்து ளோட நடக்கு,
மின்பத்தைத் தானென வுய்க்கு மெங்குரு
நாதன் கடைக்கண்.

நினைக்கு நினைவு மகற்று நிலையா நினைப்பு
மகற்று, நினைக்கு நினைப்பினி னின்றே நினையா
நினைப்பினை வென்றே, நினைக்கு நினைப்பி
னினைப்பை நினைக்கு நினைக்க நினைக்கும்,
நினைக்கு நினைப்பற நிற்கு நின்மலன் கூறிய
தோர் சொல்.

விந்த கிரிமேல் விழுந்தா ரெழுந்தனர்போல்
நிந்தைக் கயர்ந்தார்க ணீங்கி மகிழ்ந்தது போற்
பந்திப் பிணிமூன்றும் பாறியிடப் பார்வைதந்து
சிந்தைக் கரியானென் சிந்தைகுடிகொண்டானே.

என்ற வெண்ணிறந்த செய்யுள்களால் தோத்தரித்தனர். இப்போதுசித்தருக்குவயதுபதினான்கு. இவர் மலைக்கெழுந்தருளி குருகுலவாசஞ் செய்துவருகையில் சிவானுபவஞானபோதநிலையை அனுபவத்தானே யுணர்ந்து திருவருட்பேறுற்று மனம்வாக்குக் காயவழி கடந்து சச்சிதானந்த பூரண நிலைமையடைந்து நித்தியானந்த நிலையிலிருந்து கொண்டிருக்கின்ற காலத்து ஒருநாள் சித்தர் கனவில்அகிலலோகமாதாவாகிய அம்பிகை யெழுந்தருளி, குழந்தாய்! சித்தர்களும் முனிவர்

களும் என்னையே நோக்கிச் சிந்தித்து அரியபெரியயாகங்கள் செய்துவருகின்றனர், அத்தகைய யாகத்திற்கு நானே முதற்பொருள். நீயும் நினது சித்தியனைத்தும் நிறைவேற அவ்வியாகம் புரியக்கடவாய். அவ்வியாக விதியும் பிறவும் நினது குருவுரையா லுணரக்கடவாய் என்று பிரசாதித்து மறைந்தனர். இவ்வுண்மையினைத் தெரிந்துகொண்ட சற்குருநாதன் தமது சித்தமாணவகரை நோக்கி, புதல்வ! நீ இனி யிம்மலையினின்றும் நீங்கியுனது இருப்பிடத்தை யடைகுவாய். அறியவேண்டியவனைத்தையு நீயே திருவருட்கிருபையால் உணர்வாய். உன்னை யருமையினீன் றெடுத்த தாய்தந்தையர் உன்பிரிவாற்றாலடையும் துன்பம் பெரிது. எவ்வெவ்விடத்து நீ எம்மைக்காண விரும்பினும் அவ்வவ்விடங்களில் நாம் போந்து காட்சிதருவேம். நின்னாலுலகிற்குப் பற்பல நன்மைகள் விளைதல் வேண்டும். அதுபற்றியே இங்ஙனம் நினைப்பிரிய விசைந்தோம். அன்றியும் கற்பாதிசாதனை பயிலுங்கால் மலைவாசம் கூடாதென்பது சித்தநூற் சம்மதம் எனத்திருவாய் மலர்ந்தருளினர், பரமாசிரியர் திருவடி நீழலையகமும் புறமும் பிரியாதிருந்து மகிழ்ச்சி திளைத்திறுமாந்து வாழ்ந்த சித்தநாதரும் புறப்பிரிவு சம்பவிப்பதற்கு மிகவருந்தி எமது அருமைத்தாயாகிய உமாதேவியின் கருணையையும் சற்குருநாதன் ஆணையையும் சிரமேற் றாங்கிப்பணிந் தெழுந்து

மாயையை யெற்று மலரடிகள் வாழ்கமலங்
காயுமருட் பார்வைக் கண்வாழ்க வினைகடியும்
வாயுமிக வாழ்க மாறா வருட்கனியை
யீயுங்கை வாழ்க விருப்பீ ரிருப்பீரே.

எனத்துதித்து விடைபெற்றுப் பச்சைமலை நீங்கி இச்சைவழிநடந்து கலைமுனி கமண்டலத்தினின்றுங் கடுகியோடிவருங்காவிரிகடந்து, வையகமனைத்தும் வாழ்த்தியேத்தும் வாதவூர் அண்ணல் வள்ளற் பொருட்டு வளமுடனெழுந்த வைகையைத் தாண்டி, தமிழ்மலை தணந்து தாவிப்பாயும் தாமிரபரணித் தனிதீரத்துச் சிந்துபூந் துறையைச் செவ்வேயடைந்து வீற்றிருந்தனர்.

நமது சித்தரைப் பிரிந்ததனாலுண்டாய பெருந்துயர் தந்தைதாயர் மனத்தைவிட்டு ஒருநிமிடமும் நீங்கியதில்லை, புதல்வரைப் பிரிந்து புலம்பலையாதாரும் பூவுலகிலுண்டோ? கண்ணிலான் கண்பெற்றிழந்தான் என உழன்றார். எமது அருமந்த பெருந்தவச்செம்மலை என்று காண்பேமென வேங்கினர். என்செய்வேம்! என்செய்வோம்! எனவேங்கி இரங்கினர். மேலைப்பாளயத்திற்கு வந்து அங்கிருந்து பற்பல இடங்கட்குச் செல்லப் பலபல நண்பரைவிடுத்துத் தேடித்தேடித் தேடொணாத் தேவனைக் காணாது கலுழ்ந்தனர். இன்னது செய்வதென்றறியாது ஏங்கியிருக்கையில், பலவடியவர் புடைசூழச் சித்தரானந்தர் திருவுருபாமலையெனும் குறுக்குத்துறைக் குமாரப்பெருமான் திருக்கோயிலில் வந்தெழுந்தருளியிருக்கின்றாரெனச் சிலர் வந்து சொல்லிய தெள்ளமுத வாசகத்தைச் செவியிலேற்றுச் சிந்தை மகிழ்ந்து பூரித்தெழுந்து தாய்தந்தையர் உடனே சூழ்ந்த சுற்றத்தவருடனே போந்து கண்ணாரக்கண்டு கழிபேருவகைகொண்டு கருணையமுதையுட்கொண்டு கருணைக்கடலாகிய கந்தன் கடாக்ஷத்தைக் கவிகளாற் கழறினர். "பிரிந்தவர்கூடினாற் பேசலாகுமோ" என்ற வண்ணம் இவர்கள் கொண்ட

மகிழ்ச்சியின் றிறத்தினை யாவரே புகலவல்லார்? இங்ஙன மகிழ்வடைந்த மாதாபிதாக்கள் சித்தானந்தரை யணைத்துக்கொண்டு பேரின்பமானமுற், சேர்ந்தனர். ஒரு பத்துமாத முதரத்திற் றாங்கி யின்றெடுத்த பெருந்தவச் செல்வியாகிய அன்னையார் தன்னிரு கண்மணியை சித்தரை யருகிருத்தி மாவுரியை யகற்றி வெள்ளாடை யுடுக்கச் செய்து பின்வருமாறு கூறி யிரண்டு வரங்கள் வேண்டுவாராயினர்.

என்னுருயிர் மைந்தனே! என்னருமைக்குழந்தாய்! நீ இங்ஙனம் போலான பெரும்பதவியை யடைவாயென் றறிந்தே நினக்குக் கல்விபயிற்றாது விடுத்தேம். நீயும் ஓதா துணர்ந்தனை. திருவருட்பேறுபெற்றாய். நின்னாலே நமது குலமனைத்தும் நலப்பெறுவதாயிற்று. ஆயினும் சிலகாலத்திற்கு முன்னர் கோபால சித்தர் என்பா ரொருவர் தாய்சொற்கடந்து ஆசாரியரையடைந்து அனுக்கிரகம் பெற்றும், பிறருக்குபதேசிக்கும் பேறு சித்தியாகாது கவன்று ஆசிரியரையடுத்து வினவ முன் பரிசுணர்ந்த அவர் குருநாதன், நீ யன்னை யுத்தரவை முன்னலட்சியஞ் செய்தனையாதலின் விப்பரிசுபெற்றனை. இப்போதுன் அன்னை திருவாரூரிலே அந்தண மாதாகப் பிறந்துள்ளாள் ஆங்கெட்டியவட்குப் பணிபலபுரிந்து சாபவிமோசன மடைந்து துயரொழிவாயாக எனக்கூறக் கேட்டு அவ்வாறே ஆரூர் அடைந்து அன்னையைத் தெரிந்து பணிபல புரிந்து அவளனுக்கிரகத்தால் சித்திபெற்றார் என்னுஞ் சரிதத்தினை நீயறிந்ததில்லையோ. திருவொற்றியூரின் கண்ணே சிவலிங்கத் திருவுருக்கொண் டெழுந்தருளியிருக்கும் தவராஜசிங்கமாகிய பட்டினத்துச் சுவாமி

கள் தமது தாய்க்கடன் கழிப்பக் கருதிப் பிறவிடம்
போகாதிருந்துசெய்தபி னகன்றது வெள்ளிடையன்
றோ? சர்வசங்கப்பரித்தியாகமான சந்நியாசியாசிரமம்
பெற்றுத் தந்தையும் வணங்கப் பெறும் முனிவர்களும்
தாயைக்கண்டால் அடியற்றபனைபோல் விழுந்து பணி
வரன்றோ? ஆதலின் நீயென் சொன்மறாது எனக்குரி
மையுடன் செயற்பாலனவாகிய கடன்களையெல்லாம்
செய்யவும் மற்றவர் போல உலகத்தோ டொத்துவாழ
வும் வேண்டுகின்றேன். நம்மரபு விளக்கியதனால் நினது
தீவிரபக்குவஞ் சிறிதுங் குறையாதெனக் காண்பாய்.
ஆனதால் இவ்விருவரமு மெனக்குத் தரல்வேண்டும்.
என்று பரிவுற்று விருப்ப அதுகண்ட நமது சித்தநா
தர் திருவருளிருந்தபடி யிதுவாமென்று சிந்தித்து
மலர்முகத்தாற் றப் திருவுள்ளத்தை யறிவித்தனர். இவற்
றையெல்லாம் உடனிருந்து அறிந்த பிதாவும் மாதா
மகரும் பிறரும் பெருமகிழ்விற்றிளைத்தனர். பன்னா
ளருந்தவம் புரிந்து பெற்ற திருமகன் வந்ததும்
தனக்கு வரமிரண்டு தந்ததும் மாதாவுக்கு அளவற்ற
இன்பத்தை வளர்த்துக்கொண்டே வந்தன.

சின்னாட் கழியக் கொல்லம் ஆண்டுஆயிரத்தொன்
பதில் கடகரவி இருபத்து நான்காந்திகதி புதவாரத்
தில் அன்னையார் அம்பிகை திருவடி நீழலிலமர்ந்
தனர். அதுகண்டு சித்தமூர்த்திகள் உத்தரகல்பவிதிப்
படியே யானுமிட்டதீ மூள்க மூள்கவே யென்ற வண்
ணம் உத்தரகிரியை யனைத்துஞ்செய்து முடித்துப்பல
பல தான தருமங்களையுந் தந்து சின்னாளிருந்து பின்
னர்த் திருக்குருகூரினுக்கெழுந்தருளினர். தந்தையா
ரும் மாதாமகரும் தங்கைமாரும் பின்தொடர்ந்தனர்.

அக்குருகூரில் குணதிசையில் ஆற்றூரில் அந்தணர்
குலத்தில் பரிபக்குவமடைந்திருந்த சுந்தரசாஸ்திரிகள்
என்பார் ஒருவர் சித்தரைக்கண்டு அனுக்கிரகம்பெற்று
அனுபூதிச் செல்வராயினர். சித்தமூர்த்திகள் உலகப்
பற்றொழிந்து நிற்குந் திருவுள்ள நிலையை யறியாத தந்
தையும் மாதாமகரும் பிறரும் சித்தர்க்குத் திருமண
முடிக்கக் கருதி அதற்கு வேண்டுவ செய்யத் தொடங்
குகையில் அதுகண்ட சித்தரானந்தர் தமது பிதாவை
யும் மாதாமகரையும் நோக்கிக் குமரக்கடவுள் கருணை
கூர்ந்தால் இக்காரிய மெனக்குச் சம்மதமென்று கூற,
அனந்த கல்யாணகுணனாகிய அறுமுகக்கடவுள் அவ்
விருவர் கனவிற்றோன்றி இப்போது விவாக முயற்சியை
யொழிமின். சின்னாட் சென்றபின் மாதாவுக்குக்கொ
டுத்த வாக்குப்படியே யாம் முன்னின்று மணம்புரிவிப்
போம் எனக் கட்டளையிட்டனர். கனவின் காட்சியை
யுணர்ந்தவர் திருவருள் நடத்தியவாறே நடக்கும் நம்
மாலாக்கப்படுவ தொன்றின்றே யென்று வாளாவிருந்
தனர்.

முன்னர் அனுக்கிரகம்பெற்ற சுந்தரசாஸ்திரிகள்
ஞானசித்தோபாக்யானம் என்றதொரு நூலியற்றி யரங்
கேற்றிப் போற்றித் தமதுறைவிடமாகிய ஆற்றூருக்
குச் சித்தரை யழைத்துச் சென்றனர். ஆற்றூர்
சென்று, சமயங்களெல்லாங் கடந்து தத்துவாதீத
சொரூப சச்சிதானந்த நடராஜமூர்த்தி மகா சந்நிதா
னத்திலே வைத்துச் சங்கற்பித்த சித்தி நிறைவேறும்
வரையில் சித்தரானந்தர் யாத்திரை சந்நியாசமாகக்
கல்லாடை தரித்துக்கொண்டனர். செங்காவியுடை
புனைந்த மெய்ஞ்ஞானச் செல்வராகிய சித்தர் அந்நகரி
லெழுந்தருளிய பரமகருணாநிதியாகியசோமேசப்பெரு

யானுக்குத் திருத்தேரொன்று செய்விப்பது கருதி அந்நகரத்திலும் அடுத்த பிறநகரங்களிலும் பிடியரிசிக் கலயம் போட்டுவித்துப் பொருள்சேகரிக்கத் தொடங்கினர். அதுகண்டு பொறாமைப் பெட்டகமாகிய மூக்காணிவாசிகள் சில்லோர் திருப்பணியைப் பழித்து மறுத்தனர். தம்மைப் பழித்ததைச் சிறிதுங்கருதாத சித்த பெருந்தகையார் சிவபணிக்கிடையூறு செய்த மையின் மிகச்சினந்து சோமேசர்மீது

மூக்காணி தனிலமரு மாந்தர்களே நீவிர் [யாதீர்
முனுமுணெனச் சிவனடியார் தம்மைமொழி
இக்காணி யிற்றிருவு யிருப்பதினி யில்லை
யென்செயலா மாறுபழ மேருவதுந் திண்ணம்
எக்கா லத்திலுமடியர்க் கிடுக்கண்விளை கின்ற
வீனர்களுக் கறிவுறுத்து மெங்கைசோ மேசன்
பக்கல்வளர் தருசோம சுந்தரியி னருளைப்
பரவுவருக் கருள்செய்யும் பரமசற் குருவே.

எனுந் தொடக்கத்துப் பாவைப்பாடிப்பரவினர். "பெரியோர்கள் திருவுள்ளம் பேதித்தாலெப்பொருளும் பேதியாதோ" என்ற வண்ணமே சின்னாளைக்குள் அவ்வூர் நதிப்பெருக்கால் கேடுற்றது. வெள்ளத்தால் நஷ்டமடைந்த பல கிராமத்தினர் இராஜாங்கத்தினர்க்குத் தெரிவித்துக்கொள்ள அவர் ஆற்றூராருக்கன்றி மற்றைய கிராமங்கட்கு அனுகூலஞ்செய்தனர். அரசன் செய்வதும் ஈசனருள்வழிபோலும். அப்பால்சேதுக்குவாய்த்தான் திருக்கரையை யடைந்து கற்பசாதனம் பயின்று கொல்லம் ஆயிரத்து அறுபத்துமூன்றாமாண்டு மகரமதிவரை யதன்வழிநின்றார். இன்னனம் நிகழுங்

கால அழிதற்பாலவாகிய பயன் சில கருதிப் பல்லுயிரைச் சேதிக்கும் சில்லோர் புரியும் யாகங்களைப்போலாகாது நவகோடி சித்தர் அகத்தியர் வசிஷ்டர் கௌசிகர் முதலிய சைவ முனிபுங்கவர்கள் பரமசாயுச்சிய கற்பகத்தருபோலிருந்து பல்லுயிரையும் பாதுகாக்கும் பரமேஸ்வரியின் திருவருட்பெருஞ்செல்வத்தினை யடையக்கருதிப் புரியும் புவநாம்பிகையாகம் செய்துபோற்றத் திருவுளங் கூர்ந்து பொருணைநதி தீரத்திலே பொற்பமைந்த நற்காவணமொன்று அமைத்து அதில் வேதிகைபீடம் யாககுண்டமுதலிய வெல்லாஞ் சமைத்து, தோரணங்க ளைட்டி மேற்கட்டி முதலான அலங்காரஞ் செய்து தருப்பைமாலை புட்பமாலை மிகவுந்தூக்கி விளக்கமாக்கி யாக திரவியங்களைச் சேகரித்துச் சர்வதாரி யாண்டு சித்திரை பௌர்ணமி யன்று யாகந் தொடங்கி இரத்தின கசிதமாகிய பீடத்தின்மீது சர்வலோக நாயகியாகிய சாம்பவியாம் புவனம்பிகைத்தாயினை எழுந்தருளுவித்து வேதபாரகர் சூழ்ந்து நான்மறை முழங்கக் குண்டத்தருகே வீற்றிருந்து சாத்திரவிதியில் வழுவாது யாககைங்கரியத்தினைச் சித்தமூர்த்தி முடித்தனர். இஃதே பிரதமயாகம். அடுத்தவாண்டில் தாம்பிரபரணி சங்கமத்தில் இரண்டாவது யாகமும், சொர்க்கப்பழங் கரை கௌதமர் கங்கைத்துறையில் மூன்றாவது யாகமும் சிறப்பாக நடத்தியருளினர்.

இவரிவ்வாறு யாத்திரை கல்லாடை புனைந்து யாத்ராதிபதியாகி யிருக்குங்காலத்தில் தங்கையாகிய நங்கை காந்திமதியம்மையைக் குலசேகரம் பட்டினத்தில் நல்லொழுக்கத்திற் சிறந்த இருளப்ப பிள்ளைக்கு விவாகம் புரிவித்து மணமகளுடன் யாத்ராமகராகிய

வயோதிகப் பெரியோரும் குலசேகரம் பட்டினம் சேர்ந்தனர். சேர்ந்து சித்தரானந்த செல்வரை என்று காண்பேம் எனக்குரியகாலஞ் சமீபித்துவிட்டதே யென்று ஏக்கம்பெரிதுமுடையாராயினர். உள்ளவாறுள்ளுவோருள்ளியாங்கருளும் வள்ளலாராகிய நமது சித்தமூர்த்திகளும் அஃதுணர்ந்தவராய்க் குலசேகர பட்டினஞ் சென்று மாதாமகரைக் கண்டு மகிழ்வித்தனர். மழையை நோக்கிய பயிர்போலிருந்த மாதாமகரும் சித்தர் வரவுணர்ந்து கண்டு களிகூர்ந்து யான் பெற்ற பேறுயார் பெறுவார்? இற்றைய தினந்தான் யானிவ் வுலகவாழ்வை நீத்துச் செல்லுங்காலம். எனக்குரிய சமாதிக்கிரியை யனைத்தும் செய்து முடித்தருள்க என்று கூறிச் சிவசாப்பிராச்சிய மடையப் பெற்றனர். "அன்பினில் வியப்போ ஐயன் அருளினில் வியப்போ"? என்ற வண்ணம் மாதாமகர் மெய்யன்பைத் தான் துதிப்பேமா? சித்தமூர்த்திகள் திருவருட்டிறத்தைத் தான் றுதிப்பேமா? இரண்டையும் போற்றலே கடமையாம். நமது சித்தமூர்த்திகளும் மாதாமகருக்குப் பரிபூரண சமாதி சிறப்பாகச் செய்வித்து அருமைத் தங்கைக்கு அனேக ஆசிகூறி அங்ககன்றுசேதுக்கு வாய்த்தானுக்குச்சென்றருளினர்.

இவ்வாறு நமது சித்தமூர்த்திகள் எழுந்தருளியிருப்பதைத் திருக்குருகூர்த் திருநகரில்வேளாண்குலசிரேட்டராகிய முத்தப்பிள்ளைஎன்பவர் "சினமடங்கக் கற்றாலுஞ் சித்தியெலாம் பெற்றாலுமனமடங்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே" என்பவராகலின் மனமடங்குமாறு பலநாட் டவம் புரிந்தும், குழியிற் சமாதி கூடியு மனமடங்காது வருந்திச் சித்தமூர்த்திகளை

அற்புதச் செயல்களை முறை முறையாகக் கண்டுங் கேட்டு முள்ளவரானதால் இப்பெரியாரலன்றி நம்மெண்ண முற்றாதென்பது திண்ணமெனக் கருதிச் சேதுக்கு வாய்த்தானையடைந்து சித்தர்பெருமானை வணங்கிக் குறையிறந்து வேண்டினர். எமது சித்தமூர்த்திகளுங் பரிந்து அவருக்குபதேசம் புரிந்து அவர் வேண்டியவாறு அருளியோக மார்க்கத்தில் மனையை மெய்துப்பேறு கொடுத்துத் திருக்குருகூருக்கு அவருடனெழுந்தருளி அவர் மாளிகையிலே சிலநாளுறைவாராயினர். இன்னண மிருக்குங்காலத்தில் அனுபவ வழியாலும் சித்தர் பெருமையை யறிந்துணர்ந்தமுத்தையபிள்ளையென்பார் ஒருநாள் சித்தமூர்த்தியை வணங்கிக் கூறுவாராயினர்.

சிவஞானத் தபோதனரே! இத்திருக்குருகூரானது முற்காலத்து நவலிங்கமாபுரம் என்னும் பெயருடையது. பன்னொருவுருத்திரர்கள் பரமகருணாசாரியராகிய பரமேஸ்வரனை வழிப்பட்டுய்ந்தபதி. மயில்வாகனேசன் றலம் நான்கைமாற்றியது போல இத்தலத்தினையும் மாற்றியுள்ளார். இதுகலிகால விபரீதமேயாம். இது முன்போல விளங்க வருள்புரியவேண்டுவதுடன் எண்ணியபொழுதே யெல்லாஞ் செய்யவல்ல சித்தர் பெருமைவிளங்கிச் சிறக்கவும், பதினெண் சித்தர்கள் ஆலயம் பிரதிட்டித்து நித்தியநைமித்திய திருவிழாச்செய்தும் யோகாப்பியாச நிலயம் சித்தர்பாடசாலை சாத்திரக்களஞ்சியம் வைத்தியசாலை முதலியதாபித்து நடத்திவரவும் தேவரீர் திருவுளம் பற்றவேண்டுமென விண்ணப்பித்தனர். இவையனைத்தையும் செவி சாத்திய சித்தர்பெருமான் ஐய! எல்லாம் வல்லசித்தர் பெருமை

யியம்ப முடியுமோ சித்தராலயம் செய்வது நமக்கு முடன்பாடே ஆயினு நாங்கொண்ட புவனுப்பிகையா கம் முற்றிய பின்னர் சித்தராலயமும் பிறவுஞ்செய்து முடிப்பேம், திருவருள்கூட்டி முடிக்குமென்று திரு வாய்மலர்ந்து அனுக்கிரகஞ் செய்துவிட்டுத் திருமந்திர நகரமென்னும் தூற்றுக்குடியி லுறைகின்ற தந்தையா ரை நோக்கியவண்சென்றருளினர். சித்தர் பெருமை முற்றுங் கேட்டுணர்ந் தவராகிய பாஞ்சாலகுறிச்சி தளவீரராமபாண்டியதுரை யவர்கள் சித்தமூர்த்தியைத் தரிசித்துப் பணிந்து அருள்பெற்றனர். அத்துரையின் தம்பியும் முருகக்கடவு ளுபாசகருமாகிய சுப்பிரமணி யத்துரை யென்பாரும் வணங்கித் துதித்துச் சிந்தானந் தக்கும்மி சித்தரத்நகரம் முதலிய பாமாலைகளால் சித்த ரை யலங்கரித்துத் துதித்துவழிபட்டுஅனுக்கிரகம்பெற் றநன்றார். இவ்விருவர்க்கும் திருவருள் புரிந்த பின் னர்ச் சித்தமூர்திகள் சித்திராநதி சூழ்ந்த கயத்தாற்றி னுக் கெழுந்தருளினர். அவ்வூரில் விவிலிய மார்க்கத் தினராய் அதிலும் உபதேசியாய்ச் சின்னுளைக்கு முன் னிருந்து கொண்டிருந்த முத்தையபிள்ளை யென்பா ரொருவர் பூர்வ புண்ணியத்தால் சித்தமூர்த்தியைத் தரிசித்த மாத்திரத்துத் அச்சமயத்தினின்று நீங்கிச் சிவதீட்சை பெற்றுத் தம்முறவினரையுந் திருத்திக் குருநாதன்மீது பலபாமாலைசாத்திக் கௌமார பத்தி யிற் சிறந்தவராகி விளங்கினர். மறுபடியும் சித்தசுவாமி கள் திருமந்திர நகர மடைந்து தன் தந்தையினை ஆசி ரியராகக் கொண்டிருந்த வைக்கீல் ஆறுமுகப்பிள்ளை வீட்டில் வீற்றிருக்கையில் கடம்பூர் ஸ்டேஷன்மாஸ் டர் இராஜா ராவினுக்கு நருக்குச் சல்லியத்தாற் கண்டிருந்த முன்பின் னடைப்பானென்னு மரியபிணி

யை விபூதிப் பிரசாதத்தால் நீக்கி யருளி, திரி மலை தரிசனார்த்தமாகப் பிரயாணப் பட்டுச் செல்லு கையில் அகத்தியர் வரத்தாலவனியில்வந்து வடமொழி தென்மொழி மகோததிபருகித் துறைசையாதீனத்துச் சித்தாந்தபானுவாய்விளங்கியதிராவிடபாஷ்யகாரரான ஆசிரியர் சிவஞானயோகிகள் பாடலேற்றுள்ள செப்ப றைச்சேர்ந்துபதிகம்பாடி வெள்ளி மலையை யடைந்து அங்கு வாழ்ந்துவந்த பாதேவயோகி யாருக்குக் கிரு பைபாலித்து அவரால் சதகம் மாலை முதலிய பிரபந் தங்கள் ஏற்று, எல்லையில் புகழ் வாய்ந்த நெல்லைபைச் சமீபித்துக் காந்திமதி யம்மை சமேதரான அனவ ரத நாதருக்குப் பாமாலை சாத்தி, கட்டாரி மங்க லம் கண்டு கனகசபேசனுக்குக் கவிகளியற்றி, தேவர் முனிவர் சித்தராதியோர் திளமுஞ் சூழ்ந்து வாழும் குற்றாலத்தினைக் குறுகிக் குழல்வாயம்மை சமேதரான குறும்பலாநாதர்மேல் பதிகம்பாடி யங்குச் சிலநாள் தங்கியிருந்து, தெய்வச் செந்தமிழ் சிறப்புற் றோங்கிய தென்திருவாலவாயாகிய துவாதசாந்த புரத்தினை நா டிப்போகையில், கொம்மையம்பட்டிக்கெழுந்தருள அங் குச் சமாதியி னின்றும் எழுந்த வாலமஸ்தானைச் சந்தி த்து அளவளாவுங்கால்; சுவாமிகளின் ஆசிரியரியாவ ரென மஸ்தான் வினவியதற் குத்தரமாக சித்தபிரா னருளியவை:—

அடுக்கத் திருவருட் பெற்றுரை யுள்ள
த்து ளன்புவிஞ்சிக், கடுக்கப் பிரபஞ்ச
மாயையெல் லாம்வினைக் காடடங்க, வொ
டுக்கப் பெருமல மோடச்சி வானந்த வோ

தமுவட், டெடுக்கக் கிருபைதந் தான்பச்
சை யாமலை யென்னப்பனே.

தரிக்கந் கருத்துந் தயவும் பொறுமையுந்
தாஞெடைவா, பரிக்கக் கருணையுந் தந்ததல்
லாமன் மலரடிகள், பரிக்கத் தலையும் பரு
கிட வின்பமும் பாழும்வினை, யிரிக்கத் திட
முந்தந் தான்பச்சை மாமலை யென்னப்பனே.

இதனைக்கேட்ட பெரியோர் பரவசமுற்றுச் சித்த பிரான் அற்புதத்தைத் துதித்தகன்றனர். பின்புசித்த நாதர் மதுரையினை யடைந்து மீனாட்சி யம்மைக்கும் சொக்கலிங்கப் பெருமானுக்கும்பாமாலை பதிக முத லிய சாத்தி யவற்றின் பொருளை அங்கொருநாள் சிவனடியார் பலசூழ வீற்றிருந்து பொருள் விரித்து விளக்கினர். இத்தலத்தில், புத்திர மார்க்கப்பிர வர்த்தக பரமத களப கேசரி சண்மதப் பிரதிஷ்டா பனசாரிய ராஜாதி ராஜபாண்டிய மகாராஜ குரு சபண சாக்கியாதி மகாந்தகார நிவாரண ஞானபானு வாய் விளங்கிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் ஆதீன மடாலயத்து மகாசந்நிதானமொருநாள் சுவாமி தரிசனார்த்தமாகச் சோமசுந்தரேசன் ஆலயத்திற்கு வரலும், சித்தமூர்த்திகளைக் கண்டு தமது சேதுவாய்த் தானில் சிலர் குறித்த வண்ணமே இப்போது கண்கூ டாகக்கண்டது மொத்தலி னுவந்து ஆதரம் பெருக அளவளாவி மகிழ்ந்து பலவாறு புகழ்ந்து பேச யா வுந் திருவருட் செயலெனச் சித்த பெருமான் கூறித் திரும்பி மதுரையின் கண்ணே ஒருவேதியர் விருப் பத்தின்படி அவ்வூர் பரிபாலனக் கூட்டத்தொருவ

ராகிய சுப்பராயலு நாயடு மாளிகையிலிருந்தனர். இங்ஙனம் மதுரையம் பதியில் அமர்ந்திருப்பதனை யாவருங்கூறக்கேட்ட முத்துசாமி முனிவர்என்பார் எதிர்வந்து சிலசிலகேட்டிடத்துணிந்தனர்.

ஐய! இவ்வுலகனைத்தும் இயல் பென்பதே சரதம். மஞ்சளுடன் சுண்ணாம்பு கூடின் ஒரு செம்மை நிறம் உண்டாவதுபோல சதுர்பூத கூட்டுறவினில் உயிரென்ப தொன்றுண்டாகும். இதற்கன்னியமாகப் பரமென்பது ஒன்றுஎக்காலத்துங்கிடையாது. இவற்றை முன்னிட்டு ஆராயப் புகுந்தார் உண்மை யறியாதுபல மார்க்கங்களைஉண்டாக்கினர். இவற்றைத்தாபிக்கக் கற்பனையாக வேதாகமங்கள் புறட்டாக வேற்பட்டன. இவற்றை நம்பிச் செபம் தபம் விரதம் யாகம் மூர்த்தி தலம் தீர்த்தம் எனக்கொண்டு இவற்றின் அனுசரிப்பால் பிறப்பொழியு மெனவும் பன்னாள் இவ்வுலகைத்தினமுன்று இறந்தபின் புண்ணியஞ்செய்தார்க்கு மோட்சமெனவும் பாவஞ்செய்தார்க்கு நிரயமெனவும், நம்பி மண்ணில் மாண்டவர் எண்ணிலர். இயற்கையாகவரும் இன்ப துன்பங்களை விவேகத்தால் விசாரித்துத் தீர்த்துக்கொள்ள வேண்டுமேயன்றி வேறொரு கர்த்தாவால் விலக்கிக் கொள்வதென்பது என்று மில்லை. இவையனைத்தும் இங்ஙனமாக, தேவரீர் தலங்கடோறுஞ்சென்று தமிழ்ப் பதிகங்கள் பாடி வருவதும் யாகங்க ளியற்றுவதும் என்னேயோ? என்றனர். இவை யனைத்தையும் சித்தர்பெருமான் பொறுமையாகக் கேட்டு, நன்று! நன்று! நினது அரிய விவேகம் வேங்கையானது புனிற்றாவின் றோல் போர்த்துலவுவது போலவேடந்தாங்கி ஏதேதோ விளம்புகின்றீர், தேகான்ம வாதிகளாகிய

நீர்ச்சுரர் பிதற்றும் உலகாயதமதத்தை நீர்மெய்யென நம்பி மிகமயங்கிக் கிடக்கின்றீர். ஆயினும் இங்ஙனமுமக்குப் போதித்தவர்யாவர்? அதுசம்பந்தமாக நீர்படித்த நூலியாது? எனக் கேட்டனர். முனிவர் உடனே தான் கூறிய யாவற்றிற்கும் பிரமாணமாகச் சில பாட்டுகளை மடமடவெனக் கூறினர். கேட்ட சுவாமிகள் இச்செய்யுட்கள் எந்நூலிலுள்ளன இயற்றியோர் யாவர்? இயம்புதியெனலும், முனிவர் இவையனைத்துந் தானியற்றியுள்ள விஞ்ஞானதீபம் எனுநூலி லுள்ளன என்றமாத்திரத்தே சித்தபெருமான் புன்னகைகொண்டு நினது நூல் உலகத்தில் வழங்கும் முதனூல் வழிநூல் சார்பு நூல் என்பவற்று ளொன்றினும் சேராது பருத்திநூல் சிலம்பிநூல் போன்றதாகிக் கலைவல்லோர் மரபினை யழிக்க வேற்பட்டதாகத் தெரியவருகிறது எனக்கூறி மேலும் சிலசெப்பத் தொடங்கினர்.

தேகான்மவாதி பிராணான்மவாதி கரணான்மவாதி முதலிய பற்பல சமயங்களைப் பூர்வபட்சஞ் செய்து உண்மையினைச் சித்தாந்தஞ் செய்யும் சிவஞான சித்தியாரென்னுந் தொன்னூலொன்றே முதல்வ னுண்மையினை நிலைநாட்டும். சித்திக்குமேற் சாத்திரமும் சிவத்திற்குமேல் தெய்வமு மில்லை யென்பது முதுமொழி. இதுமாத்திரமோ, "பாதி விருத்தத்தா லிப்பார் விருத்த மாகவுண்மை—சாதித்தார் பொன்னடியைத்தான் பணிவ தெந்நாளோ" எனவும், "பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறிய சித்தியிலே—யோர்விருத்தப் பாதி போதும்" எனவும் திருவருட் பெருஞ் செல்வர்கள் திருவாய் மலர்ந்தருளினர். இத்தகைய அரிய பெரிய நூலினுக்கு மாறாக நீயேபாடிக்கொண்ட சிலபாக்களைப்

பகர்ந்தனை. இந்நா லுண்மையினைச் சிறிது ஆராய்வோம். இவ்வுகை மியல்பென்றனை. தோன்றலும் கெடுதலும் விகாரமாதலின் விகாரமாதல் இயல்பிற்குக் கூடாது. அங்ஙனம் விகாரமாதலே உலகிற் கியல்பெனில் அவ்வாறியம்புவார்க்கு விகாரத்தின் வேறு மியல்பென்ப தொன்றில்லை யெனப்படும். படவே தோற்றி மாய்கை இயல்பென்பது விட்டுப்போய்த் தோல்வித்தானமாய்முடியும். இனி யியல்பும் விகாரமும் வேறெனவே கொண்டு பூதநான்கும் இயல்பா யுள்ளனவாம் அவை தோற்றி மாய்தலாகிய விவகாரத்தைச் செய்யுமெனின் நன்று சொன்னாய் அவை யங்ஙனந் தொழிலுற்று நிற்குஞ் செயப்படு பொருளாகலின் செயப்படுபொருட்கு வினைமுதல் வேறு வேண்டப்படும் என்க. அன்றியும் மண்ணினிற்கடாதிகளெல்லாந் தோன்றியவுழையேயழியும் பூதகாரிய முடலெனின்? அம்மண்ணுக் குலாலனாற் காரியப் படல்போல இவ்வகிலமு மொருமுதல்வனால் காரியப்படும். உடம்பினுள்ள வாயு பூதநீங்கிடில் உணர்வு நிகழா தெனின், பூதக் கூட்டத்தி னொன்றானுங் குறைவின்றிக் கிடக்கும் உறக்கத்தினும் அறிவு நிகழ்வதன்று ஆகலின் உடம்பறியுமாறு எங்ஙனம். பின்னும் நீ மறுபிறப்பினை மறுத்தனை. இப்போதெடுத்துக் கொண்ட காயங்கெட்டாற் பின்பு மற்றொரு காய முண்டாம்படி எங்ஙனமெனின்? நனவை மறந்திடுங் கனவில் உம்மை யெடுத்துக் கொண்டு திரியுமுடல் உம்மைக் கூடியவாறு எத்தன்மை யாலோசிப்பீராக. ஒருவன் மூர்ச்சித்து விடத்துச் கரணங்கள் வாயுவிடத் தொடுங்க அவ்வாயுவும் சேட்டைக் கெட்டுப் பின்பு அவன் மூர்ச்சை தீர்ந்தவிடத்து அக்கரணங்கள் சேட்டைப் பட்டாற்போலுமென்றனர், கேட்டமுனிவர் சித்தமூர்

தியை நோக்கிப் பெருமானே! சுவாமிகள் இதுகாறு ங்கட்டளையிட்டதில் ஆன்மா வுண்டெனவும் பரமான்மா வுண்டெனவுஞ் சிறிது ஒருவாறு விளங்குகிறது. ஆயினும் இறைவனொருவ னுளனேல் நங்கரணங்களா லறியப்படாததற்குக் காரணமென்னை யெனக் கூறுவாராயினர். ஆன்மாவினது சிற்றறிவினால் அறியப்பட்ட பொருள்களெல்லாம் நிலைநில்லாத தன்மையென் றறிவாய் ஆனாற் சத்தாகிய முதல்வன் எப்பொழுதும் அறியப்படானோ வெனில், ஒரு காலத்தினும் முதல்வன் ஆன்மாவால் அறியாதிருக்குமாகில் இவனுக்கு முதல்வனைக் கொண்டாவதொரு பிரயோசனமு மில்லாமை யுண்மையாம் ஆனால் அறியப்பட்ட தெல்லாம் அசத்தென்று சொன்ன தென்னையெனில் அனாதியாய் வருகின்ற பசுபோதமாவது ஒருபொருளை இந்திரியங்களாலே முற்பட்டுப் பொருந்தி அதுவதுவாகச் சுட்டி அறியப்படும் பொருள். அசத்தென்றது அந்த முதலவன் சுட்டறிவால் அறியப்படான். அன்றியும் நாதாந்தமான பாசஞானத்தாலும், இவை நீங்கின விடத்து விரிந்த அகம்பிரமமென்னும் பசுஞானத்தாலும் முதல்வனை அறியக்கூடாது. முதல்வனுடைய அருண்ஞானத்தினைப் பொருந்தி அதுகாரணமாகத் தற்காட்சி விளக்கமுற்ற தன்மையினாலே பழைய சிற்றறிவைவிட்டு அகம்பிரமஞானமன்றி சேர்ந்து திருவருளிலே அன்புடன் அதற்கு மேலான முதல்வனிலே கூடி நிற்பன் என்றனர். இன்ன வண்ண நஞ்சித்தனை ரியம்பிடக் கேட்ட மூத்துசாமி முனிவர் சொல்லுவர், ஞான மூர்த்தியே! சாதனங்கள் விஷயத்தில் சந்தேகஞ் சனிப்ப தென்ன, சித்தர், இறையவனை யடைதற்குச் சரியை யாதிகளே

சாதனங்கள் எனவும், சரியையானது முதல்வனுக்குத் தேகத்தைச் சிவார்ப்பிதஞ்செய்தலும், கிரியையானது இந்திரியங்களைச் சிவார்ப்பிதஞ் செய்தலும், யோகமானது கரணங்களைச் சிவார்ப்பிதஞ்செய்தலும், ஞானம் ஆன்மாவாகிய தன்னைச் சிவார்ப்பிதஞ் செய்தலுமாம். இந்நான்கும் அரும்பு பூ காய் கனி போலவாம். இவையே சாதனங்கள். சாதனமின்றி யொன்றைச் சாதிப்பாருலகி லில்லை. இவைபோன்ற சாதனங்களின்னம் ஆன்மாக்களின் பக்குவத்திற் கேற்றவாறு பலவுள. மற்றுமிவற்றின் விரிவையும் இவை யத்தியாவசிய மென்பதையும், உடக்கு நேர்ந்திருக்குஞ் சகல சந்தேகங்களையும் நிவர்த்தி செய்துகொள்வதற்கும் ஏற்ற ஞானசாத்திரம் தருக்கசடிலமாயுள்ள சிவஞான சித்தியே யாம். ஆண்டுக்காண்க. பெரியோய்! மற்றொன்று விரிக்குதும் கவனிக்க. இரதகஜ துரக முதலான அந்தக் கரண நான்கு பணிவிடைக்கு இணங்கி நிற்கவும், ஆறு ஆதாரங்களினும் மூன்று மண்டலங்களினும் அதிகாரம் செல்லவும், தெசவித நாதங்கள் முழங்கவும் சிங்காசன பதிகளாய், திக்குகளிலும் திக்குகளின் முடிவரையிலும், பூரணச்சந்திரனாகிய குடைநிழற்றவும், வசந்த காலம் வர மலரிலிருக்கின்ற பரிமளம்போல இன்ப மானது இதயத்தில் குடிகொள்ளும் வகை எப்போதுங்கெடாத சிவராஜயோகத்தை யுடையராகி இந்திராதி தேவர்கள் விஜயஜயவென்று மங்களமொழிகூறவுங்கொலுவீற்றிருக்கின்றசித்தர்களின் பெருமை யாவரேசொல்லவல்லவர். அஷ்டமாசித்தியுடன் ஞானசித்தியையும்யடைந்தவரிவர்களேயன்றோ? விந்தியமலையினை யடக்கி விரிந்த கடலினையுண்டு விளங்குபூமியினைச் சமத்துவஞ் செய்தார் சித்தரன்றோ? இவர் வழிவந்தார் ஏழிருகோடி சித்த

ரென்பது உலகப்பிரசித்தியன்றோ? இத்தகையரா லன்றோ இவ்வுலகில் மணிமந்திர ஔடத நூல்கள் எண்ணில நிலையுற்றன. இந்நூல்களின் அருமையினையும் பெருமையினையும் யாரேயறிந்து கூறவல்லார் அம்மம்ம! இச்சித்தநூல்களில் விசேட ஆராய்ச்சி நம்பிக்கையுடன் செய்த பெரியார் திரிகால வர்த்தமானமுங் கூறச் சிறிதுந் திகைப்பரோ மண்ணிடை மறைந்து கிடக்கும் பொருளை வெள்ளிடை மலைபோல் விளங்க வெடுத்துக் காட்டப் பின்னிடைவரோ? இஞ்ஞானச் செல்வரையன்றோ மந்திர மாமுனிவரென தெய்வத் திராவிடவேதமாய திருப்பாட்டின் கொடித்தான்மலைப் பதிகத்துத் திருவாரூர் ஆளுடைய நம்பி யருளிச்செய்தனர். இச்சித்தகணச்சிறப்பை மனமார வெண்ணி வாயாரப் பாடி வாழ்த்தி வாழ்ந்தார் திருவருட் பெருஞ் செல்வராகிய தாயுமான சுவாமிகளே யாம். இத்தகையர் அனுசரித்து வரும் சாதனங்களைப் பொய்யென நீர் சொல்லத்துணிந்துகருப்பினைக் கயக்குமென்பாருடன்கலந்தனை யென, இங்ஙனம் சொல்லி முடித்திடலும் முத்துசாமி முனிவரும் அங்கிருந்த அன்பர் பலரும் ஆனந்த மடைந்து ஞானிகடம் விவகாரம் நல்லுலகி லுபகாரமா மென்பதற்கேதுவாகச் சித்தர் சம்பாஷணை சிறப்பா முடிந்ததென களித்துச் சித்தர் கருணையிற் றிளைத்துவாழ்ந்து வந்தனர்.

அன்னகாலத்து யாககாலம் சமீபிக்கவும் திருவாலவாய் வடபாங்கர் வைகையினடுவே யொருமகச்சாலை நான்காவது யாகத்தின் பொருட்டு நிருமித்து அடியர் தெரிவிக்கச்சித்தசுவாமிகள் திருமலைச்சின்மயானந்தர், சுந்தரசாஸ்திரிகள் முதலிய பல்லோருடன் சென்று அந்தர துந்துமி வானில் அமரர்கள் ஆர்த்திடல்போல

மறையோர்கள் சாமவேதத்தினை நமகஞ் சமகமுடன் பரவயாகம் நடத்திவருங்கால் மூன்றுங்காலத்தில் முத்துசாமி முனிவரும் வந்துசேர்ந்தனர். புவனாம்பிகைப் பீடந்தனக்கு அபிடேகவலங்காரதீப தூபமுறைப்படி செய்து அவியளிக்குந் தருணத்தில், சாத்திபுரம் சுதரிசனமையர் குழந்தையைச் சர்ப்பங் கடித்திறந்ததாகவும் இரண்டு நாள்வரை வேண்டிய சிகிச்சைகள் செய்தும் தீராததாகவும் தகனம்பண்ணிவிடுவதே கடனெனவும் தீர்மானித் திருக்கையில் ஒரு வேதியன் ஓடோடியும் வந்து வேள்விசாலையினை யடுத்து சித்தமுனிவர்பால் தெரிவிக்க அவர் தேவிகருணை யுளதேல் பார்ப்பமெனக்கூறி ஐய அவபிருதுஸ்நான மாடிடினன்றி யங்குவாரோம் சித்தசாத்திரப்படி யொன்றுரைப்போம் தெளிதிரென்று சமீபத்திருந்த சுந்தரசாஸ்திரியினை யனுப்பி யழைத்து நீவிர் சென்று பிரம்புகொண்டு அக்குழந்தையினை யோரடி யடிப்பீராக அது தடிக்குமேல் அக்குழந்தையினை யிங்குக் கொண்டுவருக வெனக் கட்டளை யிட்டனர். அவர் அங்ஙனமே சென்று மயானஞ் சேர்ந்து தீயிடத்தேவைப் பதற்கிருந்த பிணந்தன்னை யடிக்கத் தடித்ததனைக்கண்டு அவ்வுடலைச் சித்தர் சன்னிதானத்தில் கொண்டுவரவும் சித்தர் பச்சைமாமலைப் பண்ணவனைப் பணிந்து

நச்சராவிட நாசமாகிட நன்கருள்புவ
னாம்பிகை, யிச்ச தனெழுந் தலவி டும்படி
யேநடப்பது முண்மையேற், பச்சை மாமலை
பண்ண வன்பரி வோடெமக்கருள் பான்மை
யி, னிச்ச யந்தனை யுலகெ லாங்கண்டு நினை
ப்பதற் கையமில்லையே.

என்ற பாடலைப் பாடியவுடன் குழந்தை யுயிர் பெற்றெழுந்தது. இவ்வதிசயமுணர்ந்த யாவரும் சித்தபெருமானை வாழ்த்தி யேத்திவணங்கிக் கொண்டாடினார்கள். முத்துசாமி முனிவரும் தெய்வமுண்டு சனனமுண்டு, வேதமுண்டு ஐயமில்லை ஐயமில்லை யென்றும் தானுரைத்த நூலனைத்தும் பொய்பொய் எனக்கூறிச் சித்தர்மீது பஞ்சரத்தின மாலிகைப் பாடி சரணாகதி யடைந்து அனுக்கிரகம் பெற்றுய்ந்தனர். பூர்வத்தில் புறப்பியத்திலும், மருகலிலும் செட்டிமகன் விடந்தீர்ந்தமை நூலிற் கண்டு மகிழ்ந்திருந்தோம். இன்று கண்ணாரக் கண்டு களித்தோமென யாருங் கழறினர். இவ்வுண்மை எங்கும் பரவச்சனத்திரள் கூட்டம்கூட்டமாக வந்தடைந்திடக்கண்டு சித்தர் யாருமுணராவகை வெள்விசாலையிலெழுந்து வயிரவ பூசனை முடித்துக்கொண்டு திருவாலவாய்க்கு எழுந்தருளி யங்குநின்றும், குண்டோதர னிமித்தம் சொக்கலிங்கப் பெருமான் தமது சடைச்சுருளை யவிழ்த்துக் கங்கையை விடுத்துத் திருவிளையாடற் புரிந்த சுருளிமலைக்கு சென்ற பார்க்கத்து இராசப்பநாயக்கனூர் சமீந்தாரணி வந்து தொழுது வேண்டிய தந்துபசரிக்க அவ்வுபசாரமேற்றுச் சுருளிமலையையடைகையில் அச்சுருளிமலையில் பலநாளா யமர்ந்துள்ள கருணானந்தரென்னு நாமத்தைக்கொண்ட வொரு பெரியர் சித்த நாதரை நெடுநேரமாகப் பார்த்துக் கொண்டு பின் தொடர்ந்து நடந்துவருகையில் சித்தமூர்த்திகள் கையிலணிந்த ஜெபமாலையைச் சிலநேரமட்டும் மாணிக்கமாலை யென்றே நினைத்திருக்கச் சிறிது நேரத்திற்குப்பின் அதுரசமணி யென்றும் சித்தரின் தேககாந்தியால் செகப்புநிறங் காட்டியதென்றும் தீர்மானித்துக்கொண்டு சமீப நெருங்கி யளவளாவித் தங்கள்

கேத்தி வித்தகைய பிரகாசமுண்டாகுங் காரண மெது கொண்டென வினவ வதற்குச் சித்தமூர்த்திகள்,

திங்கள் சூடியோன் றிருவருளைத் தின
ந்தினந் துதிப்போம், மங்கை மார்களைத்தா
யென மனத்திடை மதிப்போம், கங்கை யா
டிப்பிற் காலையி, லகத்துள்வந் துதிப்போம்
பங்கமே தெமக்காதலா லுடல்பள பளப்பே.

எனக்குறிப்பிட்டனர். அதுகேட்ட கருணையானந்தர் தேகமு நிழலும்போலச் சிலபகலமர்ந்து சமயமறிந்து சித்தநாதரைப்பார்த்து எத்தனையோ காலமாகச் சாரணைமுடித்த ரசமணிக்கித்தகைய மகிமை வராததற் கென்ன காரணம் சற்றுத் தயைபுரிய வேண்டுமெனப்பிரார்த்திக்க, சித்தநாதர் இதுவரையில் முடித்த முறைகளைத் தெளிவாச் சொல்லுகவெனக் கருணானந்தர் கிரமமாகத் தான்முடித்த வனைத்துஞ் சொல்ல அவர்மீது கிருபை கூர்ந்து,

உலகமெலா மூப்பின்மய மூப்புவதோ
வப்பின்மய முணர்த்துஞ் சித்தர், பலகலை
யின் பண்பிதுவே மூலிகையி னுஞ்சிறிதாம்
பயன்மிக்கில்லை, யலகிலா நீசர் விந்துக் காகி
யசா ரணைதமக்கிங் கறிவித் துள்ள, நலமெ
லா மானைக்கல் லுப்பெனநி னைகத்துணர்ந்து
நடத்து வாயே.

என்னுஞ் செய்யுளைக்கொண் டவர்க்குத் தெளிவுறச் செய்து அப்பெரியரையு மழைத்துத் தமது மாணவர்களுடன் ஐந்தாவது யாகத்துக் காரம்பஞ் செய்வாராயினர்.

அன்பர் பலர்சுருளிமலே கயிலாயபுடவியினின்றும் பெருகிவரு மருவி வீழிடத்து வேள்விசாலே யியற்றிக் குருநகை மூர்த்திகட்குத் தெரிவிக்கச் சித்தர்பெருமான் சாலேயிற் பிரவேசித்துப் பொன்பசளும் அவணன் மருபகளும் புகழ்ந்து பணியும் புவனப்பிகைப் பூசனை புரிந்துவருகையில் தமக்கு நேரே மலேயடிவாரத்தில் இடிபோன்ற முழக்குடனே புலி யொன்றின் வரவினைக் கண்டு அருகிருந்தவர் யாருந் தலைவிரி கோலமாய்த் தாண்டி யோடினர். சித்தமூர்த்திகள் இவையைச் சிந்தனையிற்கொண்டு,

> உலகினி லெப்பொருளு முனதுருவமா
> மெனுமறைத ளோலமிடு முண்மை யதனை,
> பலதரமு மெற்கருளும் பச்சைமா மலேமுனி
> வற் பாலித்த வண்ண மறவேன், நிலேதளர
> வேசிறி வருமிந்த வல்லியமு நினதுவடி வெ
> ன்ன நினேவேன், கலேபலசொல் புவனம்பி
> கைத்தேவியே நினது கருணையெவ் விதமா
> மரோ.

எனக் கட்டளையிட்டு வேள்வி செய் நாட்டத்திலே யிருந்தனர். நாலாஞ்சாமத்து வைகறையில் பூசனைமுடித்து அழலி லாகுதியிட்டு யாவுமுற்றிடச் சனத்திரள் வந்து சேர்ந்து இரவுமுழக்கம் கேட்ட விடத்துப்போய்ப்பார்க்கையில் புலி வாய்பிளந்து இறந்துகிடப்பதைக்கண்டு புவனம்பிகை செயலெனத் தேர்ந்துசித்தசுவாமிகளின் மகிமையினை வியந்து அப்புலியின் உரியினை வாங்கிப் பாடஞ்செய்து சித்தர் பெருமானுக்கு ஆசனமாகச் செய்தனர். இவ்வற்புதந் தென்றேயமுழுதும் பரவியது.

குருநூர்ச்சித்தர் அவ்விடத்தை நீங்கி கோம்பை யடைந்து சண்முகவேல் முதலியார் வீட்டிற் றங்கியிருந்து தேவார நகரைச் சேர்ந்தபோது அந்நகரில் கார்வார்வேலை பார்த்துவந்த பழநிக்குமார பிள்ளையென்பவர் சித்தசாமி தாளைவணங்கித் தனது மாளிகைக்கு எழுந்தருளச்செய்து பணிவிடைகள் பலவியற்றிப் பாவினம் பலபாடி யோகநன்னிலை யோர்ந்து வாழச் சித்தமூர்த்தி உத்தமபாளைய முற்றூர். அப் பாளையத்தில் சாத்திரம் பலவாய்ந்தவரும், திருவருளை நாடிக்கொண்டிருப்பவருமாகிய மக்கமீரா லெவ்வை ராவுத்தர் என்பவர் சித்தமூர்த்தியினைத் தரிசித்து அவர்பால்வாய்ந்த அற்புதமகிமைகளைக் கண்டு முறையினால் வணங்கிஅன்பினு ளளவளாவி அடிமையினை யாண்டுகொள்ள வந்த அப்பனே! நான் தனித்து வாழும் கடமலைக் குண்டுக்கெழுந்தருள வேண்டுமென விஞ்ஞாபனஞ் செய்து அழைத்துக் கொண்டுபோய் ஓர் ஆசிரமத்தி லிருக்கச் செய்து தாம்படித்திட்ட அங்கயோகம், முப்பூ, கற்பமாதியவற்றி னோர்ந்திருந்த சந்தேகங்களை நீக்கிக்கொண்டு உண்மைதேறச் சித்தசுவாமி அவ்விராவுத்தர்பொருட்டு கலைஞானதீபம் ஆயிரம் என வொரு நூலியற்றினர், மீராலெவ்வை தனது உடல்பொருள் ஆவிமூன்றினையும் சித்தர்முன் அர்ப்பணஞ்செய்து மயிலாடு பாறைக்குச்சமீபத்திலுள்ள நரசிங்கபுரம், கடம்பன்குளம் நன்செய் நூறு ஏக்கரா நிலங்களைக் குருகூர்ச்சித்த சபைக்கெனக்கொடுத்து விகிர்தி௵ கார்த்திகைமீ ௩௨ சித்தர் பெயரால பத்திரமுடித்தனர். இங்ஙன மாகப் போடிநாய்க்கனூர் வசிக்கும் அன்பர் சிலர் சித்தரைத் தரிசிக்கச் சுப்பராயனுநாயடுவை வேண்ட இவர் விருப்பத்திற் கிணங்கி அவ்வூர் நோக்கிச் செல்லுகையில்,

வாமமார்க்கத்தில் சிலசித்தியடைந்து பற்பல மலைக ளிற் சஞ்சரித்து சித்தநா லுரைத்த பாக முற்றிலுந் தெரிதர வெங்குஞ் சஞ்சாரஞ் செய்தும் கைகூடாது தன்பதியினை யடைந்து வாழும் நாகபட்டினச்சிவராம சாமியெனு மொருவர் தனது சென்மாந்தர புண்ணிய த்தால் சித்தரைத் தரிசித்து வணங்கி நின்றிடும் போ தில் சித்தசுவாமி மகிழ்ந்து அச்சுவாமி குறிப்புணர்ந்து தமதடியார் கூட்டத்தி லொருவராகச் சேர்த்துக் கொ ண்டு பெரியசாமியெனப் பேரிட்டழைத்தா, இதுகாறு மனுசரித்திருந்த வாமமார்க்கத்தினை யறவேகை விட வும் சித்தமார்க்கத்தில் நிலைபெறவும் சுருளியில் வை கையாற்றி னடுவில் குள்செய்யும்படி செய்து பின் பற் பல சாபநீக்கிடுங் குறிப்பென்ன வோர்ந்த மந்திரமு ரைத்து யோகத்துக் கணித்தான மஷ்னுக்கரமும் உப தேசித்துக் கண்டமநாயக்கனூர் வழியாகப்போடிநாய க்கனூரை யண்டிடவும் அவ்வூ ரரசியாகிய காமுல வம் மையார் முதலியோர் வேண்டத் தொண்டர் குழாமுட னவ்வண்வைகையில் சித்தமூர்த்திகளுடன் ஆஷாடபூதி வேடங்கொண்டு நடித்த அறப்புக்கோட்டைச் சுப்பிர மணியப்பிள்ளை யென்பா ரொருவர் சித்தரடைந்துள்ள மகிமையனைத்துந் திருவருள்விளக்கத்தாலென்றுசிறிது முணராது அவரிடத்துள்ள அரியவவுடத்தாலென வெ ண்ணி அதனைத் தான் கிரகித்துக்கொள்ளவுத்தேசித்து மூர்த்திகளுக்குத் தொண்டுசெய்வான்போ லபிநயத்து வந்து ஒருநாள் குன்றிமணி யளவு வயிரத்தைப்பொடி செய்து பாலிற்கலந்து கொடுக்கச் சித்தர் பெருமா னுண்டுவிட அயலில் குழுமிநின்முர் உண்மைசிறிதுணர் ந்து துடிதுடித்துப் பரதவிக்கக் குறிப்பாற்கண்டு,

அன்றுவிடந் தனையருந்தி யகிலமெ
லா மோங்கவைத்த வரசே நாயேற், கின்று
வைரத் தையிட்டா னென்செய்வேன் முன்
ஞளி வியற்றுங் கர்ம, மொன்றன்றி யெது
முடியா தெனத்தெளிவே ஞயினுமென் னு
டையாய்ச் சின்னுட், சென்று சடம் விழப்
பெறிற்றே சிகன்சொல்சித்த ராலையமுஞ்செ
ய்விப் பேனே.

என்றவொரு பாசுரம்பாடிச் சுகமாக வமர்ந்திருந்த னர். அடியார்கள் யாவரு மிறும்பூதடைந்து கொண் டாடி யருளை வியந்து பாராட்டினர். இவ் வற்புதத்தி னைத் தேர்ந்த ஜமீந்தாரணி காமுலுவம்மையார் சித்தர் செய்யும் பணிக்குவேண்டிய திரவியங் கொடுத்தனர். பின்னரந்தச் சுப்பராயலு நாயடு ஆதியந்த மில்லாத வழகிய வெம்பெருமான் அறுபானன்கு திருவிளையாட ல்களைப் புரிந்த வாலவாயாம் துவாந்தசாந்தத் தலமா கிய மதுரையம்பதிக்கழைத்துக் கொண்டு போயினர். அங்குப் புத்திரப்பேறின்றிப் பெரிதுமுழந்தஅந்நாயுடு புத்திரபாக்கியமுண்டாம்படி யாசீர்வதித்துக் கொங்கு நாட்டிற் கெழுந்தருளினர்.

சித்தசுவாமிகளின் வரவைத் தெரிந்த ஜமீந்தார் குருநாதசெட்டியா ரென்பவர் தனது சோழசிகாமணி யென்னும் இளம்பள்ளிக்கு அழைத்துக் கொண்டுபோ யிருக்கச்செய்து, வணங்கித் தனக்குப் பத்திவேண்டும் பழுத்தமனம் வேண்டு மடியார்பா லன்புவேண்டும் சுத் தசன்மார்க்க நெறிபிடித் தொழுக வேண்டும் சிவனடி யே சிந்திக்கவேண்டுமென விரந்து கேட்டுக் கொள்ள, இவையனைத்தும் சித்தமார்க்கத்தினன்றிவேறுவகையிற்

பெறலரிதெனக் கூறிச் சித்தர்நூல் பல போதித்துப் புவனும்பிகை யருள்பெறுதற் கேற்ற வண்ண மூபதே சித்து ஓமமும் பற்பலமுடித்து இளய்பள்ளிநகர்ச் சாமி யென யெவரும் கொண்டாட வினிது வீற்றிருந் தரு ளினர்.

அவ்வூரி லொருவன் தொழு நோயால் தொடக் குண்டு கண்டார் சகிக்கக்கூடாத நிலையினை யடைந்து ஊருக்குப் புறம்பே கிடந்து ஈக்களால் மொய்க்கப்பட் டுக் கிடந்தனன். அவனிலையைக் கேள்வியுற்ற சித்தர் அவனுக்கு அமிழ்தம் கொடுத்துச் சுகப்படுத்தி இச் சமீன்தாரரிடத்திலேயே சேவகத்தி லமர்த்தி வைத்த னர். கண்டார் யாரும் சித்தர்கருணையை வியந்து பா ராட்டினர்.

அக்காலத்து ஆருவதுயாக மியற்ற குருநாத செட் டியார் குறிப்பறிந்து வேண்டிய திரவியமுபகரிக்க அக ண்டகாவிரியுடன் மற்றிரு நதிகளுஞ் சேரு மிடத்து யாகசாலை யமைத்துப் பூசுரர் பூடைசூழச் சிவனடியர் சேர்ந்திருக்க மகமுளுற்றுந் தருணத்தில் மேகங்களனை த்துந் திரண்டு ஆகாயமெங்கனும் பரவி யிடிமுழக்கு டன் மின்னி யாரவாரித்துப் பெருமழை பொழிய வா ரம்பித்தபோது சித்தமுனிவர்

எத்தனையோ துன்ப மியாகமதற் கெய்தியதி ங்
கத்தனையும் போக்கியரு ளம்பிகையே—வெத்தவடா
சத்தமேக த்தைத் தடுத்தெனது யாகத்தை
யித்தகி யியற்றிவைப் பாய்.

என்றோர் வெண்பாவினைப் பாடியவுடன் மழை நின்று விட வேள்வி யினிதாக முடித்தனர். இதுபூர்த்தியாயின பின்னர் ஜமீந்தார் தன்னூர்ச் சிவாலயத்தில் திருப்பணி

செய்து குருமூர்த்திகளைக் கொண்டு சக்கரத்தாபனஞ்
செய்வித்து அட்டபந்தன முடிப்பிக்கக் கருதி விஞ்ஞா
பனஞ்செய்து கொள்ளச் சித்தயோகர் இது அந்தண
ரால் செயப்படுவதல்லா லெப்போல்வார் வகுப்பதல்ல
வே யெனக் கேட்ட செட்டியார் பிறப்பானே ராயிர
மாமந்தணரு நினையொக்கப் பேசலாமோ? "அந்தண
ரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை
பூண்டொழுகலான்" என்பது சுருதிசம்மதமன்றோ, அர
னருட்டிறம்பெற்ற வைய இங்ஙனம் கட்டளையிடுவதழ
காமோவெனவணங்க அருந்தவச்சித்தர் அவர்வேண்டு
கோளுக்கியைந்து சின்னாளைக்குப் பின் பலதேயத்து
அடியார்கள் பலரும், ஆங்காங்குள்ளயோகியர் பலரும்
ஒருங்குசேர்ந்து வந்து சூழ்ந்து குதுகலிக்கச் சக்கரத்
தாபனஞ்செய்தனர். இக்காட்சி காணத் திருச்செங்
கோட்டினின்றும் வந்திருந்த நற்குணபனைத்தும் பொ
ற்புறவாய்ந்த சப்ரிஜிஸ்டரும், கூவம் பச்சையப்பமுதலி
யாரவர்கள் குமாரருமாகிய அப்பாசாமிமுதலியா ரென்
பவர் தபோதனரைத் தரிசித்து அழலிடு மெழுகேயாகி
இரும்பினைக் காந்தமிழுத்தது போல வயப்பட்டுத் தன்
னகருக்கு வரவேண்டுமென வேண்ட அங்ஙனமே செ
ல்லுகையில் அவ்வமய மவ்வூரில் விடபேதி பரவியிருக்
கவும் பல்லோரெதிர்வந்து படும்பாட்டைக்கூறிப் பரத
விக்கக்கேட்டு "அம்மையப்ப ரேயுலகுக் கம்மையப்ப
ரென்றறிக, வம்மையப்ப ரப்பரிசே வந்தளிப்ப—ரம்
மையப்ப, ரெல்லாவுலகுக்கு மப்புறத்தா ரிப்புறத்து,
மல்லார்போ னிற்பா ரவர்." என்றதற்கேற்ப அம்மை
யப்ப ரோருருவாக வமைந்துள்ள அர்த்தநாரீசன் பத
த்தைத் துதித்து,

திருச்செங்கோட் டத்தா திகழ்கங்கை யாதத்
திருக்கவைத் தேயருளு மீசா—கருப்பாற்
கலங்குகிறார் மாந்தர் கழிவிடநோய்த் தீர்த்து
நலங்கொளச் செய்வாயின் றுள்.

என ஒருவெண்பாவகுக்க அவ்விடபேதி நீங்கிச் சுகப்பர வியது. பின்னர், அகங்காரக் காட்டை யறவே களைந்து அருள்விளைத்தற் கேதுவாக மனத்தைத் திருத்தி வைத்துள்ள செடி அப்பாசாமி முதலியார் உள்ளத்தில் பத்தியெனும் வித்தினை நட்டு முப்பொருளுண்மை, சித்தாந்த நன்னெறி யாதி வகுத்துக்காட்ட அவருஞ் சிவநேயச்செல்வராய் விளங்கினர். அதுமுதல் முதலியாரன்பிற் சிறிதுமாறுத வந்தரங்க வடியவராயுள்ளார். பின்னர் சுவாமிகள் திருச்செங்கோட்டுப் பதிகம்பாடி யெழுந்தருளி யிருக்குப்போது, முன்னர் போடிநாயக்கனூரில் விடமீந்த சுப்பிரமணியப் பிள்ளை மீண்டு வந்து அன்பன்போ னடித்து அரியவவுடதங்களை யப்புறப்படுத்திவிட்டு உடன்வாழ்ந்து வருகையில் சித்த நூல்களில் வல்லுநரும் டிரஸராமாகிய முத்துக் குமாரசாமிபிள்ளை முதலிய மற்றையர் தெரிந்து இவனை இராஜாங்கத்தார் மூலமாகத் தண்டித்தலே கடனென யாவருமொருங்குசேர்ந்து முயற்சிக்கையில், இக் குறிப்பினைத் தெரிந்த பெருஞ்சித்தர் "இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்கா-லென்ன பயத்ததோ சால்பு" என்றதற்கேற்ப அன்னோனை யழைத்து அவனுக்குவேண்டியன நல்கி யவன்வினைக் கிரங்கி யவ ணிருப்பிடத்திற் கனுப்பிவிட்டனர். அன்று இவர்கருணையிருந்தவாறென்னே யென்னே யென யாரும் வியந்து பெரிதும் பாராட்டினர். அந்நாள் குமாரமங்கலந்தனில் தாஞ்சாற்றிய திருப்பதிகத்தி லின்றைக்கே மழைபெய்திடுமென

ப்புகன்றதை யுணர்ந்த சிலசாமான்னியர் நம்பாது புற
ங்கூறித் திரியவதுதேர்ந்து அன்னவரொடும் மற்றைய
ரொடுமிருந்த சபையினில் அப்பதிகந்தனை யரங்கேற்
றுங் காலத்திலேயே மாற்றலர் வெள்கி மாழ்வுற மழை
சொரிந்து வளம்பெருக்கியது. இவ்வரிய வாடல்களை
யெல்லாம் கண்ணூடாகத் தரிசித்து வந்த திருச்செங்
கோட்டு ஜமீந்தார் ஆயிரங்கணக்கான பொருள்கள் யா
கனிமித்தங் கொடுத்துபசரிக்கப் பின்னர் திருகருவூர்
திரு அவிநாசி, சென்னிமலை, காங்கேயம், சிவன் மலை
முதலிய தலங்கட்குப் பதிகம்பாடி, காங்கேயம் சிலே
டைச்சிங்கம் அஷ்டாவதானம் சேஷாசலநாயடு வே
ண்டுகோளின்படி காங்கேய மடைந்து அந்நாயடுவின்
மாதுலன் நீர்நோயைத் தீர்த்தருளி மற்றொருவருக்கு
மகவரமளித்து அந்நகர் சாமியாசாரி யென்பாருக்குச்
சண்முகசடக்கர மந்திர முபதேசித்துச் சேலத்தினை
யடைந்தனர். அடைந்த சித்தர்பெருமை கண்டு, கமிட்
டிமெம்பரும், இரசாயன நூலினும், நியாய நூலினும்
முதிர்ச்சிபெற்ற கிருஷ்ணசாமியையர் முதலிய பல பிர
புக்கள் நண்புபாராட்ட அமர்ந்திருக்கையில் சுகவனே
சர்க்கும் சுந்தரராசப் பெருமாளுக்கும் ஒருதூதுபாடி
யரங்கேற்றுகையில், பொறைக்கோர் பொக்கிஷமாய்ச்
சிவபத்தியிற் சிறப்புற்றுச்செல்வி யருள்வாய்ந்த எனது
நண்பரும் சென்னை இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் ரெ
ஜிஸ்டிரேஷன் பெர்சனல் அசிடெண்ட்டுமாகியமாரியப்
பமுதலியாரவர்கள் திருச்செங்கோட்டில் தனது தம்பி
அப்பாசாமிமுதலியார் வீட்டில் சித்தர்பெருமா னெழு
ந்தருளி யிருப்பதறிந்து அவ்விடம் நோக்கி வரும்வழி
யில் சித்தர்பிரான் சேலத்தி லிருப்பரெனவும் அவருக்
குரியது ஏறுமுகக்கண்டி யெனவும் தெரிதிரெனக் கே

ட்டவொரு சொல் கனவதுபோ னினைவில் வரத் தெ
ளிவோமென்று சேலமடைந்து சுகவனேசர் கோயில
டைந்து சித்தர் திருவுருவினைத்தரிசித்து ஏறுமுகக்கண்
டியி னருமையினைத்து முணர்த்தவும் அதுபொன்கலப்
பா யிருத்தலின்றிப் புனையாது வாளாவன குற்றமாகத்
திருவருள்விளக்க விடையருளா தெடுத்ததனை பேணிசா
த்தியருளினர். அக்காலத்துத் திரிபுராந்தகப் பெரு
மான் திருக்கோயில் கொண்ட தலத்துரிமை யுணர்த்
திப்பெருமாற்கும் சுகவனநாதற்கும் தூது அருளினர்.
அதனுட்பொருளை யறிவாரே மற்றறிவார். முதலியா
ரவர்கள் சென்னைநகர்க் கணித்தான விற்கோலத்தெம்பா
னுக்கு அப்போதே "அணிதிகழு மணிமாடமளாவுதிரு
விற்கோலாபணிபூட்டேனெனவிரதம்படைத்தவெனைப்
பார்மீதில், துணிவுடனே கொண்மினெனத் துய்யதிரு
வாக்களித்தால், தணிந்தமைக் கோள்வேனைத்துதள்ளி
விடமாட்டேனே," எனத் தொடக்கத்து ஒரு பதிகம்
பாடி அம்முதலியாரிடங் கொடுக்க அவரன்புடனேற்று
ஆசியும்பெற்றுச் சென்னைமாநகர் தனக்கழைப்பப்பச்
சைமலைப் பண்ணவனைத் தரிசித்துக் கொண்டு வருவ
லென விடையளிக்க முதலியார் திருச்செங் கோட்டை
யடைந்தனர்.

இக்காலத்தில் சித்தர் திருவாய் மலர்ந்தருளிய
நூல்களைப் பலர் பாராட்டி யவற்றின் பால்வைத்த பே
ரன்பினால் தேவாரமெனப் பெயர்தீட்டி யச்சிட்டுப் பர
வச்செய்யக் கேட்டு, மொழிக்கு மொழி தித்திக்கும்
தெய்வத்திராவிட வேதங்களாகிய மூவர் பாடல்களுக்
கன்றி மற்றியாவர் பாவினங்கட்கும் தேவாரப் பெயர்
தகாதென வற்புறுத்திக்கூறிப் பாமாலை பதிக முதலிய
பெயர்களால் மற்றையர் பாடல்களை யழைத்தல் மரபன்

றென விளக்கினர். இவ்வுண்மை யோராத தமிழ்ப் பண்டிதர் சரவணபிள்ளை சுவாமிகள் நூல்களுக்குப் பிறரா லிட்ட பெயரைக்கண்ட மாத்திரத்தே அழுக்கையகொண்டு புறங்கூறித்திரிகையில் அவர் மீளாத சுரநோயாற் பிடிக்கப்பட்டு அஃது எவ்விதத்துந் தீராதென்று பலருங் கூற, சித்தர் அற்புதமனைத்துங் கண்ணுறக்கண்ட அவ்வூராரொருவர் சரவணபிள்ளையைநோக்கிநீர் சித்தரையடைந்தாலன்றி யிப்பெருநோய்தீராதென்றுரைக்கக்கேட்டு இசைந்து சித்தசுவாமியை யடுத்துத்திருவெண்ணீறேற்றுத்தரித்துநோய்தீர்ந்து அப்பெரியோர் நூலுக்குப்

பூவின்மிசைப் பரனருளா லணிமாதி சித்தி
  பொருந்திவினை யாடியமெய்ச் சித்தர்புகழ் வளர்க்கும்
தாவில்சித்த சபைக்கதிபன் பொருணந்தி யொழுகுந்
  தமிழ்நாட்டுக் குருகைநகர் தழைக்கவவ தரித்தோன்
தேவர்பொய்யா மொழிப்படியுண் டாகவே றுறந்தோன்
  தீப்பிணியா மிருட்படலஞ் சிதையவரு மருந்தாம்
மேவுமௌனி பரப்புறுமார்த் தாண்டனென வடைந்த
  வெப்பநோ யப்பாலே கப்புகலாய் நின்றேன்.

எனப்பலபாடல் பாயிரமீந்து அதில் தாம் நோயாற்பட்ட பாடும் அது பூதியால் போனவாறும் விளக்கி மகிழ்ந்தனர். இவ்வுண்மைகளை நேரிற்கண்ட பாகற்பட்டி ஜமீந்தார் சித்தர்பெருமானை யடைந்து தங்குறை யனைத்தும் தெரிவிக்க அவர் திருவுளமகிழ்ந்து அந்நகரணுகி அச்சமீன்தார் மனைவிக்கு வாய்ந்த கிரகோபாதையை யொழித்து, மகப்பேறுபெறக் கருணை பாலித்து அவ்வூராலயத்தில் யந்திரதாபனம் புரிந்து பதிகமும் கட்டளையிட் டருளினர். அப்பால் ஆற்றார் ஸ்ரீகாயமின் மலேச்சுரருக்கும் அறப்பளீச்சுரருக்கும் தமிழ்மாலை

பலசாத்தி, தமது பச்சைமலைச் சற்குரு நாதனைத் தரிசிக்கப் பரிவுகொண்டு சென்று அபராத விண்ணப்பமெனு மாலை பாடித் தரிசித்து, அடியேனை யாட்கொண்ட வரசே! தேவரீர் திருவடித் துணையே விரும்புமெனைப் பூலோக வியாபாரத்தி லேவியது நலமோ, இது தகுமோ வென விரங்கவும், பச்சைமலைப் பண்ணவன் சித்தரை நோக்கி அருட்செல்வ! உன்னுலிவ்வுலகத்திலாக வேண்டுவன சிலவுள, ஆகலின் செல்வாயென அவ்வாணைக்கஞ்சி விடை பெற்றுச் சென்னைமாநகருக் கெழுந்தருளினர். சித்தர்வருஞ் செய்தியைக் கேட்டு மேகத்தைக் கண்ட மென்மயில்போல் மகிழ்ந்த சிவநேசச் செல்வராகிய மாரியப்ப முதலியார் முதலிய பலர் எதிர் கொண்டழைத்து வந்து பல்லுபசாரம் புரிந்து முகமனுடன் வாழ்த்தி மாளிகை யொன்றிலமைந் திருக்கப் பண்ணினர். இன்னபடியிவரிருக்க அந்நாளில் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்த் தலைமைப்பண்டிதர் திருவாரூர்ச் சின்னசாமி பிள்ளை வந்தடுத்து அவருண்மைகளை யெல்லாம் கண்டு தேர்ந்து ஞான சித்தபுராணமெனவொன்றியற்றினர். வைதிகசைவ புராணிகர் திருச்சிற்றம்பல ஞானியார் ஆசிரியப்பா பாடியேத்தினர். அக்காலத்தில் அடியேனும் சிலசந்தக் கவிகள் பாடிப் பரவினேன். இப்படியாகச் சென்னையின்க ணமர்ந்து வாழுகையில் பாவலர்கள் அவர் மீது செப்பிய பிரபந்தங்களுக்களவில்லை. அன்பர் பலர் வந்தடுத்து வேண்ட அவரவர் விருப்பத்திற்கிணங்கத் திருவொற்றியூர், திருமயிலாப்பூர், திருவான்மியூர், திருமுல்லைவாயல், திருக்கழுக்குன்றம், திருத்தணிகை, திருவச்சிறுவாக்கம், திருவிற்கோலம், திருவாலங்காடு, திருப்போரூர், திருப்பாசூர்

திருமணவூர், திருவண்ணாமலை காஞ்சிக்கந்த கோட்டம், வடபழநிபுரிமுதலிய தலங்கட்குப்பதிகம்பாடி ஆங்காங்குப் பலவடியருடன் சென்று அரங்கேற்றிச் சென்னை மாநகரிலுள்ள காலவிநாயகருக்கும், காசி விஸ்வநாதருக்கும், சித்திவிநாயகருக்கும் பதிகங்கள் பாடி வீற்றிருந்தருளினர். திருமயிலைத் தெற்கு மாடவீதியிற் சித்திரச் சத்திரம் தாபித்த வியாசர்பாடி விநாயக முதலியார் சகோதரர் அப்பாசாமி முதலியார் குமாரர் "இந்துஜன பூஷணிப்" பத்திராதிபரும், சிவநாம சங்கீர்த்தன நூலாசிரியருமாகிய திருமயிலை வித்துவான் சுந்தரமுதலியார் விருப்பத்தின்படி தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனுருக்கும் ஒருபதிகம் பாடியருளினர். இச்சித்தர் கீர்த்தியினைக்கேட்ட ஐக்கோர்ட் வக்கீல் விசுவநாத சாஸ்திரிகள் வந்து நல்லுரை பகர்ந்து வேண்டிச் சித்தரை எழும்பூரிலுள்ள தமது மாளிகையி லெழுந்தருளச் செய்து பற்பல ஆங்கிலேய வயித்தியர்களாலும் தீரப் பெறுது தமக்குண்டாயிருந்த நீர்வியாதியினுக்கு மருந்தேற்றுண்டு சௌக்கியமுற்றனர். அதுசமயம் மாயூரம் வித்துவான் கிருஷ்ணையரென்பவர் சென்னைக்குவந்து சித்தரனுக்கிரகம் பெற்றுத் தோத்திரப்பதிகம் பஞ்சரத்தினம் மும்மணிமாலை முதலிய பதிகங்கள் சித்தர்மீது பாடினர். பின்னர்த்திருவாமாத்தூர் அழகியநாதர்மீது பதிகம்பாடி யவர்சந்நிதியி லரங்கேற்ற வுத்தேசித்துச் சாந்த குணசீலராகிய மாரியப்ப முதலியாருடனும் அடியேனுடனும் அவ்வூரேகினர். அபாவருணகிரியாரென அரும்புலவரனைவருங் கொண்டாடப் பெற்றவரும், சந்தச்சரபமெனச் சகத்தாற் புகழப் பெற்றவரும் நாற்பதினுயிரங்கவிபாடியவரும் திருப்புகழ்ச் சுவாமி யென்றும்

முருகதாச சுவாமியென்றும் விளங்கிய தண்டபாணிசுவாமிகள் அவ்வாமாத்தூரி லெழுந்தருளியிருப்பதனை யுணர்ந்து அவரைச் சந்திக்க, அவர் முன்னமே சித்தரைப் பற்றியும் அவர் நடத்திவரும் வேள்வியினைப்பற்றியும் தெரிந்தவராக விருந்தும் அவர் நடத்தும் வேள்வி ஏகான்மவாதிக ணடத்தும் பசுபந்தன வேள்வி போலு மென்றெண்ணி அருவை கொண்டும், சித்தரைக் குழந்தைப் பருவத்தில் கண்டிருந்தவராகலின் இப்போதுமறந்தும் வந்தசித்தர் பணியாது பக்கத்தில் வீற்றிருந்தமையால்அஃது அசம்பிரதாயமென வுன்னியும் சிறிது மனதில் கோட்ட முடையவராயிருக்க, இவ்வளவு முண்டாகுமென முன்னமே திருவருளால் தெரிந்துகொண்டே சித்தர் அவர் நினைத்த யாவற்றிற்கும் சமாதானமாக வொரு கடிதத்திலெழுதிக்கொண்டு வந்திருந்தமையின், அக்கடிதத்தைச் சுவாமிகளிடத்தில் கொடுப்பித்து விட்டுத்தாம் ஆலயத்திற்குச் சென்று நூலரங்கேற்றித் திரும்பிவந்தனர். உண்மையனைத்தையுந் தெரிந்துகொண்ட சுவாமிகள் சித்தரைப் புகழ்ந்து,

ஞானசித்த மூர்த்திகளின் நாட்டினிடை கூடியதால்
ஈனசித்தர் நாசமுற லென்றென்று—மானசித்த
முள்ளதொண்ட ரெல்லா மொருங்குதுதித் தேத்துகின்
வள்ளலருண் மாட்சி மதித்து. [ருள்

கொலையும் புலையுமறுங் கொற்றமன்னர் நீதி
நிலைதவறுர் செந்தமிழ்ச்சீர் நீடுந்—தலையாய
வானகத்துள் ளாரு மனிதருங்கூ டிக்கழிப்பார்
ஞானசித்த ருடல்செயு நாள்.

மரகதகி ரிக்கிறைவன் மாமலர்த்தாட் கன்பாச்
சாதுபத்தி யாற்பதிகஞ் சாத்தி—விரதபயன்

பெற்றுயர்ந்த ஞானசித்தன் பீடும் பெருந்தகவுங்
கற்றுணர்ந்தோ ரேயறிவர் காண்.

ஞானசித்த னென்னொருவ னல்லேலோர் நடுக்குலவி
வானகமும் பூதலமும் வாழ்வதனுக்—கானதிப்பப்
பாபாரி பெய்வதனைப் பார்ப்பதென்றன் வேட்கை யென்றன்
காபாரி யாணையுண்மை காண்.

எனப் பலபல பாக்களையும் பாடினர். பின்னர்ச் சித்தர் சென்னைக்குத் திரும்பவும் அந்நாள் தொண்டைமண்டலத்துத் திருவிற்கோல மாநகரில் பலநாள் மழையின்றியும் அவ்வூரா ரொற்றுமையின்றியும் இருப்பதனைச் சித்த மூர்த்திபாற் சிலர் சென்று குறையினைச் செப்ப அவர்கள் வேண்டு கோளுக் கிசைந்து அவ்வூர்த் திரிபுராந்தகராலயமடைந்து, பஞ்சாக்கர யந்திரந்தாபித்துப் பதிகம்பாடி யொற்றுமைப்படுத்தி, தமது ஏழாவது யாகத்தினை இவ்வூரில் முடிக்கின் மழை பெய்யுமெனக் கட்டளையிட அதற்கிசைந்த அவ்வூரார் பாலி நதியில் ஒரு பெரிய யாகசாலை செய்து பல்லுபகரணங்களுங் கூட்டி வைத்துச் சித்தருக்குத் தெரிவிக்க யாகஞ் செய்யவேண்டிய தினத்திற்கு முந்திய நாளே அவரெழுந்தருளி யாக சாலையினை நோக்கி யிப்பெருமண்டபம் பயன்படாதெனக்கூறி அம்மண்டபஞ் செய்தோர் மனம் வருந்தா நிற்கவும், திருவருட் பெற்றியைச் செவ்வனே தெரிவிக்குமாறுங்கருதி ஸ்ரீ புவனாம்பிகையை விமானத்தேற்றி நகர் வலம் வரச்செய்வித்துக் கோயிலுட் புக்குக் கலயதாபனஞ்செய்து வருணனை யுத்தேசித்த வேள்வி தொடங்குமோரை வந்தடுத்தலும் சித்தர் தொண்டரை விளித்து யாரும் வெளிவருவீராக மண்டபம் சிதைந்திடுமென யாவரும் அங்ஙனமே வெளிவர வெளி

வந்தவுடன் மேகந் தோன்றிக் கறுத்துப் பெருமழை பெய்து வெள்ள மிகுந்து பரந்து யாகசாலையை நிரப்பியது, தங்களெண்ணம் நிறைவேறியதெனத்தொண்டர்கள் பலரும் சித்தரைக்கொண்டாடி வேறிடத்தில் யாகசாலை குயிற்றி மீண்டும் பகப்பொருள் சேகரித்தனர். வேதியர் சிலர் தங்களையின்றி யெங்ஙனம் யாகமுடிவு பெறுமெனவெண்ணி மனக்கோட்டங் கொண்டொருபுறமொதுங்கியிருக்க, சித்தர் சாலை புகுந்து யாக மாரம்பிக்குந் தருணத்தில் வேதவொழுக்கத்திற் சிறந்த பறபல வேதியர் தென்றேயத்தினின்றும் வலிய விரைவின் வந்து சாலையுணிறைந்து மறையோதி, கிரியைகள் முடித்துப் பூரணாகுதி செய்துபோயினர். சித்த சுவாமிகளால் வேள்வி சுகமாக நிறைவேறியது. அவ்வேள்விப் பூர்த்தியில் திருச்சிற்றம்பல ஞானியார், பூவைச் செங்கல்வராய முதலியார், மாயூரம் கிருஷ்ணையர், சந்தப்புலமைத் தங்கவேலு பிள்ளை, வண்ணைக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முதலியார், கூவம் சிங்கார வேலு முதலியார் முதலிய வித்துவ சிகாமணிகளாலும் அடியேனாலும் பாடிய பிரபந்தங்கள் அரங்கேற்றப்பட்டன. சித்தர் மறுபடியும் அடியார் கூட்டத்துடன் சென்னைக்கு வந்து சேர்ந்தனர்.

குலசேகரம் பட்டணத்தில் வாழ்ந்து கொண்டிருந்த தமது தங்கையார் மனத்துறவடைந்து ஒரு நாள் தம்முள்ளே யெண்ணுவாராயினர். நம்மை யீன்ற தாயாருயிர் துறந்தார், நம்முடன் பிறந்த தமையனார் துறவடைந்தார், நமது சந்ததிக்கென வொரு சேய் பிறந்தாயது, இனி நாம் நமது கணவனுக்கு முந்தித் துஞ்சுதலே கடனெனத் தீர்மானித்து நாளுக்கு நாள் உண

வினைக் குறைத்து வந்தனர். அதுவே அம்மையாருக்கு வியாதியாகவிளைந்தது. அச்செய்தியானது சித்தர்செவியினுற்றவுடனே சென்னையினின்றும் பிரயாணப்பட்டுக் குலசைநகரடைய, தங்கைகண்டு சித்தநாதரடிபணிந்து தேவரீர்விரும்பியுள்ள சித்தசமாடிமுடிக்க மாதாமகரால் கொடுக்கப்பட்டநன்செய்புன்செய்மனைமுதலியவற்றை தங்கள் பெயருக்கு முடித்து வைத்திருக்குஞ் சாதன மீது ஏற்றுக்கொள்ளுமென, சித்தர் அம்ம என்சொல் புகன்றனை எல்லார்க்குமுள்ள நிலைமாய அம்பிகையடி நிழலே சாதனமா மன்றி வேறு சாதனத்தாலென்ன பயன்? நீ புவனம்பிகை பாதநிழ லடைந்து நில்லுக வென்றோதின வக்கணமே அவ்வம்மையார் (சயவருடம் ஆடிமதி தசமிதிதி) சிவபதஞ் சேர்ந்தனர். சின்னவூரில் சித்தரெழுந்தருளி யிருக்கையில் அவ்வூர்ப் பள்ளி வாசல் மோதின்சாயபு தம்பி யென்பவர் சித்தரை வந்தடுத்து ஊஞ்சற்பாபாடி யாசீர்வாத மேற்றுச் சென்றபின் ஆற்றாருக் கெழுந்தருளினர். சித்தரெழுந்தருள்வதுகேட்ட அந்நகரார் மழையின்றிப் பயிர் வாடும் செயலைக் குறிப்பிட்டுக் கூப்பிட்டு முறையிடச் சித்தர் முறுவல் கொண்டு என்னாற் செயப்படுவதி யாதுமில்லை யென்று கூறலும், ஐய! செங்குன்றாரிற் பதிகஞ் செப்பி மழை பெய்தமையும், பொங்கி வரும் பாலாற்றிற் பொழிந்தது மிப்புவியறியுமே எங்கள் தவப்பேற்றுலித்தருணம் நும்வரவை மங்களமாகக் கொண்டோம். மறுத்திடா தருளுமென வூரார் வேண்ட, தெய்வச் செயலைச் சிந்தித்துச்சோமசுந்தரிமாலை கூடுதுறை முதலிய பாமாலை பாடி நடராஜ சந்நதியி லரங்கேற்ற மழைக் குறிப்பு ஒரு சிறிது மிலாதிருக்கச் சித்தர் தமதான்மார்த்த மூர்த்தியாகிய வயிரவர் முன்னே,

மலர்மகளைக் கொய்ததுவு மன்மதனை முன்னாள்
சிலைநுதலால் வாட்டியதுஞ் செப்ப—வுலகமதிற்
சத்தியமே யானுக்காற் றப்பாதிவ் வாறைமகர்க்
கித்தினத்தில் வான்பொழிய வே.

எனவொருகவிதை நவின்றிடலும், சித்தர் கருதியவெள்ளம்போல மழைவெள்ளம் பொழிந்து பெருகியது. உடனே சித்தர் கன்னியாகுமரிக் கெழுந்தருளிப் பகவதிக்கோர் பாமாலைசாத்தித் திரும்பிச் சென்னைக்கு வந்து இனிமேல் சின்னாளைக்குத் தனித்திருக்க வேண்டுமென்னுங் குறிப்பை அன்பருக்குத் தெரிவிக்க அறிந்த சப்ரிஜிஸ்டரார் இராமநாதமுதலியா ரென்பவர்; பொன்னுலகத்துப் புரந்தரன் பயவாதத்தைப் போக்கடித்த புகழ்பெறுங்கூடிய புண்ணிய மூர்த்தியாகிய வயித்தியநாதர் திருக்கோயில் கொண்ட பூவிருந்த வல்லியிலேயொரு மடாலயப் பிரதிட்டை செய்து அம்மடத்தைச் சித்தர் பேராற் சாதனஞ் செய்து சித்தமூர்த்திகட்குத் தெரிவிக்க இதுவும் புவனைப்பிகையின் திருவிளையாட்டெனக் கருதி அடியார் பத்தியிற் சிறந்த அன்பர் மாரியப்ப முதலியார் முதலிய தொண்டருடனும் அடியேனுடனும் அவ்விட மெழுந்தருளி மடாலயத்திற் பிரவேசித்து நல்ல வோரையில் புவனைப்பிகை பீடந்தாபித்து மறையொரு பாலும், ஆகமமொருபாலும், திருமுறையொரு பாலுமாகப் பாராயணஞ்செய்ய மங்களவாத்திய முழங்க விருந்து கொண்டிருக்கையில் அற்றைநாள் எட்டாவது யாகம் உற்றதுணர்ந்து அத்தலத்து வைத்தீச்சுரர் கோயில் கல்யாண மண்டபத்தில் சிவனடியார்கள் சிறப்பாக் கொண்டாடச் சித்த பெருமான் வேள்வியைப் பூர்த்தி செய்தனர்.

ஜயங்கொண்ட தொண்டை மண்டலத்துளை வேளாளருக் கிருப்பிடமாயுள்ள பூவிருந்தவல்லி நகரிலே புண்ணிய முனிவராகிய சித்தர் பெருமானெழுந்தருளி யிருக்கையில் அவர்களிலொரு நாள் புறைப்பிளை எழுந்தருளி மற்றையாகங்களைத் திருவானைக்காவிலிருந்து முடித்து வருவாயாக வெனக் கட்டளையிட்டருளலும் பச்சை மலை நாதன் பரிந்தாண்டு கொண்ட அப்பண்டைய நற்றவமுடையாலும் பண்பே யெனத்திருவுளங் கொண்டு, ஆளுடைய பிள்ளையாரையவர் திருத்தந்தையார் தொடர்ந்தது போலத் தமது தந்தையார் தமதுடன் வர உடனே அத்திருத்தல மடைந்து தமது தொண்டர் குறிப்பின்படி திருக்கோயில் மேலைக் கோபுரவாயிலுக்குச் சமீபமாக வெழுந்தருளியிருந்தனர், அங்ஙனமெழுந்தருளி யிருக்கையில், அகிலாண்டேசுவரிக்கும் பாமாலைப்பாடித் தன்னை வந்தடுத்த கிருஷ்ணனந்த யோகியினைக் கொண்டு அரங்கேற்றி வைத்தனர். சித்தரருள்பெற்று விளையாடும் சீர்த்தியினைத்தேர்ந்து மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை மாணாக்கர் சோமசுந்தரம் பிள்ளை, புத்தூரிராமசாமி நாயுடு, தருமபுரம் ஆறுமுகத்தம்பிரான், வேங்கடாசலையர், முத்துச் சிதம்பர பிள்ளை, தியாகராஜ செட்டியார் மாணாக்கர் சேஷையர் அரங்கத்துவச நாவலர் முதலியோர் சித்தர் பெருமான் மீது அனேக வரிய பிரபந்தங்களைப் பாடினர். பின்னர் சித்த மூர்த்திகள் திரிசிர புரத்து மாதூர் பூதேசுவரர்க்கும் பதிகம் பாடி யரங்கேற்றுகையில், அடியாரருமையினை யறியாத சில புலவர் சண்முகத்தம்பிரான் சுவாமிகளைக் கொண்டு அருமையால் சில கேள்விகேட்கும்படியனுப்ப, திருவருளால் அத்தம்பிரான் சுவாமிகள் முற்று மாறுகிச் சித்தரைப் புகழ்ந்

து கொண்டாடி மகிழ்ந்தனர். இவ்வாறு சில நாட்கழிய, சிவநேசச் செல்வர் சிலர் அகிலலோக மாதாவாகிய புவனம்பிகை யம்மையார் பெயராலும் சித்த மூர்த்திகள் பெயராலும் ஒருசபைத் தாபிக்கக்கருதிச் சித்தமூர்த்திகள் சம்மதமேற்று மன்மதவருடம், மகரமாதம், உத்தராயணமாம் சுபதினத்தில் ஸ்ரீபுவனம்பிகை பக்தஜன சித்தசபை தாபித்து அன்னசபைக்கான சட்டமுதலியன வகுத்து, அடியார் பக்தியிற் சிறந்த அன்பராகிய வேணுகோபால நாயுடுவைக் காரியதரிசியாக நியமித்துவைத்தனர். இச்சபை நாளுக்குநா ளொளியோங்கிவரச்சின்னாட்பின் திருப்பிடவூர் தருமகர்த்தராகிய திருமாந்துறை சகநாத வையரும், அவரது ஆப்த நண்பராகிய சேஷையரும் திருப்பிடவூர்க்குப் பதிகம் பாடித்தர விரும்பியபடி யியற்றித்தர அதனைச் சிவிகையிலேற்றி நகரை வலஞ் செய்வித்துச் சந்நிதியி லரங்கேற்றங் கண்டு சந்தோஷித்தனர். இதுகிடக்க, காங்கேயம் சேஷாசல நாயுடு மூலமாக வந்த ஒரு மாதுக்குக் கண்ணளித்தும், மற்றும் பலருக்குச் சுரநோய் தணித்தும், முடக்கொழித்தும், குன்மந் தவிர்த்தும், பல பைசாசப் பிணிப்பை மாற்றியும் காவை நகரில் எழுந்தருளியிருந்தனர். அது தருணம்,

அயோத்தியில் வதிந்த இராமப் பிரபன்ன யோகியென்பவர் தனது கனவில் ஒரு மகாத்மா இராஜயோக வடிவாய் முப்பதுவயதே மதிக்கப்பெற்றவராய், அரையில் பீதாம்பரமும் கரத்தில் ஓர் வீணையுங்கமண்டலமுமுடையவராய், தேகமுழுவதும் விபூதிநிறைந்த திருக்கோலத்தோடு கூடியவராய்க் கண்டவர் மனதைக் கவரும் அழகுடையவராய் அநேக சிஷ்யகுழாங்களின்

மத்தியிலிருக்கத் தரிசிக்கப் பெற்றதுமன்றி அமிர்தத்தை யொப்பத் தேன்விராவிய பொரியையுந் திருக்கன்னலமுதையுந் தமது கரத்தால் அனைவர்க்கும் பிரசாதித் தருளியபோது நமது இராமபிரபந்து கரத்தும் பிரசாதித்தனர். தமது கரத்தொன்றுமின்றியே அத்தனைபேருக்கும் போதுமென்னுமளவு பிரசாதித்த அற்புதத்தைக்கண்டு இவர் சாமானிய மனிதரன்று, நம்மை ஆளவந்த திருக்கோலமேயென மதித்து, ஹே! சுவாமின், அடியேனது போக்கியமே போக்கியமென்று சிறு பருவந்தொட்டு இந்நாள்வரை அனந்தநாள் சாந்திராயண விரதஞ்செய்தும், பஞ்சாக்கினி மத்தியினின்றும், வைராக்கியத்தால் சிற்சிலநாள் அன்ன பானாதியின்றியும், சிலகாலம் ஹடயோகமுறையே நாளிகர்மநெறியாய் ஆசனத்தைச்சுருக்கியும், விரித்தும், ஜலத்தை யுள்வாங்கி கஜகர்ம வழியாய் இரைப்பையும் கழுத்தும் நிரம்பும் வரை ஜலத்தைக்குடித்தும், கடசோதனைகள் செய்து உளுமணி முத்திரை மார்க்கமாக சுவாசத்தை உள்ளிழுத்து நவத்துவாரங்களையும் பஞ்சும் பெருகுஞ்சேர்ந்த உண்டையால் அடைத்துச் சதுர்விதபந்தனை பஞ்சமுத்திரைகளால் அப்பியசிக்கப்பட்டும், மனம் நிலைபடாது நரைதிரை மூப்புநெருக்கவுழலும் அடியேனுக்கு உள்ளபடியே உபநிஷதப் பொருளை உணர்த்தி அநுக்கிரகிக்கவேண்டுமென் றடிபணிந்தனர். உடனே அப்பஹாத்பா பிரமவர்ச்சஸ் நிறைந்த இனியமுகத்தில் புன்சிரிப்புதோன்ற அருகே அழைத்து அஞ்சலென்று அபயகரஞ்சிரத்திலிருத்தி, பிரமசரியம் நழுவாது இது காறும உழைத்த தவப்பயன் அத்தனையுஞ் சேர்ந்தபடியால்தான் இன்று உமக்கெதிர்

நின்றோம் என்றும், நாமிருப்பது கஜாரணிய மென்று
ம் ஞானசித்தரென நம்பெயரைச்சொல்லுவர் என்றும்
திருவாய்மலர்ந்தருளி மறைந்தனர். உடனே இராம
பிரபந்து ஜாக்கிராவஸ்தைக்கு வந்து இப்போது கண்
டது கனவோ நினைவோவென்று சிந்திக்கச்சூரியோ
தயமாக உடனே காலைக்கடன்முடித்து ஜம்புவனமென்
கிற திருவானைக்காவுக்கேகும்போது வழியில் தீராக்க
ருமரோகங்கள் நீங்கித் துதித்துப் போகிறவர்களையும்
தங்கள் தங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்து போ
கிற சாதுக்களையும், பூதபைசாசகணங்களால் பீடிக்கப்
பட்டவர்கள் அவைகளினின்றும் விலகி சுதாகமாகப்
போகிறவர்களையுங் கண்டுவினவ, அவர்கள், ஓர் சித்த
புருஷர் இங்குவந்திருக்கிறார் என்றும், அவர் திருக்குரு
கூரில் திரு அவதாரஞ்செய்தவர் என்றும், மூன்றாவது
வருஷத்தில் அம்மகானுக்கு அரவம் முத்தமிட்டகன்ற
தென்றும், பத்தாவது வருஷத்துள் ஓதாது உணர்ந்
தவரென்றும், பதினாறில் பொதிகை பச்சைமலைக்கே
கிக் குருநாதனிடத்து அநுக்கிரகம் பெற்றுக்கற்பயோ
கசாதனைபயின்று லோகோபகாரமாகப்பற்பல யோக
சாஸ்திர ஞானசாஸ்திர வைத்திய சாஸ்திரங்களும் அ
ருளி, சிவத்தலங்கடோறும் பதிகம்பாடி வருகின்றாரெ
ன்றும் இவை முதலான சத்குண விசேஷத்தால், உல
கத்துள்ள சதுர்வர்ணத்தவராலும் அன்னிய முசலி
மான்களாலும், கிறிஸ்துமார்க்கத்துள் பலராலும்
தோத்தரிக்கப்படுகின்றாரென்றும் அன்றி ஸ்ரீபுவனே
சுவரி தெய்வத்தை முன்னிட்டுப் பலபல கிருதுக்
களைச்செய்தவரென்றும், ஸ்ரீ அகிலாண்டேசுவரியின்
சந்நிதிக்குத் தெற்குமடவளாகத்திருவீதியில் ஸ்தாபிக்

கப்பட்ட ஸ்ரீபுவனாம்பிகை பக்தஜன சித்தசபையில் எழுந்தருளி யிருக்கின்றா ரென்றும், இன்னமும்பற்பல அற்புதங்கள் அவர் அடியார்க்கடியாராலும் செய்யப்பட்டு வருகின்றன என்றும் எடுத்துப் பேசியதை பிரபந்து தாம் இரவுகண்ட சொற்பனம் ஒத்திருப்பதையும் அறிந்து, இவ்வளவு அற்புதமுஞ்செய்தவரும், பிரத்தியக்ஷமாய் உங்களுக்கு அநுக்கிரகம் செய்தவருமான அப்பெரியவரின் திருநாமம் என்னவென்று கேட்க ஞானசித்தமுனீந்திர ரென்று உரைத்தவளவில், கனவில் மஹாத்மா திருவாய்மலர்ந்தருளிய திருநாமம்ஈது அன்றோ எனத்துதிக்கப் புளகாங்கிதமாயிற்று. பக்தர்கள் சொல்லியபடி சித்தசபையில் சித்தமூர்த்திகளைத் தரிசித்தனர். கனவிற்கண்டபடி திருவத்தத்தில் வீணையொன்று நீங்க, வலதுகரத்தில் பொற்பிரம்பும், இடதுகரத்தில் கமண்டலமும் சுவேதவர்ண பீதாம்பரமும், கழுத்தில் ருத்திராக்ஷமாலையும் தேகாதியந்தமுள்ளவிபூதியுங்கண்டு தனக்குத்திருந்திய தமிழ்ப்பயிற்சி யில்லாதவராயினும் சமஸ்கிருதபாஷையில்சிற்சிலதோத்திரங்கள் சொல்லி வணங்கினின்றனர். வந்தகுறிப்பை முனீந்திரர் அறிந்து அருகேயிருத்தி மங்களாசாசனம் செய்து சிவராஜயோக மெய்ம்மையைப் பிரபந்துஅவர்கட்குப் போதித்ததுமன்றி, இக்கலியிலுள்ளவர்களுக்கு வாணாட்கொஞ்சமும் முப்பிணிமிகுதியுமாதலால் அந்நோய்க்கிடங்கொடாதிருப்பதற்கான சித்தஔஷத மகாமூலிகைமுதலிய கற்பங்களு மீந்தனர். சிலகாலம் அச்சித்தரின் அடியார்களுடன் ஈடுபட்ட பிரபந்து மகாமூலிகைகளைச் சேவித்துவருந்தருவாயில் சார்வரி வருஷம் கார்த்திகைமாதம் ஏழத்தீச்சுவரத்தில் முனிபுங்கவர் நட்சத்

திய குருபூசை தரிசனார்த்தமாக நேரில்கண்ட அற்பு தத்தைக் குருபூஜாத்வயமென்று இந்துஸ்தானி பாஷையில் செய்து நலம்பெற்றுய்ந்தனர்.

இனி ஒன்பதாவதுயாகஞ் சமீபிக்கத் திரிசிரபுரம் இரத்தினபிள்ளையும், காங்கேயம் வேங்கட பட்டகாரரும் செய்த உதவியால் காவேரி நதியின் சிந்தாமணித்துறையில் வேள்விச்சாலை நியமித்து அம்பிகையையெழுந்தருளச் செய்து பூசை முதலியன கிரமமாக முடித்துப் பூரணாகுதி நிறைவேற்றுஞ் சமயத்தில் சிலரொருங்குகூடித் திருப்பரங்கிரி, திருச்செந்தில், திருவாவினன்குடி முதலியதலங்களினடக்கு மற்புதம் போல இவ்வேள்விச் சாலையினு நிகழுமோவென அசதிவார்த்தை பேசிக்கொண் டிருக்கையில் அம்மகசாலையில் நாற்புறத்து மமைத்து வைத்திருந்த பாற்குடங்கள் பொங்கி வழிந்து பெருக்கெடுத்து இரவு முழுவதும் பாலாறுபோலோடியது. அதுபொழுது காவைச் சோமசுந்தரம் பிள்ளை சித்தசாமியினை வந்துதரிசித்து வணங்கி நிற்கவவர்குறிப்புணர்ந்து நிற்கோராண்மகவு உதயமாகுமென்றருளிச்செய்து ஒன்பதாவது யாகத்தினைப் பூர்த்திசெய்துகொண்டு அம்பிகையினைச் சித்தசபைக் கெழுந்தருளச்செய்தனர்.

பின்னர், வைணவசமயத்திலே பிறந்து, நாராயணனிடத்திலதிக அன்பு வாய்ந்து சிவதூஷணை மலிந்து, செல்வநம்பியெனும் பெயர் புனைந்து நின்ற ஈரோட்சப்மாஜிஸ்ட்ரேட் செங்கல்வராயநாயடு என்பவர் தொழுநோயாற் றொடக்குண்டு பற்பல மருந்துண்டும் சிறிது நீங்காது நாளுக்குநாள் விருத்தியாக நொந்து மனம் வருந்தித் தினந்தோறும் திருமாலைப் பணிந்து ஆவாதி

ருவடியினையே தோத்தரித்து வருங்காலத்தில் அத்திரு பாலே வந்தாரென்ன வொருநாள் வக்கீல் நாராயணையர் அந்நாயடுபால் வந்து சித்த சுவாமியின் அற்புதமனைத்து மறிவித்துத் தன்னுட னழைத்துக்கொண்டு திருவானைக்காவை யடைய, சித்தர் முன்னிலையில் நாயுடு தனது சிவத்துவேஷத்தை யொருபால் கட்டி வைத்துத் தன் குறையனைத்துஞ் செப்ப, சித்தவேத கன்மகாண்டத்திற் குறித்தபடி அரசுக்கும், நந்தியடிகட்கும் நூறுகுடம் மஞ்சனம் செய்து, அம்பிகை சந்நிதானத்தில் ஒரு மண்டலம் வரையில் ஆயிரம் விளக்கிட்டு, அந்தணரோராயிரவர்கட்கு அன்னதானஞ்செய்து அம்பிகையின் திருநீற்றுப் பிரசாதத்தை யன்புடனேற்று அவிழ்த முண்டுவரின் இக்கொடிய நோய் திருமெனக் கட்டளையிட்டருள, அந்நாயடுவு மதற்கிசைய வப்பெருநோயைத் தீர்த்தருளினர். இன்னவுதவியை மறவாத செல்வ நம்பி வேண்டிய பொருளுதவிக் காவிரிச் சிந்தாமணித்துறையில் பத்தாவது யாகத்தினுக்கு வந்திருந்து போற்றி யாயுள் மறையிலதிக நம்பிக்கை கொண்டு வாழ்ந்து வருகையில், தன்னைக் கோயமுத்தூருக்கு மாற்றிவிட அந்நகருக்கும், தன்னுடனே வருதல் வேண்டுமெனச்சித்தரை வேண்ட அவர்வேண்டுகோளுக்கியைந்து அங்குச்சென்றார். வழியில் ஒட்டம்பட்டிப் பொன்னம்பலம் பிள்ளை யென்பவர் வந்தடுத்து, குறையிரந்து ஆட்கொள வேண்டுமென நிற்ப அவருக்குபதேசஞ்செய்து கோயமுத்தூரினை யடைந்தனர். இவ்விடம் வீற்றிருந்தபோது இராமண்ணு வென்பவர் வந்தடுத்து வணங்கி அனுக்கிரகம் பெற்றுய்ந்தனர். இன்னபதியிலமருஞ் சில கொடியர் சித்த முனிவருக்குத் தீங்

கு விளைவிக்கக் கருதி ஆகாரத்தின் வழியே விடத்தினை யூட்டுவிக்கச் சித்தருண்டு பேரூர்பட்டீசன் மீது தமிழ் மாலை சாற்றித் தீங்ககன்று வீற்றிருந்தனர். இவ்வுண் மையை நேரே தேர்ந்த பற்பல வித்துவான்கள் பல்பா மாலை சித்தருக்குச் சாத்தி மகிழ்ந்தனர்.

சித்தநாற் கடலை வாய் மடுத்தருந்தியவரும், கன்னிவாடிக்கதிபருமாகிய மல்லையாண்டிச் சாமி துரை கோவையம் பதிக்கு வந்திருந்தபோது தனது நண்பரும் சித்தமூர்த்திகளினன்பினீடுபட்ட வருமாகிய சப் மேஜிஸ்ரேட் செங்கல்வராய நாயடு வால் சித்தரினற் புதஞ் செவ்வனே தெரிந்திருந்தும், தான் படித்திருந்த சித்த நூல்களின் வல்லபத்தால் நாயடுவை நோக்கி நீர் கூறியது உண்மையாயினும் அச்சித்த ரெமக்குள்ள சிற்சில சந்தேகங்கட்குத் தக்க விடை பகர்வாரானல் அவரன்புக் கிடுபடுவதுடன் யாகசம்பூரணமு மிவ்வாண்டிலேயே நடத்து தற்காகப் பெருந்தொகையுங் கொடுக்கிறேனென, நாயடு சித்த மூர்த்திகளுக்கு விண்ணப்பிக்க அப்படியே திருவருள் கூட்டுவது போலாகட்டுமென மறுநாள்காலையில் பல மேதாவிகள் கூடியிருக்குஞ் சித்தாச்சிரமத்திற்கு ஜமீன்தார் வந்து சித்தருடன் அளவளாவி நீண்டகாலம் சம்பாஷணை செய்து முப்பூவினுண்மையினைக் கேட்கச் சித்தமூர்த்திகள்

அருணிறையு நாதவுரு வாகினேன்காண் அடிநடுவா முடிவாகி யன்பர்க்கென்றும், பருகமுத வாரியன்காண் நன்னுளுள்ளும் பரவினன்காண் முன்னிரண்டிற் பழுத்துளோன் காண், மருளறுநல் லுபசாந்த முற்றமேலோர் வாழ்த்தினன்காண் எனதுரையு மனத்துட்கொண்டு, கருணைசெயுந் திருமலைவாழ் கந்தன்றன்காண் கருத்தவன்காண் அவனெமதுகண் ணுளானே,

சொன்னசெய்யுளைச் கேட்கச் சித்தர் உள்ளபடியே திருவருட் பெருஞ்செல்வரென அவரிடத் தன்பு பூண்டது மன்றிப் பல்லோரறிய விந்தயாக சம்பூரணத்திற்கு முன்னுள்ள கையொப்பக்காரர் கொடுக்கினும் கொடாவிடினும் யானொருவனே வேண்டும்பொருள் கொடுப்பெனென வுறுதி கூறிச் சித்தர் மீதுபலசந்தச் செந்துறைப்பா வியற்றி விடை பெற்றனர். அவ்வமயமிருந்த நண்பர்களி லொருவராகிய சேற்றூர் கந்தசாமிக் கவிராயர் தனது நேரினடந்த வற்புதத்தை யாருமறிந்து களிகூர மகோபகாரவிளக்கமென வொருநூலியற்றி வெளிப்படுத்தினர்.

சில நாட்கழித்துப் பதினோராவது யாகசாலம் வந்தடுக்கவும், செல்வநம்பியும் துறைசைப் பதியாரும் கொடுத்த திரவியத்தினைக் கொண்டு நடத்த முயலுகையில், காவிரியின் கண்ணே பெரும் பிரவாக மோடுவதைக் கண்டு புவனாம்பிகை பக்தசன சித்த சபையில் யாக சாலையும், வேதிகைமண்டபமும் நியமித்துச் சருவலோக நாயகியைச் சிங்காசனத் தேற்றிப் பூசையாற்றி வேள்வியைப் பூர்த்தி செய்தனர், சின்னாளைக்குப்பின் சித்தமூர்த்தியின் தந்தையார் வழக்கம் போலக் கந்த சஷ்டிவிரத மனுஷ்டிக்க வாரம்பித்து, செந்தில் வேலன் வள்ளிபங்கன் அயில்வேற்கந்தன் சூரைவென்றோன் என்னையாண்டோன் இணையடிமறவாது ஆறு நாளும் மிளகுந் தீர்த்தமுமுண்டு விரதத்தைப் பூர்த்தி செய்து அது முதலாகவே நாளு முணவினை யொழித்துப் பாலொன்றே யுணவாக்கொண்டு பாரிற் பற்றொழிந்து பரனடியே பற்றாகக் கொண்டு எந்தை குமரேசனுடனிரண்டறக்கலந்தின் புறவெண்ணி வாழு நாளொருதினம்

தபடது புத்திரரை யழைத்துக் குழந்தாய்! சின்னாளைக்கு
முன் நீ நின்றாய்க்குக் கூறிய வுறுதியினை மறந்தாய் கொ
ல்லோ? நான் காணும் விதி சிறிது மில்லேனாயினும்
நீயோர் ஏந்திழையை மணந்து குலவிட விரும்புகின்
றேன் எனலும், சித்தர் உடனே தான் கொண்டிருந்த
யாத்திரைக் காவியினை நீக்கித் தந்தையை நோக்கி ஐய!
யானே கொண்ட சாவியினுடை நீ தானே நீக்கக் கரு
துவதாகக் கண்டேன் எங்குருவுள்ள நயந்ததுவு மீது
தானே யென்னத் தந்தையார் மற்றுஞ் சில தனியாகக்
கூறிப் பசுமயிலூரு பரனடி நீழலில், விளம்பி வருடம்
ஐப்பசி மதி யபரபக்கம் உத்திர நட்சத்திரம் அமர்ந்த
ருளினர். சித்த சுவாமி சௌமியமார்க்கத்தின்படி கொ
ள்ளிட தீரத்தில் சமாதிமுடித்துப் பஞ்சாக்கர மேடை
தாபித்து அவ்விடத்திற்கு முத்தீச்சுரமெனப் பெயர்
தீட்டிச் செய்கடன் யாவையும் ஈரைந்து தினஞ்செய்து
குருபூசை முடித்துத் தன்னன்ப ரொருவரால் ஆலய
மொன்று சமைப்பித்தனர். அவ்வன்பராவார், திருவரங்
கத்திலே வைணவ சமயத்திலே தாதாசாரியர்மரபிலே
பிறந்த சீனிவாசையங்கா ரென்பவர் பூர்வவினையினால்
தன்மனைவியொடும் தன்மத மொரீஇ விவிலியமதத்தை தொ
டக்குண்டு சாம்பர்லேன் எனப் பெயர் பூண்டு வாழுத்
தனது அறுபதாவது வயதில் குஷ்ட நோய் வாய்ந்து
அதுதீரப்பெறாது எங்குந் திரிந்து ஏக்கமுற்று வாடித்
தான் கோயமுத்தூரில் காட்டிலாக்காவில் ரேஞ்சு ஆபி
சராயிருந்து கொண்டிருக்கையில், சித்தரைத் தரிசித்
துத் திருவடியிற் பணிந்து ஆண்டு கொள்ளவேண்டு
மென வஞ்சலித்து நிற்கவுங் குரு சுவாமி மனமிரங்கிச்
சாப நிவர்த்தி செய்து எந்திரங்கட்டி யிறைவியரு ளெ
ய்துகவென விபூதியளித்து அனுக்கிரகம் செய்யப் பெ

ற்ற வொருவரேயாம். இவர் சூலை நோய் நீங்கப் பெற்றுப் பிரம்பலூரை யடைந்து சித்தர் பிரசாதத்தால் அரிய மாந்திரிகராகி யனேக பிரமராக்கதங்களை யொழித்தும், நோய்களைத் தீர்த்தும், செவிடுமை மாற்றியும் கண்ணளித்தும் வாழ்ந்தனர். இந்நாள் பனிரண்டாவது யாக முடிக்கு நாள் வந்துற்றது. இப்பனிரண்டாவது யாகம், யாகப் பூர்த்தி காலமானதால் அடிய ரனேகருடன் சீனிவாசையங்காரும் தங்களுக்குக் கிடைத்த பொருள்களைக் கொணர்ந்து சமர்ப்பித்தனர். கன்னிவாடி ஜமீந்தாரரும், நவத்துறை கனகசபை பிள்ளையும் ஐயம்பாளையம் தாண்டவராய பிள்ளையும் பலவுதவி புரிந்தனர். பொன்னிநதி தீரத்திலே சிந்தாமணித் துறையிலே காவணமிட்டு, வேள்வி குண்ட மியற்றி, புவனைத்தாயினை விமானத் திருத்தி நான் மறை முழங்க, மகமாற்றி வருகையில், நமது காருண்ணிய சக்கிரவர்த்தினியார் காசினியை நீங்கினரெனக் கேள்வியுற்று, தொல்புவியாளுகின்றவர் மாண்டால் குடிகள் அவ்வருடஞ் சுபஞ் செய்யப்படாதெனும் விதியினை யெண்ணி யாகப் பூர்த்தி நிறுத்தப் பட்டதனைத் துரைத்தனத்தாருக்கறிவிக்க மகாராணியர் சிரேஷ்ட செல்வப்புத்திரர் எட்வர்ட் மகிபர் கேட்டு வியந்து பதில் வந்தனமாக சென்னைக் கவர்னர் மூலமாய்த் திரிசிரபுரம் கலெக்டர் வழியே சித்த சபைக் காரியதரிசிக்குத் தெரிவித்தனர்.

இஃதிங்ஙனமாக, கல்யாணகிரியில் வதிந்த பாலசந்திர சரஸ்வதி என்பவரொருவர், ஆங்கிலேய தேயத்தர் ஆசாரியாகக்கொண்டு மகிழ்ந்த விவேக நந்தருடன் பலநாள் வாழ்ந்து பலதேச சஞ்சாரஞ் செய்தும் மனமடங்கும் பாங்கு சிறிது மறியாராய் இமயாசலமடை

ந்து ஆங்கோர் பெரியாரைச் சந்தித்துத் தங்குறையை க்கூறிவணங்க அம்மகான் உரைப்பாராயினர். பால! தென்றேயத்திலே சேலத்தினை யடுத்த கொல்லிமலையி னொருபாங்கர் பச்சைமலை யொன்றுண்டு. பூர்வத்தில் சுரர்களு மசுரர்களுங் கடைந்த பரவையினின் றமுதத் துளி சிதறி இம்மலையில் விழவே காளகூடமெனவும், வர்ச்சநாபி யெனவும், ஆலகாலமெனவும், பிரமபத்திர மெனவும், சாத்தூகமெனவும், சௌராஷ்டிகமென வும், ஆரித்திரமெனவும், சிருங்கிக மெனவும், பெருந் தீபனமெனவும், பெயர்வாய்ந்த செடியும் கொடிகளுமா யந்நாண் முதலிந்நாள் வரையு மமர்ந்துள்ள வாகலின் அவ்விடத்து வாழுஞ் சித்தர்குழா மவற்றைக்கற்பவுண வாக்கொள்வர் அத்தகை மலையின் கண்ணேயொருவரு ளர். அவர் பரிபாக மமைந்த புண்ணியர்களுனக்கண் ணுக்கும் வெளிவந்துலவா நிற்பர். வினை மாயாதவர் காணவறியார். அவர் கருணையடைந்து பலமுனிவர் மாமலயம் சதுரகிரி முதலிய பலவிடத்து முயர்தவம் புரிந்து வருவர். சிவை சொரூபமாக விளங்கும் பச்சை மலையினையும், சிவசொரூபமாக விளங்குஞ் கொல்லிமலை யினையும் கண்டவரே வினைவிண்டவராவர், இம்மலை களிலேயே கருமை வெண்மை சிவப்புமான சித்ரமூல மும் சர்க்கரை வேம்பும், சஞ்சீவினி யாதியு நிறைந்தோ ங்கும். இவண் வாழும் முனிவர்பால் செல்கவெனப் பணித்தனர். அவ்வாணையைச் சிரமேலேற்று அங்ஙன மே பச்சைமலையடைந்து முனிவர் பெருமானைத் தரி சித்துத் தொழுது மெய்ப்பதறி மலர்ப்பாதம் வணங் கிக் கண்ணீருங் கம்பலையுமா நிற்கையில் முனிவர் இவர் முகநோக்கிச் சரசுவதியே! அஞ்சேல் சின்னாளைக்கு

முன்னர் நம்பாலிருந்து காவைக்குச் சென்று நங்கட்டளையின்படி புவனையாகம் புரிந்து பலவிப்பிரமுடன் ஞானசித்தன் வாழ்கின்றனன். அவன்பாலடைந்து அன்னைகடனைத் தீர்ப்பதற்கன்றுநாமனுப்பும்போது கிரகத்தாசிரமத்துற்றுச் சமரசச்சீர் வருக்கும்வரை மகமுனாற்றி உலகவர்போல் வதிவாயென விதித்ததனை ஞாபகமூட்டுவாயெனக் கட்டளையிட, அக்கட்டளையினைச் சிரமேற்கொண்டு சரஸ்வதி திருவானைக்காச் சித்தசபை வந்தடைந்து அன்று பூரணைநாளாகலின் அங்குள்ளவருந்தவரோடளவளாவி ஞானசித்தரையங்குக்காணது வருந்த, இன்றேவருவரெனச் சிலர்கூறக் காணுமலே கேனென்றிருந்து ஞானசித்தரும் வர அவர் தம்படி. பணிந்து பச்சைமலைநாதன் குறித்தபடி கூறி விவாகவுரை நன்கு புகலாது விடைபெற்றகன்று, வியாசபூரணையும் ஓர் விஞுமென வொருபத்திர பச்சிட்டதில் மகத்தியல்பு மதன்பயனும் விரித்தே வெளிவிடுக்க வதற்குப் பிறரால் விடைபெற்றுப் பச்சைமலை யடைந்து அவ்விடையைத் தெரிவித்துக் குருசாமியைப்பணிய அவர் யாமுரைத்த தனைக் கழறவில்லையோவென, நேரே யுரைத்தற் கஞ்சினேனென அவரு மன்பால் மறுபடியுங் கூறலுற்றனர், பால! குரைகடலுண்ட குறுமாமுனியும், வையமேத்தும் வசிட்ட விருடியும், வினையோருங் கொழித்த வியாக்ர பாதரும் தங்கள் குலபத்தினிமாருடன் முறையையாகப்பல்வேள்விமுடித்தே சித்தித்திறங்கண்டார், அதைத்தெரிவிக்க எனக்கூறக்கேட்ட சரஸ்வதியுடனே யானைக்காவடைந்து பத்திரம் வரைந்து சித்தருக்கு விடுப்ப நோக்கியதை மறுப்பதற்கஞ்சித் தமது குரவனிருக்கைக் செல்வான் கருதி யிருந்தனர் சித்தர்,

பச்சைமலைக் கேகுவா னெண்ணங்கொண்டிருந்த சித்தர் பதின்மூன்றுவதுயாசம் புரியு மமையம் வாய்ப்பத் திரிசிரபுரம் போலீஸ் டிபார்ட்மெண்ட் பார்த்தசாரதி ஐயங்காருர், சேலம் ஆனமெரில் விஜயராகவசாரியார் முலையாகப் பலபகிமைகளையும் முன்னமே தெரிந்து கொண்ட நாமக்கல் ஜமீன்தாரிணியும் சிவநேசச் செல்வியுமாகிய முத்தாலம்மையாருமிக்கபொருளையுங்கொண்டு காவிரிச்சிந்தாமணித் துறையில் புவனம்பிகைத் தாய்க்குச் செய முறைபோற் சிறக்கச் செய்ய அவ்வைபவ மனைத்தையும் வெள்ளி விளக்கமென அருந்தமிழ் தேர்ந்த தென்திருப்பேரை அநந்தகிருஷ்ணையங்கார் யற்றி வெளியிட்டனர். மகமுடிந்தபின் குருபிரான்றனைக் காண மனத்து ளெண்ணிச் சித்தர் பிரயாணமாயினர். செல்லும் வழியிலுள்ள பிரம்பலூரில் டிப்டி கலெக்டர் துரைசாமியையங்கார் என்பவர் தன்பால் வந்த நந்தி நாடிசோசிய ரொருவரை நோக்கித் தன் குலத்தி லொருவருக்கு நாடி நூல் பார்த்துரையென்ன, அவர் சங்கையறவாராய்ந்து அவனோய்கொண்டுளானென்றும் அந்நோய் தீர்தற்கு ஒருசித்த ரெழுவ ரென்றுங்கூற, அச்சித்தர் யாவ ரெங்குள்ளார் செப்புமவரைக் காண்பதெவ னென்ன, அவர்பச்சைமலை நாடி இவ்வழியே வருவர் காண்பீரென, அவ்வமயம் அவரும் வந்தடுப்ப சாம்பர்லேன்வந்துசித்தநாதரைத் தரிசித்து வணங்கி வாழ்த்த வதுபோது பொறையினையே பூடணமாக்கொண்ட தாசில் ராஜமையரென்பவர் தூய்மையே குணமாக வாய்ந்த துரைசாமியையங்காருக்குத் தெரிவித்து இருவரும் வந்து நோயாளியின் றன்மையைக் குறிப்பிக்க யாவுமுணர்ந்து பச்சைவரைக்

குச் சென்று திரும்புகையில் அப்பாளருளா லகலுமெ னச் சித்தர் விளம்பி, சிலரோர் தம்மைச் சூழ்ந்துவரப் பச்சைமலைத் தேசிகர் சந்நிதான மடைந்து எல்லா மறிந்தோய்! எளியேன் கருத்தையு முணர்ந்தோய்! எந்நிலைமமா றுறவை யொருபொருளெனக் கொள்ளும் வகை யெற்கானை யிட்டதென்னையோ? குறிப்பறியேன் எனவிஞ்ஞாபனஞ் செய்யுஞ் சித்தரைநோக்கி, செல்வ! யாமுணர்த்து முரையே நினக்கு நான்மறையாம். அஃ தறிந்தும், சரஸ்வதிபா லியாமே யுரைத்த மொழிமறு த்து மிருந்ததென்னோ? முன்னாள் நினது நகர் செல் லென மொழிந்த பொழுதே யுரைத்தநெறி தன்னையு மறந்தாய், தாயுரையுந் தடுத்தாய், தந்தைதனக்குரை த்த வுறுதியு மறந்தாய், சித்தமார்க்கத்து நிலையு நம்ம ரபுக்கொத்த விதமு மோர்ந்திலை. தெய்வப்புலமைத் திருவள்ளுவ தேவர் திருவினை நிகர்த்த வாசுகியுடனே நின்ற கருத்தும், காயகற்பம் பேதமிலாது முடித்தற்கு எவரு மதிக்கு மேலேலசிங்க ரெமக்கருளியது மிதுவே யாகும். புண்ணிய முனிவரும் புகழ்வாய்ந்த விருடிய ருந் தமக்குச் சித்தித்திறம் வருமட்டுங் கிரகத்தாசிர மத் திருந்தனர். யாமு மங்ஙனமே யிருந்தன்றோ பின் னரிவ்வரையின்பாற் சேர்ந்தோம். நினக்கு மிந்நெறி யே தக்கதென வுரைத்தோமென வருளுதலும், சித்தர், பெருமானே! தேவரீரெற் குணர்த்தும்படி முதலில் எடுத்த தறியேன், சரஸ்வதி விடுத்த மறுபத்திரிகை தேவரருள் கொண்டே வரைந்த குறிப்புணர்ந்து வந்த டுத்தேன். சந்நிதானத்து நோக்கம்போற் செய்வே னெனைக் கைவிடாதருள் என விஞ்ஞாபனஞ் செய்து கொண்டு விடைபெற்றுத் திரும்பும்வழி தமிழ்மாலை

பலவியற்றிப் பிரப்பலூரை யடுத்தூர் முற்குறித்த நோயு
டையாரைத் தன்னுட னழைத்துக்கொண்டு திருக்கா
வை யடைந்து சித்தசபையி லெழுந்தருளி யிருந்து
தன்னுடன் வந்தார் பிணியைச் சிந்நாளுட் போக்கி வா
ழுகையில், சிலவைணவ வன்பர் வேண்டுகோளுக் கிரங்
கித் திருவரங்கமாலையெனு மொருநூல் பாடித்தரக்
கண்ட வைணவர்கள் சடகோபரை நிகரா யவதரித்தா
ரென்றார் சில்லோர், தொண்ட ரடிப்பொடிகள் மாலை
யிந்த மாலை யெனமகிழ்ந்தார் சில்லோர், இத்தகைய
மாலையை டிப்டிக் கலெக்டர் துரைசாமி ஐயங்கார் அச்
சிட்டு வெளிப்படுத்தியபின், சித்தரைத் தாமூரையும்
அரியலூரினுக்கு அழைத்துக் கொண்டுபோக அவ்வூ
ரில் வைக்கில் சிவராமையரது குழந்தைக்கு அநுக்கிரகித்
துத் திருப்பழுவூர்ப் பெருமானுக்கும் பதிகமோதிக் கா
வைக்குத் திரும்பிப் பற்பல திருவிளையாடல் புரிந்து
சீர்த்தியுற்று வீற்றிருந்தனர்.

அக்காலத்தில், காரைப்பழிக்கும் கரதலத்தனா
கிய சின்னப்ப கவுண்டரென்பார் கோயமுத்தூர் வெ
ள்ளக்கிணறு எனுமூரில் நீர்வியாதியால் துன்பங்கொ
ண்டு ஆங்கிலவைத்தியம் பலவற்றானு நீங்காமை கண்டு,
புகழுமாம் பட்டித் தமிழ்ப்புலவர் ஆறுமுகப்பிள்ளை
யென்பவர் குறித்தவண்ணம் அவருடன் சித்தர்பெரு
மானையடைந்து வேண்டி மருந்துட்கொண்டு பிணிதீர்
ந்து உயந்தனர், சித்தமூர்த்திகள் மருதமலைக்குப்பதி
கம்பாடிப் பதினான்காவதுயாசம் ஆரம்பித்து அரியலூ
ரையங்காரும் வெள்ளக்கிணற்றுக் கவுண்டரும் கொடு
த்ததிரவியத்தினைக் கொண்டு காவிரிச் சிந்தாமணித்து
றையில் மாமறையோர் நான்மறை முழக்கெடுப்பப்

பூர்த்திசெய்து நன்குவீற்றிருந்தனர். இதுகிடக்க ஈங்கோய்மலைக்கும், இரத்தகிரிக்கும், கடம்பர்கோயிலுக்கும் பதிகங்கள் கட்டளையிட்டு, தம்மரபினர் விடுத்த வதுவைப் பத்திரத்தினைக் கண்ணுற்று இதுசெந்திற்குமரவேள் அருள்பெறுமட்டு முடியாப் பான்மையென்று திடங்கொண்டு செயந்திபுர மடைந்து பலபதிகஞ் செப்பியொருதரம்போற் பலதரமப் பெருந்தகைதனுளப்பாங்கைத் திருவருளாற் றேர்ந்திருந்தனர். பூரணை நெருங்கியது அக்காலத்தில் திருச்செந்தூர்க் கெடுக்கும் காவடியைத் தொட்டு கொடுக்கும்படி சித்தரை வேண்டிக்கொள்ளவும் அவ்வமயம் சித்தர் நேராதிருந்திடினும் காவடி செந்தூரினுக்குச் செலுத்திக் கொணர்ந்திறக்குகையில் அம்மூர்த்தி நேர்ந்தமையின் மிகக் களிகூர்ந்து அம்மன் புரத்தில் இடும்பன்பூசை புரிந்து உடனே சித்தமூர்த்திகட்கும் திருமஞ்சன முதலிய முடித்து ஆனந்தித்த எட்டயச்செல்வரும், இன்சொல்லனை வெவருமதிக்கும் இராமண்ணவும், சொற்சோர்வு படாத சுவாமிநாதக் குரிசிலும் சூழ, கௌதம தீர்த்தத்தருகே கொட்டகை யமைத்துப் புனித வாத்திய முழங்க அம்பிகைக்கு வழக்கபோல மாதவோம முடித்துச் சித்தர் குருகூரைச் சார, குணத்திற் சிறந்த ஆற்றூர் கோபாலையர் முதலிய செல்வர் பல்லோர் எதிர்கொண்டழைத்து வந்து ஒருமாளிகையி லிருத்தி வர்த வடியார்க் கெல்லாம் நால்வகைப்போசன நன்கு படைத்தனர். சித்தர் திருநெல்வேலிக் கெழுந்தருளினர். அந்நெல்லையம்பதியிலே தொண்டர் நயினார் கோயில் வீதியிலே செல்வரும் புகழுஞ் சீலமும் வாய்ந்த சீதாராம் பிள்ளை மாளிகையிலே எழுந்தருளியபோது

பல்லோர் வந்தடைந்து தங்குறைகூற அவரவர் வேண்டுவன வெல்லா மரபிற் செய்தனர். சித்தரி னற்புதச் செயலனைத்தும் திருவாமாத்தூர்ச் சந்த சரபம் தண்டபாணி சுவாமிகளால் முன்னமே தெரிந்திருந்த சுகிர்த குணச் செல்வராகிய சோமசுந்தரப் பிள்ளையும் வந்து தரிசித்து மகிழ்ந்தார். அத்தருணம் பூரணைவந்தெய்த திருவுரு மாமலையென்னுங் குறுக்குத் துறையில் அன்பர் அலங்கரித்த மண்டபத்திடையே முனிசிப்பல் கமிஷனர் சங்கரக் குமருபிள்ளை, பெரியசாமிபிள்ளை, முத்தையபிள்ளை, முனியப்பபிள்ளை முதலிய உத்தம சிவனடியார்கள் வேள்விக்குரிய பணிசெய்ய வோமம் புரிந்தனர். அவ்வமயம் சித்த தேசிகர் கருணையங் கடலாகிய கந்தவேள் மீது பாடியதோர் பாமாலை தனைப்படித்து நெல்லையப்பக் கவிராஜன் ஈசுரமூர்த்திக்கவிராயர், சேற்றூர் அருணாசலக் கவிராயர், கந்தசாமிக் கவிராயர், பால்வண்ண முதலியார் முதலிய வித்துவ சிரோமணிகள் பொருள் விளக்கிப் பூரித்தனர். உடனே வடுகேசர்க் காருதியை விருப்போ டியுமமையத்துத் தெய்வீகத்தால், சகந்நாதராஜா வென்பவரின் சிரம் மண்டபத்திலே மோதச்செந்நீர் பெருக்கெடுக்கச்சித்தர் வயிரவர் பிரசாதம் அளித்து அஞ்சே லெனக்கூறி வடுநீர்ந் துய்வையென ஆசியளித் தனுப்பினர். அற்றைநாளிரவிலே அச்சகந்நாத ராஜாவின் கனவிலே சித்த ரெழுந்தருளி யுஞ்சிரத்தே யிற்றை நாள் காட்டியதெலா நன்மைக்கென்று கூறப்பெற்ற,

காரணமு நன்றே கலங்கேல் சிரத்தினடி
சீரணம தாக்காது செல்.

என்ற குறள்வெண்பாவை யவர்விழித்து வரைந்தருளி மற்றைநாள் சித்தர்பால்வந் திவையெல்லாம் புகன்று தன்சிரத்தே நெருநல் கண்ட துயரனைத்து மின்றெனக் கூறி விடைபெற்றுச் சென்றனர். அந்நாள் சங்கரக் குமாருபிள்ளை பத்தினியாருக் குண்டாயிருந்த நோய்த்துயரகற்றிப் பிறவிநோய்த் துயருமகற்றுமாறு அம்பாளருமை மனுவினையுபதேசிக்க அதுமுதலவ்வம்மையார் படிப்பறியாராயிருந்தும் ஆயிரக்கணக்காகப்பாஷைக்க வாரம்பித்து முக்கால நிகழ் வினையுமங்கைநெல்லிக்கனிபோ லறைவாராயினர். நிற்க, நெல்லைநகர்க் கணித்தாகவுள்ள கயத்தாறி லொருமாதினுக்கு ஏவனோயாற் செந்தீப்பற்றல் முதலியதீமைவிளைய அம்மாதினை இராயப்பபிள்ளை சித்தர்பால் கொணர்வான்கருதிய போதே சிறிதுநோயகல அருட்பார்வையின் முன்னே விடுக்க, தெய்வநீற்றான் முற்று நீங்கிச் சுகமாயது. அங்ஙனமே முன்னரும் அக்கயத்தாற்று முத்தையபிள்ளையருமைப் புத்திரிக்குங் கண்டிருந்த ஏவனோயுஞ் சித்தர் திருநீற்றானீங்கியது.

இங்ஙனமாக, சித்தமூர்த்திகள் திருமணத்திற் கிசைந்தா ரென்ன மங்கள மொழி யெங்கும் பரவ அவர்மரபுக்கியைந்த பலநகரிலுமுள்ளோர் தத்தமகாரினைக் குறித்திருந்தார். கேட்ட சித்தர் பொன்னிரத கசதுரக மாளிகையாதிய பொரு பொருளென் றெண்ணேம், மின்னுமிடை யன்னநடை மாதர் வனப்பினிற் சிறிதும் விருப்பம் வையோம், அன்னை புவனம்பிகை சுந்தரி கௌரி மலரடிக்கன்பு பிரியாது புரிபவளாக் காண்மினெனக் குறிப்பித்தார், அன்னபொழுது வெள்ளகிணற்றுச் சின்னப்பகவுண்டர் தன்னகரமட்டும்வந்தருளவே

ண்டுமென விறைஞ்ச முன்னர்ச்சென்று வருகையைத் தெரிவித்திட அருகிலுள்ள சிகாமணிசாமியைச் செல்லென்று அனுப்பிப் பின்சமீபத்திருந்த சாமிநாதமுதலியாரைநோக்கிக் கன்னிகைமார்க்குள் ஆசாரம், தெய்வபத்தி, நற்குணம், கல்வியாதிய வமைந்ததோர் மாதினைப்பார்த்துவருவீரென வாஞ்ஞாபித்துத் தாம்கோயமுத்தூரினுக்கேகினர். சித்தரெழுந்தருளுவதைச் சின்னப்பவே யுணர்ந்து எதிர்கொண்டுபசரித்துச் சென்று அத்தலத்து நாட்டுக்கோட்டை வேங்கடாசல செட்டியாருக்குச் சித்தரினற்புதம் பலவுமுரைத்து அவர் முன்னுந் தாம் பின்னுமாகத் தெரிசித்திட வரவும் தற்செயலாய் சித்தரால்வரைந்த கடிதமுமதிலொருபாவும் அது தனக்கமைந்தே யிருத்தலுங்கண்டு செட்டியார் தனது நினைவிலொன்றுந் தோன்றாது இச்சித்தரிடத்தே திருவருள் நிலைத்திருப்பதென்றுமனதுவந்து தன்குறைகூறிச் சித்தர் முந்தி நடத்திய மகத்துக்கு ஏற்பட்டிருந்த ஓராயிரம்ரூபா யனுப்புவித்தனர். அவ்வமயம் பலவிடத்திருந்துவரு மணச்செய்திகளைச் சிவநேசச் செல்வராகிய அருணாசலம் பிள்ளை யவ்வப்போது சித்தர்பால் மொழிந்துவர யாதொன்றுக்கு மொப்பினதாய சித்தர் விடைபகராது வாளா விருந்துகொண்டிருந்தனர். சித்தர் ஆணையைச் சிரமேற் கொண்டு சென்ற அன்பராகிய சாமிநாத முதலியார் தென்காசிப்பதியில் திருநிகர்த்த வொருபெண்மணியைத் தான் தெரிசித்ததாகவும், அம்மணி சித்தருக்கொத்த கண்மணியெனவும் அந்நன்மணியை மதியொன்றுக்குள்ளே மணமுடிக்கவேண்டுமென்வும் மாதமுடியவோ வாரமொன்றே யுளதெனவும் சித்தர் கருத்து ஏதோ வெனவும் சித்தசபையாரு

க்குத் தெரிவித்தனர். சபையார் கண்டு சித்தர் திருவு ளக் குறிப்புணர்ந்து, பிலவவாண்டு சிங்கமதி மூப்பா ஞெருதேதி சித்திரைநன்னாள் பானுவாரம் குலவிய சுபதினத்தில் கன்னிநாட்டுத் தென்காசிப்பதியில் கங் கைகுலங் களிக்கவந்த பழனியாப்பிள்ளை சுபுத்திரி சீதாலட்சுமியாம் நம்மன்னைக்கும் சித்தமூர்த்திக்கும் திருமணமெனப் பத்திரிகை யெங்கணும் விடுத்துச் சீடர் பல்லோர் சித்தமூர்த்திகள்பா லஞ்சலிசெய்து திருமணத்துக் கெழுந்தருள வேண்டுமென, இறைவி திருவருளேயெனக் காலைக் கெழுந்தருளினர். சித்தர் திருக்கல்யாணந் திருவானைக் காவிலெனத் திசையனை த்தும் பரவ இச்சுபசெய்தி யனைவோருங் கேட்டள வில் இறும்பூதெய்த, புவனம்பாள் பக்தசன சித்தச பைக்கோர் கண்மணிபோன்ற மழபாடி ஆறுமுகநயனு ரென்பவர் சித்தர் மணக்கோல தரிசனந் தரிசித்தற் பொருட்டு வரும் சிவனடியார்கட்கும், செந்தமிழ் புல வர்கட்கும், சிற்றரசர்கட்கும் சிறப்பனைத்து நவநவ மாகச் செய்திட பற்பலரை விடுத்து நடத்திக்கொண்டு வந்தனர்.

தென்காசிப்பதியிலே தவத்தாலுதித்த சீதாலக் குமி யென்னு நம்மன்னைக்கு உறவின்முறையாருள் மங் கல நன்மகளிர் பலர் சூழ்ந்து மங்களஸ்நானம் புரிந்த னர். பொற்புற்ற பீதாம்பர முடுத்தி பன்மணிகளா லிழைத்த உரிய ஆபரணங்களையும் பூட்டினர். கற்பகப் பூங் கொடியனைய வன்னைதனைப் பல்லலங்காரங் கவினச் செய்தபின் மறையவர் குறித்த நன்முகூர்த்த காலத் திற் றாம்பூல மாற்றி, மங்கல வாத்திய முழங்கச் சிவி கையி லேற்றித் திங்கண்முகப் பாவைமாரெங்கணு நின்

றேத்தெடுப்ப அன்பர்குழா மெம்மருங்கு மிறும்பூதெ
ய்த நெல்லைநகரை வலஞ்செய்வித்தனர். எத்தனையோ
பேர்கள் தத்தம் எழின்மகாரை நிச்சயமுடித்துந் திரு
மணத்துக் காவணமெலாஞ் செய்தும் அன்னோர்க்குள்
ஒருவருக்கு இப்பாக்கியங் கிட்டாது, இவ்வன்னை செ
ய்ததென்ன புண்ணியமோ வென்பர் சிலர். பணவளம்
நிலவளம் எழில்வள முதலியவற்றோடு பொருளும் சன
ச்கட்டும் வாய்ந்த கன்னியர்களெண்ணில ரெதிர்நோக்
கக் கண்பாராதிருந்த சித்தரிவர்க்கிசைந்த தென்னே
யோ வென்றார் சிலர். சாதனஞ்செய் ஞானசித்தசாமி
தவத்துக்கியைந்த தையலென்பார் சிலர். ஏதிலார்க்
கருள்புரியுங் காருணிய மிவர்முகத்து மிசைந்த தென்
பார் சிலர். இங்ஙனம்தாதவிழ்ந்த தொடையணிந்த தரு
ணிகள் தனித்தனியே சாற்ற, நகரை வலமாகவந்து
சிவிகையினின்று மிறங்கிய வன்னையைப் பலருபசரிக்க
வந்தார் யார்க்கும் நால்வகையுண்டி யறுசுவைக் கறி
யோடளித்து, பன்னீரோ டடைகாயு புட்பமுமீந்து
தேங்காய் வழங்கி, பின்னர் நஞ்சீதா லட்சுமித் தாயி
னோடுஞ் சுற்றத்தார்சூழக் காவை நோக்கிப் பிரயாண
மாயினர். சாமிநாதக் குரிசிலு முடன் வந்தார். அங்ங
னம் வந்தா ரியார்க்கும், கல்வியாளர் கழகத்திருந்து
கனிந்த சொல்கழறிக் களிக்கச்செய்பவரும், செல்வர்
சபையிற் சிறக்கவிருந்து சீரியவார்த்தை செவ்வே செ
ப்புபவரும், பெரியோருடனே பெரிது மிருந்து பெற
லரு ஞானம்பேணி வாழ்பவருமாகிய செய்யூர் ஜமீன்தா
ரர் சுப்பராயமுதலியா ரென்பவர் திருவரங்கத்தில் மா
ளிகை யமைத்து அதிலிருக்கச்செய்து பற்பல வுபசா
ரங்களுடன் விருந்து செய்தபின் நன்முகூர்த்த நாடி.

அனந்தவித வாத்தியங்கள் மிளிர ஞானசித்த மணமகளையழைத்து வந்தனர். திருக்கல்யாண சடங்குநிறைவேற்றுவதற் கமைந்தநாளில் திருமுளைப்பாலிகை யமைத்து, வீதியிலிட்ட பெரும்பந்தரில் தோரணங்களும் கொடிகளும் புனைந்தனர். பூரண கும்பங்கள் வைத்தனர். மலர்த்தாமந் தொங்கவிட்டனர். பந்தர்நடுவே வேதிகை யமைத்தனர். தீபமேற்றினர். சித்தசுவாமிகள் காவிரியினீராடி மணிப்பட்டாடை யுடுத்தி விபூதியுத்தூளனமணிந்து திருவருளைத் தியானஞ்செய்து, பலபல வாத்திய முழங்கச் சித்தசபையார் பரிவிற்போற்ற, குறுமுனிபோல் நம் குருமணி குலவிய பொற்றவிசில் வீற்றிருந்தனர். அவ்வமயம் வெள்ளக்கிணற்று சின்னப்ப வன்னனும், வேங்கடாசல செட்டியாரும் வந்து சேர்ந்தனர். சித்தசபையின் வெளிசேயூத்து அடியர்களும், நாவலர்களும், செல்வந்தர்களும், யோகிகளும், மறையோர்களு மெண்ணிலர் வந்தடைந்தனர். அங்ஙனம் வந்தடைந்தோர்கட்கு, நடேசையரும், சாமிநாதபிள்ளையும், ஆறுமுக நாயுடுவும், சேஷய்யரும், இராமண்ணாவும், சகந்நாதராஜாவும், வேணுகோபாலு நாயுடும், நேர்நின்று உபசரித்து அடிக்கடியே வரவு விசாரித்து அவரவர் தகுதிக்கானபடி மகிழ்வுசெய்தனர்.

வேதியர் மறைமுழங்க, வாத்தியங்கள் பலவொலிப்ப, வேள்விச்செந்தீ நீதிமுறை யந்தணர் வளர்க்க, அன்பர் பலர் நெருங்கி நிற்க, பைந்தொடியார் மங்கல வாழ்த் துரைக்க, மலர்மாரி சொரிய, மங்கல வேளையில் சித்தர் கரத்தால் மணமடந்தைமலர்க்கை தன்னிற் கங்கணஞ் சாத்தி யட்சதை வைத்து, ஆசுப மந்திரம் பலவு மருமறையோர் புகல அருட்பெருங் குரவர்வார்

த்தையையும், இருபெருங் குரவர் வார்த்தையையும் தப்பாமற் றிருமணத்தைக் கொண்டருளும் சித்த சுவாமிகள் சிதாலட்சுமியின் சங்குறழ் மிடற்றில் மங்கலநாண் புனைந்தனர். தீவலம் வந்தனர். திகழம்மிதனை மிதித்தனர், வடமீன் றன்னைத் தொழுதேத்தினர். மனையுட் புக்கினர். கனியொடு பாலன்ன நுகர்ந்தனர். வசிட்டரென்னப் பன்னியரோ டினிதிருந்தனர். திருவள்ளுவர்போ லில்லற நடாத்தி வருவாராயினர். இத்திருமணச் சிறப்பைச் செய்யூர் சுப்பராயமுதலியார் பதிகமாகப்பாடிப் படித்தனர்.

திருமண நிகழ்ந்த பின்னர் மைசூரைச்சார்ந்த மங்களூர் முதற் பிறபதியினின்றும் பலர் சித்தசபைக்கு வந்தனர். தூற்றுக்குடி மூன்சிப்கோர்ட் வக்கீல் ஆறுமுகப்பிள்ளையுஞ் சார்ந்து மருந்தருந்திப் பிணிதவிர்ந்து இருந்தநாள், அவருடன் சொர்க்கபுரம் மடாதிபதி சதாசிவதேசிகர் வந்து சித்தரைத் தம்மாதீனத்திற் கெழுந்தருளும்படி வேண்ட, சின்னாளைக்குப்பின் வருவதாகக் கூறியனுப்பியபின் திருநள்ளாறு முதலிய தலங்கட்குச் செந்தமிழ்ப் பதிகம்பாடி, எதிர்கொண்ட சின்மயானந்தர் சித்தமூர்த்தியை நோக்கிச் சுவாமின்! நவத்துவாரமும் நாற்றமும் பொருந்திய நடலைச்சரீரத்தின்கண் நான்வசிப்ப தெவ்விடமெனச் சிறுபிராயத்திலேயே சிற்றறிவிற்றோற்றிச் சிலநண்பரோடு கேட்குமாறு கேட்க, அந்நண்பர், பெரியாரிடஞ் சென்றால் விளக்குமாறு விளக்குவரென்றனர். உவர் நீராற் சூழப்பெற்ற இவ்வுலகின்கண்ணே பெரியரெவ்விட முறைவர் எவ்விதமிருப்பரெனத் தேடித் தேடி யோடி யோடி நாடி நாடி வாடி வாடி மயங்குங்காலத்தே எனது நற்றவமுதிர்ச்

சியால் சித்தமூர்த்திகள் இங்கெழுந்தருளப் பெற்றனர். எனக்கூறி அச்சத்தோடு குப்பிட்டு அனந்தமுறை தெண்டனிட்டு மனந் தூய்மையாவதற்கு எவ்விதவழி பாடு வேண்டுமென்றனர். சித்தமூர்த்திகள், தீயநினைவு களை நீக்கினலேதுவே அமையுமென்றனர். இன்மையானந் தர், தீயநினைவுகள் எவையென்றனர். சித்தமூர்த்திகள் பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ்சனை யால், அது கொள்ளுமாறுங் கொண்டவைதனைத் தாம் புலன்களை நுகருமாறு முதலியனநீக்கி மனத்தின் றாய் மையால் அறமெலாம் பெறும். அறமெனப்பட்ட யாவு ம் மன்னுயிர்க் கோருயிராகவும் மனத்துக் கோரணி யாகவும், நெஞ்சத்திற்கொரு செல்வமாகவும் வழங்கு மியல்பினை உடையனவாகையால், பிரசரியன் முதல் புறத்துத்தோன்றும், வேற்றுருக் கோலங்காட்டி அக த்து ணுழையாவறமோ வறத்தின்பேறும் பெருமையு முடைய வென்பர், எப்பொருளினும் அதனுண்மை யுணர்ந்தாலே ஞானம் உணர்ந்த பொருள்களில் இவை யே நல்லவை இவையேயல்லவை எனவும் தெளிதலே காட்சி. தெளிந்தவழியே அல்லவை யொருவி நல்லவை மருவியொழுகலே யொழுக்கம். இந்நல் லொழுக்கமே அனைத்தறனுகையால் இவையெலா மனமுயற்சியாலாக வேண்டும், மனமொவ்வார் அறமெலாம் பொய்யென விகழப்படுவது முறையே, அன்றியும் பிறர்நோய் கண்டகத் திரங்கான், ஐயோ வெனவாய் பொய்த்த விரக்கங்காட்டல் தயையோ, நெஞ்சங்கடுத்த சுடும்ப கை கொண்டான் முகநட்பது நட்போ. ஒன்றீந்தொரு பத் தடித்துக்கொள்ளத் துணிந்தான் பிறர்க்கீந்துதவு தல் கொடையோ, மனை நகர் நாடு மகலநீக்கி யுட்பொ

றுவின்ப மணுகுபாசை நீங்கான் மறுதுணையில்லாவன ம்புக் குறைதல் துறவோ, பிணியுறப் பசிமிகப் பகைப் படமொய்த் துன்பமின்பமென வுணர்ந்தகங் கலங்கா தான் புறத்தும் புலர்பா திருப்பது பொறையே. பிறர றதாசை மனம்புகாத் தன்னிறைகாத்த மகளிர் புறத் துக்காட்டு மொடுக்கமுங் கற்பே, தன்மனக் கோட்டங் கண்டு நாணுதல் நாணமே. மனத்தினிறைஞ்சிப் பிறரை ப்பணிவான் புறத்துப்பொய்யாச் சொல்லின் வணக்க மும் பணிவே. உளத்திற்கலங்கா தெதிர்வெம் போர்மு கத்துஞ் சான்றுணிவாய சேவகந்தானும் வீரமே. இவ் வாறனைத்தறன் மனத்துக்கண் மாசிலனாதலாகுமன்றோ அன்றியும் உள்ளொவ்வாமற் புறத்துத் தோன்றுஞ் சித் திரவறத்தின் சாயலும் பயன்றரு நல்லறமெனப்படுமா யின் ஒருவன் கொண்டாடிய கருங்கட்பாவையும் வே றுபாடின்றி யொக்குமெனவுங் கண்ணே கனியவழகு காட்டி யுள்ளாருயிர் கொல்லும் நஞ்சுடைக் காஞ்சிரம் பழமும், புறத்துவீசுமணமே வொப்பவகத்து மினிய தேறல் கொண்டமாங்கனி தானுமொன்றெனவும், ஒள் ளிய ஒவியப்படமு முயிர்பெற் றிமிழ்வாழுடலு மொன் றெனவு மிவை வேறல்ல வென்புழியன்றோ, முகத்தெ ழும் பொய்யறச்சாயலு நெஞ்சில் வீற்றிருந் தினிதிற் புறத்துத் தோன்றுமெய் யறமாட்சியு மொன்றெனச் சொலவும்படுமே. பசியபொற் றாணிரைத்து நாட்டி நீண்டுயர் பவழப்போதிகை யேற்றுபு, வைரநன்மணி உத்திரம் பாய்த்திப் பளிக்குச் சுவர்மேன் முகில் அகடு ரிஞ்சுயர் சிகரமொள் ளொளியின் மணியாற்கூட்டி வா னுயர் மாளிகை அருந்தொழிற் தச்சர் வழுவற முடிப் பினும், உள்ளாவரசன் கொடுங்கோ லோச்சுங் குரூர

னாயின் உலகிலாய வொருபயனுண்டோ, அவ்வாறொரு வன் அருமறை யோதினும் அருட்பொருட் கலைநூல் அளவறக்கற்கினும் பலதீர்த்தியாடினும் பலதலஞ் சேரினும் வரையில் கொடுப்பினும் வழுவில் நடப்பினும் கோயின் மண்டபம் குளமுதற் பற்பலவாயிற் றரும மௌன வுவந்தியற்றினும் திரள்பொரு ளீட்டியசெல்வந் துறப்பினும் மனைநகர் நாடுபகார் மனைசுற்றமும் துறந்தரும் வனத்திடை துணையறவுறையினும் இன்புறுசுவை சுகம் மெல்லாமறுத்தே ஐம்பொறிகொன்றுடல் அழிய நோற்பினும், இயன்றவழியெலாம் நேரச்சொல்லினும் மனத்தூடிய வீணமாகுளுகிற் றனக்கொருபயனும் தகாதெனவுணர்க வெனத்திருவாய் மலர்ந்தருளினர்.

திருவருள் நோக்கத்தால் சுவாமிகள் மேற்சாதித்தருளியவற்றால், மனம் பரிசுத்தமாகு மார்க்கமும் அம்மனத்தூய்மையின்றி யாதுசெய்யினும் பயன்படா தென்றலும் விளங்கிற்று. இனி அம்மனத்தாலாற்றுந் தவமின்னதெனத் திருவாய் மலர்ந்தருளி வாழ்விக்கவேண்டுமென்று சின்மயானந்த ரடிபணிந்தனர். உடனே சித்தமூர்த்திகள் சின்மயானந்தரை அருகிலழைத்து ஐய, சித்தசாந்தியடைதற்குச் சித்தநூலே சிறப்புடைத்து, சித்தநூலுக்கும் சித்தாந்தத்திற்கும் சிறிதேனும் பேதமின்று. இதனைவிசாரிக்கு மாத்திரத்திலேயே வேதாந்தப் பொருளும் விளங்கும். இத்துணிபு கொண்டன்றோ, வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச்சித்தர் கணமே யென்றார் பிறரும், இதன் விரிவைக் கலைஞானதீபம். ௲ - ஞானபாஸ்கரவுதயம். ௲ - அத்வைதானந்தம். ௲ - முதலிய பன்னூல்களினும் பக

ர்ந்துளோம். இஃதன்றி அயோத்தி இராமபிரபந்து யோகீந்தாருக்கும் சங்கிரகமாக யோகஞான சாரமெனக் கூறியுளோம். அதனைக் குருபூஜாத்வயமென்னும் நூலுடன் சேர்த்துப் பற்பல பாஷைகளிலும் மொழி பெயர்ப்பித்து ஆங்காங்கு அவரவராலும் வெளிப்பட்டிருக்கின்றது. ஆயினும் சுருக்கமாய்ச் சொல்லுமிடத்துப் பொதுவா யுலகத்தில் நானாவித செல்வம் நானாவிதசக்தி நானாவித உத்யோக முதலாய்ச்செய்து பெறுவதாயினும், அவரவர்செய்த யோகமென்றே வழங்குவதுபோல, தெய்வத்திருவருளைப் பெறுதற்கு நானாவிதமார்க்கங்க ளிருப்பினும் அவ்வனைத்திற்குங் காரணம் யோகமே யின்றியமையாதென வென்பது யாவர்க்கும் தெள்ளிதிற் றெரிந்தவிஷயமே. அத்தகைய யோகம் பற்பல வாயினும் சிவயோகமென்று சொல்லாநின்ற ராஜயோகமே நன்குடைத்து. இதனையே ஞானயோகமென்றுஞ் சொல்லுவர், இவ்யோகத்தில் ஞானச்சரியை ஞானக்கிரியையென்னு மிரண்டும் சடாதாரங்களிடத்தே அப்பியசிக்கத்தக்கது. இனிமேலாதாரமாகிய நிலையையுணர்த்தலே ஞானயோகமெனக் கூறத்தக்கது. அப்பாலாகிய வெளிகள் ஆறுள் அடங்குவது ஞானாதீதநிலை, இந்நிலை கூடினார்க்கே உன்மனை, சமனை இரண்டு மொன்றுபட்டொளிரும் ஸ்ரீபுவனாம்பிகை நின்மலாதீதமாகிய ஈறுபேற்றையும் அருள் புரிவள். அகத்தியர் அருளிய பெருநூலுள்,

"வரைதாண்டியாருவரை கடக்கப்போரார்
வாலையெழுத்தந்த முதலறியப்போரார்
உரைதாண்டவெகுநாட் சென்றுரைக்கவேண்டும்
உனக்குரைத்தவோ ரெழுத்தேவுறுதிகாட்டும்

விரைதாண்டாநாசிநுனிசாம்பிராணிவீசும்
வீசுதென்றுநடனத்தைமறந்திடாதே
பரைதாண்டாவிதற்கெலாமூலமூலம்
பராபரத்திலிருந்தபஞெமணியாட்டாச்சே"

"ஆட்டானவாட்டாச்சுபரைநாதத்துள்
ஆதிதொடுத்தந்தம்வரையறியலாச்சு
பூட்டானதமர்வாசல்திறந்துபோச்சு
புருவநடுவழிதீர்ந்துதோணலாச்சு
நாட்டார்கள்கூட்டம்விட்டுநடனத்தையுண்
ணயனத்தால்கண்டுதரிசிக்கலாச்சு
வீட்டானவரையிருட்டுவேதாந்தத்துள்
விளக்கேற்றிக்கொண்டுதரிசித்துப்பாரே"

என்றதாலும், சட்டைமுனியார் "கண்டமுதலாறுதலங்கீழேதள்ளி" என்றதாலுங்காண்கமேலாதாரத்தின் நிலையை விளக்குதும். மேலாதாரமாவன--தானம் சாக்கிரம், இதழ் இரண்டு எழுத்து ஹ ள, மண்டலம் சிவமண்டலம், பூதம் ஆகாயம், இதன் குணம் குரோதம் வெளியாகை நாற்பூதமுங் கொள்கை விரோதஞ் செயல் ஓசைமேவல் அராகம் அரூபம் பரத்தலென எட்டு. இதற்குப் பீஜாக்கரம் ஹகாரம். பஞ்சாக்ஷரம் யகாரம் உள்ளம் மலம் ஆணவமலம் செவியாலும் வாக்காலும் வருங்கன்மம் அவத்தை துரியாதீதம், அதிதெய்வம் சதாசிவம், அதிர்ஷ்டானசத்தி பராசத்தி, கலை சாந்தியாதீதகலை, தத்துவம், சத்திதத்துவம் சிவதத்துவமெனவிரண்டு, புவனம் பதினைந்தாவன: சத்திதத்துவத்தில் நிவர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியாதீதை யெனப் புவனம் ௫. சிவதத்துவத்தில் இந்திகை தீபிகை ரோசிகை மோசிகை ஊர்த்தவகாமினி வியாபினி

வியோமரூபை அநந்தை அநாதை அநாசிருதையெனப் பத்து. ஆக ஆகாய தத்துவ புவனம் ௰௬. அக்கரம் அ முதல் ஃவரையிற் பதினாறு, பதம் ஓம் என்னும் பதம் ஒன்று மந்திரம் ஈசானம் அத்திரம் மூலம் எனமூன்று, இதைத் தியானிக்குமியல்பு வானொளிபோல் பாவிக்கும் நேரம் ஒருமாத்திரை. இந்தச் சாந்தியாதீத கலைக்கு, அற்சேந்திகலை யென்றும்பெயர், இந்தப்பஞ்சகலையும் நித்திய அளவு.

இதற்குமேலோரங்குலத்தில் நிரோசாதகலை அது நிறம் புகைநிறம் அதிற் கூறுமலம் ஆணவமலம் தியானிக்குநேரம் அரைமாத்திரை. அதன் மேலோரங்குலத்தில் நாதகலை அதன் நிறம் மாணிக்கவொளி தியானிக்குநேரம் கால்மாத்திரை. அதன் மேலோரங்குலத்தினுச்சியில் நாதாந்தம் அதனொளி மின்னொளி தியானிக்குநேரம் அரைக்கால்மாத்திரை. அதன்மேல் மூன்றங்குலத்தில் சத்தி அதனொளி நாறுகோடி ஆதித்தப்பிரகாசம் தியானிக்குநேரம் வீசமாத்திரை. அதன் மேல் மூன்றங்குலத்தில் வியாபினி அதனொளி அநேக கோடி ஆதித்தப்பிரகாசம் தியானிக்குநேரம் அரைமா அரைக்காணி மாத்திரைப்போது. அதன்மேலோரங்குலத்தில் வியோமரூபினி அதனொளி ஞானகாசம் தியானிக்குநேரம் காணிமுந்திரை மாத்திரை. அதன்மேலோரங்குலத்தில் அநந்தை ஞானசமுத்திரமாய் தியானிக்கு நேரம் முன்னிற் பாதிமாத்திரை. அதன்மேலோரங்குலத்தில் அநாசிரதை அதனொளி நூறாயிரங்கோடி சந்திராதித்தர் பிரபை தியானிக்குநேரம் முன்னிற் பாதி மாத்திரை. அதன்மேலோரங்குலத்தில் சமனை அத னொளி நூறாயிரங்கோடி சூரியவெய்யிற் பிரபை தியா

னிக்குநேரம் முன்னிற் பாதிமாத்திரை. அதற்குமேலோ ரங்குலத்தில் உன்மனி அதனொளி நீலாகாயம் போல் தியானிக்குநேரம் முன்னிற்பாதி.

இவைவிடவே மனபவநினைவும் அதன்விரிவும் அதிலுறுதலும், உயிர்ப்பருத்தலும், மறத்தலுமாகிய நின்மலசாக்கிரம், நின்மலசொப்பனம், நின்மலசுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதமுண்டாம், இதுவே ஆன்மலாபமென அறிக எனத் திருவாய்மலர்ந்தருளினர். கேட்ட சின்மயானந்தர்,

உருக்கக்கருத்தொழுகவிழியுமுளத்திலன்பு
பெருக்கப்பெருக்கமலப்பிணிமூன்றுப்பிறந்துபிஞ்சு
செருக்கற்றிடவுஞ்சிவானந்தவாரியுட்சென்றுசும்மா
யிருக்கச்சுகமுந்தந்தான்ஞானசித்தனிங்கென்றனக்கே.

எனக்கூறிப் பன்முறைவணங்கிப் பரவசமாகினர் ஸ்ரீபண்டார சந்நிதிகளும் பிரசங்காமிர்தத்தை யுவட்டெடுக்கவுண்டு அடியார்குழாங்களைநோக்கி,

அருண்ஞானசித்த ரறைவா சகத்தை
மருண்ஞான மார்க்க ரறியார்—இருளகல
எய்தினேம் வீட்டினையிங் கெல்லொரு மீடேறக்
கையில்வரு மின்பக் கனி.

என்னும் பற்பல செய்யுள்கள் பகர்ந்து சித்தமூர்த்திகளைத் துதித்தனர். பின்னர் மூர்த்திகள் சொர்க்கபுரமடத்திற் கெழுந்தருளும்படி தேசிகர் பிரார்த்தித்ததற்கிணங்கிப் பூந்தோட்டமென்னும்ஸ்டேஷன்வழியாக் கோயிற்றிரு மாகாளத்தைக் கூடுமுன் சயனித்திருந்த சித்தர் பனவெளியில், அத்தலத்தில் விளங்கும் முழுமுதற்கடவுள் திருவிளையாடலாற் சிலவிம்மிதந் தோற்ற

விழித்து, இப்போது நாம் வருகிற இடம் எதுவெனத் தேசிகரை வினவினர். அதற்கவரும் கோயிற்றிரு மாகாளப்பதி யென்றார். உடனே தமது மனவெளித்தோற்றத்திற்கண்ட துண்மையெனப்பரவசராய் அவ்வாலயதிசையை நோக்கி அனந்த வந்தனம் புரிந்து,

"காவுக் கிறைவ னயன்றிருமால்
கணங்கண் முழுதுங் களிமிகுந்தே
மேவக் கருணை செயும் பரமன்
விளங்கும் பதிக்குண் மிகப்பெரிதாம்
நாவுக் கரையன் முதற்பலரு
நாளு மிறைஞ்சி நலம்பெருகுங்
கோவிற் றிருமா காளமெனக்
கூறு மவர்க்கோர் குறையிலையே"

என்பது முதலானதோர் பதிகமியற்றி அருணோதயத்தில் திருவம்பலென்னுஞ் சேத்திரத்தையடைந்து அநுட்டானமுடித்து ஆலயத்தெய்த வழலிடைப்பட்ட மெழுகாய்த் திருவருள் விளக்க அப்போதே மெய்ப்புளகித்து,

"தூதளையின் றுளிரதனுற் சோமாசி மாறனென்பார்
சாதனங் கைக்கூடியதுஞ் சதுர்மறையோ ரோடியதும்
ஆதரவோ டங்கவரி னச்சந்தீர்த் தாண்டதலம்
பூதலமு மீதலமும் போற்றுமம்பல் கண்டேனே."

எனவொரு பதிகமுரைத்து அவ்விரண்டு திருப்பதிக்கும் நடுநாயகமாய் விளங்கும் பண்டாரவாடைத் திருமாகாளமென்னும் பதியின்கண் விளங்கும் சுவர்க்கபுரத்தில் ஸ்ரீபட்டினத் தடிகளுக்குக் குழந்தைவேடங்காட்டிக் குருமூர்த்தமாய் "காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே" எனும் திருவிருத்தமருளிய மரு

தவனப்பெருமான் மெய்யன்பிற்குவந்தவரும், தாமருளிய அறிவானந்த சமுத்திரமென்னும் அற்புத நூலையியற்று ஸ்ரீதாயுமானசுவாமிகளால் பாடப்பெற்றவரும், பற்பல அற்புதத்திருவிளையாடலியற்றியவரும், ஆதிகுருமூர்த்தசமூபாகிய அழகிய திருச்சிற்றம்பலசுவாமி ஆலயத்துக்குட் சென்று ஒவ்வொருமண்டப மாளிகைகளமைந்த வளப்பமும் காலநிலை குன்றினமையால் தற்காலத்திலுண்டான காக்ஷியையுங் கண்ணுற்றுக் குருமூர்த்தத்தின் முன்னர் சித்தமூர்த்திகள்,

திருவருளினிலே விளங்கச் சிவானுபவமுதலாஞ் சிவயோக நெறிவிளங்கச் சித்திகளும் விளங்க, உருகுமன்பருளத் தறிவானந்த சமுத்திரமென்றொப்புயர்விலாத முறையுண்மையிலெற்கருளுங், குருவடிவம் விளங்கவவனமர் பதியிலென்றுங் கோமகளும் நாமகளுங் குலவி விளங்கிடுக, அருமறைபோற்றிய மருதவாணனடியவரு மனுதினமும் விளங்குவதற்கருள் புவனும்பிகையே.

எனத் தமது உபாசனமூர்த்தியை வணங்கி இரண்டுதினம் வரையில் மடாலயத்தில் பண்டார சன்னிதிகளுடன் எழுந்தருளியபோது ஆதிகுருமூர்த்திகளின் அற்புதத்தால் சிற்சிலகாக்ஷிகள் சித்தமூர்த்திகளின் மனவெளியிற் றோற்ற அவ்வற்புதப் பெருங்கருணைக்கடலை அகத்தும் புறத்துங்கொண்டு காலையில் குருமூர்த்திகளைத் தரிசித்துக் கருணைப்பெருங்கடல் என ஒரு பதிகமும் அருளி, மறுநாள் திருநள்ளாற்று மடாலயத்திற் கெழுந்தருளி ஸ்ரீதர்ப்பாரண்யேசுவரர் சந்நிதி

யிற் சென்று தரிசித்து முந்திய நாள் மனவெளியிற் கண்ட பேற்றை விளக்கிச் சித்தமூர்த்திகள்,

எண்ணாவெண்ணா மெய்யாவெய்ப்பு மேழைக்கிந்நீரோ
தண்ணாருளுஞ் சாரத்தேனுந் தானேதந்தீரோ
மண்ணுமன்னும் வாராவார்த்தும் வாரிக்கந்தீரோ
நண்ணார்நண்ணு நல்லார்போற்றும் ஞானச்சுடரீரே.

எனப் பதிகமருளி யெழுந்தருளியிருக்கையில், திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனம், மெய்கண்டார் சந்தானத்தில் கருணையே திருவுருக்கொண்டு அடியேனையு மாட்கொண்ட ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் சித்தமூர்த்தியை யழைக்க அவர் சொர்க்கபுரத்தேசிகருடன்சென்று மகாசந்நிதானத்துடன் அளவளாவ, சித்தாந்த முறையான் வருமிச்சித்தர் நம்மவரின் வேறல்லரெனச் சந்நிதானங் கூறிக்கொண்டாடினர். அத்துறைசை நீங்கிப் பண்ணளுந் தமக்கினியசின்னப்ப கவுண்டர் விருப்பத்தின்படி கோயமுத்தூரினுக் கெழுந்தருளும்போது, சித்தருடன்கூடவே வந்து கொண்டிருந்த தம்பிரான் சித்தசுவாமிகளின் அருட் கொடையினையும் பொருட் கொடையினையும், சிற்றரசர்கள் அவர்க்குச் செய் பொருளுதவியினையும் நோக்கி ஷை கவுண்டரைத் தம்வயப்படுத்தி பழக்காரூற்றுச் சில சூழ்ச்சிசெய்ய வாரம்பித்து, சித்தர் சில காலமிங்கே தங்கள் விருப்பத்தின்படி தங்கவேண்டின் தாங்கள் சித்தமூர்த்திகள் யாகத்திற்குரிய பொருள் தன்பாலீந்தா லங்ஙனஞ் செய்யக்கூடுமெனப் புறளிசெய்து, பொருள் சேகரித்துத் தான் வைத்துக்கொண்டு சித்தருக்கு வேண்டியபோது தானுதவியதாக வெழுநூறுவெண்பொனீந்துஎஞ்சியதான்கொண்டுதன்மடத்

தையடைந்தார். அன்றியுங்கோயமுத்தூரில் தங்கியிருந்த நாட்டுக்கோட்டை வெங்கடாசலசெட்டியார் ஆதியில் ஒருபாலினால் சித்தருண்மை தெரிந்து அன்னவரை விழைந்து ஆனைமாவதன உபாசனை தரப்பெற்று மண்டல நீருளிருந்து அக்கடவுள் மனுவை யோதித் தனக்குநேர்ந்த கண்டமது நீங்கி வாழ்ந்த அவரிடத்தும் விரோதங்கொண்டு அவணின்று நீங்கித் தன்பதியடைந்து புறங்கூறியிருந்தனர்.

சித்தர் காவிரியாற்று மருங்குள தலம்பல தரிசித்துத் திருவானைக்காவினைக் கடைந்தனர். சித்தசபையார் தந்தலைவரை யுபசரித்தேற்று, காவிரிச் சிந்தாமணித்துறையில் யாகசாலை யோமகுண்டமோ டமைத்துத் தோரணமுதல்அலங்கரித்து உபகரணங்கள் சேகரித்துத் தங்கள் குருநாதருக்குத் தெரிவிக்க, மூர்த்திகள் புவனம்பிகையை யெழுந்தருளச்செய்து இன்னிய முழங்க முறைவழங்க பதினைந்தாவது யாகம் விதிமுறை வழாது சடங்குகள் யாவும் விதவிதமாகவேயாற்றி மூன்று காலமும் பூசை சிறப்புறச் செய்த தன்பின் அதிதாபச்சுரத்தாற் பீடிக்கப்பட்டுத் தம்மைமறந்த நிலையினைச் சிறிதடையக்கண்ட அனேக வைத்தியர்கள் சித்தர் மலர்க்கரம் பரிசித்து வருந்தி நாடி பிறழ்ந்தன மருந்து பற்றுதற்கிடமில்லை இவரை மடத்திற்கொண்டுபோவதே நலமென நவில, சூழ்ந்த வன்பினர் யாருங்கேட்டு இன்னலங் கடலிற்றாழ்ந்து ஐயகோவென் றிரங்கினர். சில்லோர் நெருங்கிக் கொடுந்துயருழப்பதைத் தெரிந்த சித்தர் தம்மலர்க்கையாற் சில குறிப்புரைவகுக்க, அக்குறிப்புரை முன்பழக்கத்தா லறிந்தா ரப்பொழுதே புவனம்பிகையைப் புந்தியிற் கொண்டு காவிரிநீர் இரு

நூறு குடங்களிற் கொணர்ந்து சித்தர்மேற்சொரிந்து பக்கநின்றனர். சித்தரு முடனே யெழுந்து அம்பிகை யடியிணையாதரித்து நான்காஞ்சாம பூசையினையுந் தவறாமல் முடித்துப் பூரணாகுதி யீந்து வடுகநாதர் பூசனையுஞ் செய்தனர். கண்டவர் திகைத்தார். அம்ம! அம்ம! அற்புதம்! அற்புதம்! சித்தரானோர்க் கரியதொன் றுலகினி லுண்டோ வென்றிறும்பூதடைந்தனர்.

ஆயிரமாயிரமடியவர்கட் கன்னைபோனிலவி யரிய கற்பகநேர் ஞானசித்தர் தம்பால் கள்ளவேடம் பூண்டனுகிக் கொள்ளை கொண்டார் பல்லோர், திருச்செங்கோட்டிலரிய வவிழ்தமதைத் திருடியகன்றானொருவன், அந்நகருதித்துச் சந்நியாசங்கொண்டு எங்கள் சித்தசாமி பேர்பூண்டு வஞ்சித்துத் திரிந்தானொருவன். இங்ஙனமாக, சொர்க்கபுரத்தார் சித்தர் நிதியை வஞ்சித்து அகன்றதுமன்றி யவரை வைதுவரைந்து பலபத்திரா பாலீந்து வெளியிடவேண்டியும், சித்தர் மகிமையுள்ளவாறறிந்த வவரியாரு மறுத்தனர். பின்னும் சித்தர்க் கெவ்விதத்தேனு மிழுக்குறச் செய்யவேண்டுமென்றெண்ணிச் சித்தசுவாமிகள்மேல் வசைபலகூறிப் பொய் வழக்கிடத்துணிந்து, தஞ்சைகோர்ட்டினி லவதூறு வழக்கு ஆரம்பித்து வக்கீலை வைத்துப்பேச, அக்கோர்ட்டு நியாயாதிபதி சித்தர்தம் பெருமையும் அவரடியர்தம் செந்நெறிச்செயல்களும் தெரிந்து உளத்திருத்தி சாட்சி விசாரணைசெய்து பொய் வழக்கெனத் தள்ளிப் பிரதிவாதிக்குச் செலவுறுந் தொகையைக் கொடுமெனல்போலத் தீர்ப்பதுசெய்தனர். சொர்க்கபுரத்தினர் சோர்வடைந்து துயருழந்து மனமாழ்கிப்போயினர். சாதியால் குலத்தால் கல்வியாலும், ஆசிரமத்தால் வே

டத்தால் ஒழுக்கத்தாலும் மேம்பாடுற்ற பெரியராயி
னும் உண்மையிலார் சிறியரென்றே யுலகமதிக்கும்.

சித்தர் மூவைந்தாவதியாகம் முகித்தபின் றென்
றேய யாத்திரையாக, யாக சம்பூர்ணார்த்த வுத்தேசங்
கொண்டு எழுந்தருளுகின்ற குறிப்பினை, அன்பறிவா
திய குணங்களை யொருவடிவாக வந்தவரும் இந்து
மதவிருத்திக்கே யுழைத்து வருபவரும் கவர்ணரவர்க
ளைக்கொண்டு பாடசாலைக்குக் கடைகால்விட்டவரும்,
திரிசிரபுரம் நாஷனல் ஹைஸ்கூல் எட்மாஸ்டருமாகிய சே
ஷையங்காரென்பவ ரறிந்துகொண்டு ஒரு கடிதம் மது
ரை மகாவித்துவ சிரோமணியும் விப்பிர சிகாமணியுமா
கிய இராகவையங்காருக்குத் தெரிவிக்க அவர் மதுரைத்
தமிழ்ச் சங்கத்தாபகரும் அக்கிராசனாதிபதியும் அடி
யேன் தெய்வமாகக்கொண்டாடும் ஆசிரியர் சிவஞான
யோகிகள் பாதசேகரருமாகிய பாண்டித் துரையவர்
கட்குத்தெரிவித்தனர். இன்னதிதுவாகச்சித்தர் மதுரை
வயின் செல்லாது நெல்லை நகரடைந்து வேதாகம விதி
காசங்களில் வல்லுநரும், ஒழுக்கத்திற் சிறந்தவரும்,
அதிமேதாவியருமாகிய வீரராகவபுரம் வைக்கில் கிரு
ஷ்ணசாமி ஐயரென்பவரைச் சந்திக்க அவர் முன்ன
மே சித்த சுவாமிகளின் மகிமைகளைத் தெரிந்தவராக
லின் சித்தர் திருவனந்தபுரம் சமஸ்தானத்தைக்காண
வேண்டியதற்குரிய பலவேற்பாடுகளையும் மனப்பூர்த்தி
யாகச் செய்தனர். அப்பதியில் தொண்டர் நயினார்கோ
யிற் கருகில் முனிசிப்பல் கவுன்சிலர் சங்கர குமாரபிள்
ளையின் மடக்கொடிக்கு முன்னருளிய வனுக்கிரகத்
தினைத்திடப்படுத்திப் பெரியசாமிபிள்ளை யென்பவருக்
கும் பெரிது மனுக்கிரகித்துச் சங்கரகுமாருபிள்ளைக்கு

ஆப்தவன்பராம் புதுக்குளம் இராமலிங்கப்பிள்ளையும், ஆறுமுகம் பிள்ளையும் புதுக்குள மழைத்துவந்து சகல வுபசாரமுஞ்செய்து வேண்டிய பொருளீந்தனர் அதன் பின் கார்காத்த குலசிகாமணியாகிய சாவடிப்பிள்ளை யென்பார் வந்து தரிசித்துப்போயினர். நெல்லைநகரில் சிலநாள் கழிந்ததற்பின் சித்தர் மதுரை மாநகருக் கெழுந்தருளப் பாலவனத்தம் ஜமீன்தாரரும் பைந்தமிழை யொருங்குணர்ந் தாருமாகிய பாண்டித்துரைச் செம்மல் நேரேகாண நினைந்து நெருங்கி யுபசரித்து, தம்மாற் செய்யவேண்டுவன செய்து, பாஸ்கர சேதுபதி ராஜாவிற்குச் சித்தருளக் கருத்தனைத்துந் தெரிவித்துச் சேதுபதி கையொப்பமிட்ட தொகைப் புத்தகத்தினை வாங்கி மனமகிழத் தந்தருளினர்.

பின்னாள் மதுரை பெஞ்சி மேஜிஸ்டிரேட் நல்லசிவன்பிள்ளை மாளிகையிற் சித்தரெழுந்தருளுகையில் சிவயோகநெறி துளக்கமற வருள்சுரந்து சாத்தூரையடைந்து அந்நகர்ச் செல்வர்களாகிய கோபால் சாமி நாயடு, போலீஸ் இனிஸ்பெக்டர் பெருமாள்ராசு அவர்கள் பொருட்டுத் தாமதித்து, விருதை போஸ்ட்மேஸ்டரும் வித்துவ சிகாமணியுமாகிய வைத்யலிங்கம்பிள்ளை வழிபட அங்கு வதிந்தருளிச் சேரநாட்டிற்குப் பிரயாணப்பட்டுத் தூற்றுக்குடிசேர்ந்து நல்ல கண்ணுபிள்ளை யென்பவர்க்குற்ற இன்னலினைத்துந் தீர்த்தருளி யடியார் புடைசூழ, பலகாவதஞ்சென்று கடல் மலையாறு பல கடந்து சேரநாட்டிற் பிரவேசிக்க, வழியில் சைவசிகாமணியாய், தேவத்தானத்தலைவராய் விளங்கும் கமிட்டி மெம்பர் திருமலையப்பிள்ளை யென்பார் சந்தித்துச் சித்தர் திருவருளெலாந் தேர்ந்து வானமா

மலை வயினவ சியருக்குணர்த்தி நண்புரிமை பாராட்டி யிருந்தனர். பின்னர் சித்தர் சேரநாட்டுத் தலைநகராகிய திருவனந்தபுரமடைந்தனர். அந்நகரில் செந்தமிழ் நாவலராம்வலியமேலெழுத்து முத்துக் குமாரசாமி பிள்ளை குமாரர் இலட்சுமணப்பிள்ளை முதலியோர்கள் உபசாரத்திருந்துவாழ்போது அத்தலத்தில் தாசில் பரமேசுவரப்பிள்ளை வந்துதரிசித்து, அந்நகர் ஜட்ஜ் வேதாத்ரிதாசமுதலியார், அவ்வூரமைச்சர், சருவாதிகாரி முதலியோரிடத்துந் தனித்தனியே சொல்லிச் சித்தரின் பரிசுரைத்து வேந்தருக்குப் பனுவல் மூலமாகப் பகர்தல் நலமென விரும்ப, அங்ஙனமே சம்மதித்து ஒரு திருமுகம் தேனினுமினிய சொற்சுவையிலெழுதித்தர, உடனே யதனை இலட்சுமணப்பிள்ளை மலையாளத்தில் மொழிபெயர்த்து, சகல சம்பன்னரான சரவணசாமி மூலமாக அப்பத்திரிகையையும் யாகப்பிரசாதத்தையும்மகாராஜா சந்நிதானத்திற்சேர்க்கவேந்தர் கண்டு சித்த சுவாமியினை உடனே யழைமினெனச் சித்தரெழுந்தருளினர், ஆங்கடைந்து மன்னர் பிரானுடனளவளாவுகையில், சித்தர் எத்தனைப்போது இங்கிருக்குமென வேந்தர்வினவ, வேள்வி முடிய முத்தினமிருத்தலின் இன்றே யிருமூர்த்தத்திற்குள் அஞ்சல்வைத்து ஆனைக்காவை யடைவேனெனப்பதில் கூறிவிடைபெற்றுத் தன்னிருக்கை யடைந்தனர். அரசன் அடுத்த வேள்வியினை முடிவிப்பாமென அமைச்சரிடங்கூற அம்மொழியைச் சரவணசாமி பரமேசுவரப்பிள்ளையிடஞ் செப்ப இவர் சித்த சுவாமிக்கறிவித்துப் பல்லுபசாரம் விரைவாகப் புரிந்து இவ்வருடத்து மகந்தனை எட்டயபுரம்இராஜாவைக்கொண்டுமுடிக்கவெனக்கேட்டுக்கொ

ள்ள அது சங்கதி செப்பு முன்னமே சித்தரிவ்விதமா மெனத்தெரிந்து, அன்பர் பால்வண்ணம்பிள்ளையை முன்னேவி, தன்னுடன்வந்தாரைக்காவைக்கனுப்பிவிட்டு, எட்டயபுரமடைய,முன்னொருநாள் சித்தரெழுந்தருளிய போது அனந்தபுரஞ் சென்றுவருகையி னீண்டுவருத னென்றென்ன ஜமீன்காருரைத்ததனைத் திவான் சண்முகம்பிள்ளை மூலமாகத் தெரிவித்துச் சின்னதுரைக்கு.

> இன்றுபணங் கையிலில்லை யென்றுசொலா
> தோநாளை யாஞ்செய் வேள்வி, நன்றுமுடித்
> திடவேண்டும் நல்லதற்கு விக்கிநநா ளூறே
> யென்று, தான்று பெரியோருரைத்த வாக்கி
> யத்துக் கிலக்கணமான் டாண்டுதோறும்,
> இன்னபடி முடிகின்றதென்செய்வோம் புவ
> னையருளீதென் றோதி,

அன்னவர்பா லனுப்ப வவருமுணர்ந் ததுபோலுஞ் செய்கவென, உடனே சில கலியுகவசுராதற்கிடையூறு செய்தனர். சித்தர் விருப்பத்தினை முடிக்கவேண்டுமென அமைச்சர் கூறக் கேட்ட ஜமீன்தார் சின்னதுரையுடன் ஆலோசிக்க அவர் சித்தர்பாலெது செயினுநன்றே யவரற்புதம் பலவியற்றும் புதுமைகளை வக்கில் கிருஷ்ணசாமி ஐயர் மூலமாகத் தெரிந்துள்ளேம் என்றனர். அன்றியும் அங்கிருந்தவைதிகசித்தாந்தவுண்மை யுணர்ந்து தென்மொழியில் வியாசசூத்திரந்தன்னை மொழிபெயர்த்த வருமாகிய விருதை சிவஞானயோகிகள் சித்தர் புரிந்துவரும் வேள்வியினருமையனைத்தையும் விளக்கினர், சின்னதுரை மொழிகேட்ட எட்டயபுர மன்னர் சிறிதருத்தந் தந்து பின்செய்வேமென்றுச்

சொன்னபொழுது இராக்கதர்நேர் சில்லோர் தடுக்கச் சித்தருணர்ந்து ஒருபா,

> என்னேநின்செல்வமிந்திரன்வாழ்வும்பலகால்
> தன்னாலேதானழிந்தசரித்திரங்கள்மெத்தவுள
> மனனேவோவெட்டப்பமகிபாநின்றனேக்காண

எனமொழிந்து முடிக்கு முன்னே, அக்கவி முடியாத படி யமைச்சர் தடுத்துக் கொண்டனர். அப்போது, அடியார்பத்தியிற் சிறந்து அரியகோரக்கர் திருவடிக் கன்பபூண்ட ஒவர்சியர்சோமசுந்தரம்பிள்ளையும்,அத்துரைத்தனத்திற் சிறப்புற்றோங்கும் பேஷ்கார் எட்டையப்பபிள்ளையும் சித்தரையடுத்துச் சுவாமி! கொடும்பாதகர் மொழிசெவிக்கொளேல் கடைக்கணிக்க வேண்டுமெனப்பணிந்தேகிடப் பின்சித்தமூர்த்திகள், வெள்ளித்தினம்வந்தடைந்தமையின் எங்ஙனம் காவைநகரடைவதெனக் கனலிலிட்ட மெழுகென வுருகி, பொழுது பட்டது முணர்ந்து நெஞ்சங் கரைந்துருகிப் புவனைப்பிகையின் றிருவருளை நினைந்து உருகுவாராயினர்.

திருவானைக்காவினில் பதினாறுவது வெள்ளிதரிசிக்கச் சென்னை, தஞ்சை, மதுரை, செந்தில் முதலிய விடங்களிலிருந்து அடியர் பலர்வந்தடைந்தனர், சேலமாற்றார் இராஜரத்ந நாயுடுவும், திருச்சி ஆறுமுகநயினாரும், குமரப்பிள்ளையும் சித்தர் வரவு காணாராகி ஆயினும் செயற்பாலனவெல்லாஞ் செய்திடுவேமெனத் தீர்மானித்துக் காவிரிநதியடைந்து சிந்தாமணித்துறையினெதிரே கருப்பக்கிரகம், அத்தமண்டபம், மகாமண்டபம் அமைத்து மகச்சாலை நிருமித்து, பன்னிறப் பூமாலைகளைத் தொங்கவிட்டு, வேதிகைக்கெதிரே சித்தரெழுந்தருளப்பீடமிட்டுப்புலித்தோல் விரித்து, தென்

முகமாக வயிரவருக்காசனமு மமைத்தனர். வாயிலில் கதலியும் கமுகும்நாட்டி மகரதோரணங்கள்கட்டி எம் மருங்குந் தீபமேற்றி, வரிசை வரிசையாகக் கொடிகளைத்தூக்கினர். வழக்கப்போல அரங்கத்திருந்துவந்த தேர்ச்சிலே சுருட்டி யசைந்தாடி யஸ்மான கிரிமுதலிய வற்று லலங்கரித்து அருகிலொரு பொய்கையுண்டாக்கி, திசைநோக்கி, குருநாதனைக்காணுது குழைந்து குருகூர்ச்சித்தரின்று எழுந்தருளுமோ? வேறெங்கேயாயினும் அவ்வத்தேயத்தன்பர் வேண்டுகோளின்படி வேள்வியை முடித்திடுமோ? நம் புண்ணியம் பூர்த்தியாமோ? நம் பிரயாசை நலமடையுமோ? நம் மூர்த்தியெழுந்தருளிவந்து இக்காட்சியினைக்கண்டுகளித்து நடக்காசி யளிக்குமோ? என்றிருக்கையில் சிவஞானச்செல்வர் திடீரெனக் காட்சிதந்தருளினர். யாவருந் தரிசித்தானந்த மடைந்தனர். அப்போதே அம்மை புவனும்பிகை பீடத்தை விமானத்திருத்தி அருமறை நான்கினையும் அந்தணரோத, அணியணியா யன்பர் கையாரத் தொழுதேத்தக் காவிரிக்கருகே வரும்போது இராமபிரபந்து முதலிய பெரியோர் எதிர்வந்து, பரவசராகிச் சித்தநாதரைத் தரிசித்து,

கருவிலே திருவுடையாய் கவினரவ முத்
துடையாய் கலைகள் யாவும், திருவருளா லு
ணர்வுடையாய் சித்தியருள் மிக்குடையாய்
சிறியேற்குற்ற, வெருவலெலாம் நீக்குடை
யாய் விதேகமுத்தி பெற்றுடையாய் மேதி
னிக்க, ணருமகம்பல் செய்துடையா யம்மை
யருள் பெற்றுடையா யருளாயென்று,

பலருந் துதித்தேத்திப்ப, சங்கமுழங்க, பேரிகையார்ப்ப, தவில் சின்னமொலிப்ப, வாஸ்து சாந்தி, மிர்த்து சங்கிரகணம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், கலசதாபனம் முறையே தாபித்து, வைதிகர் மகன்னியாசம், சிருத்திர முறைப்ப, புவனாம்பிகைக்குத் திருமஞ்சனமாட்டி, மூவிலைப்படைக்கு மன்னனமேமுடித்து, தூபதீபங்களாற்றி எழுந்தருளச்செய்து, சித்தர் நீராடி, புனிதநீறணிந்து, வெண்பட்டுடுத்தி, பௌத்திரம்பூண்டு, புலியாசனத்திருந்து, விநாயக பூசைசெய்து, வேள்விகுண்டத்தும், மூன்றுமாவரணத் தேவதைகள் மந்திரத்தும், தேவி சடக்கரங்கொண்டு நவமுத்திரையியற்றி, குண்டத்தில் அரசு ஆல் ஆபிரத்தெட்டுத்துண்டுகளிட்டுத் தருப்பையினால் பஞ்சகவ்வியங்களெடுத்திட்டு, அக்கினிதேவனை யேத்தி, மந்திரமா மலரிட்டுத் திக்குப்பந்தனம் தாளத்திரயஞ்செய்து, செந்தீவளர்த்து, சுருக்கால் பசுநெய் தேன்பெய்து, நவதானியம் பொரி சொரிந்து, நிவேதனம் தந்து, தூபதீபங்காட்டி, ஆகுதி முடித்து இப்படியே சாமமொவ்வொன்றினுக்குஞ்செய்து நான்காம் யாமத்தில் பூர்ணாகுதி வழங்கி மற்றைநாள் வயிரவ பூசனைமுடித்து கும்பாபிடேகம் அவமிர்து ஸ்நானம் செய்து வேள்வி செவ்வே நிறைவேற்றினர். அவ்வக்காலத்தில் அருமறையோர்கட்கு உணவளித்து மகேச்சுர பூசையும் வழுவாது நடத்தினர்.

முழுமுதற்கடவுளின்மூவிலைவேற்படையுடனே புவனாம்பிகையின் பீடத்தையும் புட்ப ரதத்திற் பொலிவித்துத் திருவானைக்காவிற்குள் பிரவேசித்துத் திருவீதிவலமாக வந்து சித்தசபையி லெழுந்தருளச் செய்து அம்பிகை

வேள்வியை நாடி வந்த வடியார்கட்கெல்லாம் விபூதி குங்குமம் வழங்கி யவரவரிருக்கைக்குச்செல்ல விடை கொடுத்துச் சித்தரமர்ந்தருளினர்.

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றின்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

என்னும் தெய்வப் புலமைத்திருவள்ளுவதேவர் திருவாக்கினுக்கிசையவிச்சீவன்முத்தரும்நடத்தும்இப்புவனும் பிகையாகம் நடந்தேறற்குக் கருணைபுரிந்து பொருளுதவியோர் தன்னிகரில் தமிழ்ச் சங்க நிறீஇப் புலவோர் தம்மைப் புரக்குந் தண்டாச் சீர்த்திவாய்ந்த பாண்டித்துரை தேவரும் எங்கணும் புகழ்நிரம்புமிருஞ்சீர்வாய்ந்த எட்டப்ப மன்னரும், இற்றைய வேள்விக்கேயன்றிப் பல்வேள்விக் காயிர மாயிரம் பொன்னீந்த பெற்றிவாய்ந்த பெருங்கீர்த்தியாளராகிய சின்னப்பகவுண்டரின் புதல்வரான வெள்ளியங்கிரி கவுண்டருமேயாம். இன்னவாறு பதினாறுவது யாகம் பூர்த்தியாயின பின்னர், சென்னையிற் பிரசித்தியுற்ற வித்துவானாகிய திருமயிலைச் சண்முகம்பிள்ளை யவர்கள் மதுரைத்தமிழ்ச் சங்கத்திற்குச்சென்று திரிசிரபுரந் தங்குகையில் ஆங்கு அவர் நண்பினராய புலவர்பலர் சித்தமூர்த்திகளின் அற்புதங்களைப் பிள்ளை யவர்கட்குச் சொல்லினர். அவரும் தாம் அப்பெரியார் பெருமையைக் கேட்டறிவதுண்டெனவும் அடுத்துப் பழகியதில்லை யெனவும் கூறியவளவில், நண்பர்கள் அவரைத் திருவானைக்காவுக்கு அழைத்துச்சென்று, சித்தமூர்த்தியை நேரிற்றரிசிக்கச் செய்தார்கள். பின்பு அவ்வூரிற் சிலர் பிள்ளையவர்கள் பால்வந்து புலவரே! சித்தமூர்த்திகள் திவ்விய சரித்தை எங்கட்குப்பாடித்தரல்வேண்டும் என்றுவேண்

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை


டினார்கள். முன்பு தமக்கு ஒருசாலை மாணாக்கராகிய தமிழ்ப்பண்டிதர் திருவாரூர்ச் சின்னசாமிபிள்ளை யவர்கள் முதலாய வித்துவ சிரோமணிகள் பெருங்காப்பியமாகப் பாடியிருத்தலால், சித்தர் மாட்சி செவ்வே விளங் குவதாயினும் தாம் அவ்வாறு பாடற்கு அற்புத நிகழ்ச்சி யேதேனும்நேரிற்கண்டாலன்றிஇசையவரிதாமென்று விடைபகர்ந்து, காவைநீங்கித் திரிசிரபுரத்தே சின்னாள் வதியுங் காலத்து, ஒருநாள் பிள்ளையவர்கள் கனவிடை அவர் வழிபடுந் தெய்வமாகிய சரவணபவன்றோன்றி "அன்ப! ஞானசித்தனது பெருமையை யறியாது மயங்குகிறாய் நீ அவன் சரிதத்தைப் பாடாது மறுத்தல் எமக்குத் திருத்தி தருவதன்று விரைந்து முடிக்க" எனநனவே போற்கூறி மறைந்ததால், பிள்ளையும் திடுக்கிட்டு விழித்து ஒன்றுமறியாது மருண்ட சிந்தையராய்ப் பின்னர்த் தெருண்டு "இஃதோரதிசயமிருந்தவாறென்னை" என்று பெருவியப்பெய்தி நடந்ததைத்தம் நண்பர்கட்குக்கூறித் திரும்பவுங்காவைசேர்ந்து, சித்தமூர்த்திகளது திருவடிகளைத்தொழுதுநிகழ்ந்த வரலாற்றினைக்கூறி "மூர்த்திகளே! சிறியேன் செய்பிழையைப் பொறுத்தருண்மின் என்று போற்றிப் புகழ்ந்து சித்தசபைமுன்னர் அப்போதே, "பணிகைத்தன்னடியார்க்கென" என்று தொடங்கித் திருக்குருகூர்ச் சித்தமான்மியத்தை ஒரைந்து நாளிற்பாடி முடித்தனர். இவர்து பாடல் விரைவைக் கண்ட அவ்வூர் அறிஞர்கள் பெரிதும் வியந்து இராமகதையை ஏழுநாளில்முடித்த கம்பரின் அம்சமோ இவர் எனப்புகழ்ந்து கொண்டாடினார்கள்.

பின்பு பச்சைமலைப் பரமனார் தமக்கு முன்னனுக்கிரகஞ்செய்தருளுறைமையையெண்ணிச் சிற்சிலவரியவௌடதங்களை முடிக்கிடத் திருவுளங்கொண்டு, சிற்சிலதொண்டரைப் பலதிசையி னுள்ளவரைகட்கும் வனங்கட்கும் ஏவித்தாம் திருப்புல்லாணியாதியாந் திருப்பதிகள் சேர்ந்து, சேதுமேவிய இராமநாதனைத் தரிசித்துத் தமிழ்ப்பதிகம்பாடியொருபட்சமட்டுமத்தலத்திலேயே யமர்ந்தருளினர். இவரிங்கிருப்பதனைக் கேள்வியுற்ற முகவை மன்னவரும், வேள்விப்பூர்த்திக் கோரேழாயிரம் பொன்னளிப்ப மென்றவருமாகிய சேதுபதி யவர்களுந் தரிசனை செய்ய வுத்தேசித்து ஒருநாள் ஆலயத்து அம்பிகைத் திருமண மகோற்சவ நடந்துகொண்டிருந்தமண்டபத்தில்பற்பலகுழாத்தொடுகண்டுவந்து தரிசித்தார். அவ்வமயம் தன்னையடுத்தார்சிலர்சித்தமூர்த்திகள் இன்னாரெனத் தெரிந்து கொள்ளவேண்டுமெனக் குறிப்பிக்க, அவர்களை நோக்கி ஐயன்மீர்! இவணிலவிய விம்மூர்த்திக ளருமைமுழுதும் யான்சொல வலியிலனேனும் சிறிதுரைப்பாம் கேண்மின், திருக்குருகூரிலவதரித்த பெருந்தகை, திருமகளும் அவள் மருமகளும் தினமும் வழிபடத்தக்கதேவி புவனாம்பிகைத் திருவருள் பெற்றுலவிவருபவர், ஆண்டுதோறு மொவ்வொன்றாய்ப் பதினாறு வேள்விசெய்து முடித்தவர். அண்டரும் வியக்கு மரிய பச்சைமலைமுனிவரருளைப் பெற்றவர், ஞானசித்த வபிதான ஞானவள்ளலார் இப்பெருந்தகையாரை யறியாதா ரிவ்வுலகிலியாரு மில்லை, தமிழ் நாடனைத்தும் பரவிய தக்கபுகழ்வாய்ந்தவர் அன்னைபுவனாம்பிகை யருளாற் பற்பலவற்புதம் புரிபவர், தன்னிகராக எவரையும் தானினைக்குந் தன்மையினை

றென்னச் சித்தர் பெருமை சிறிதெடுத்தோதி யளவளாவித் தத்தம்முறையிடம் புக்கினர். பின்னர்ச் சித்தர் சிந்துமுதற் றீர்த்த மெலாஞ் சென்றாடினர்.

இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

என்றதிருக்குறட் கெதிராகக் கல்லாரும் கற்றவரும் காவலரும் சிறப்பியற்றத் திருவருளடைந்த சித்தமூர்த்திகள் சேதுவைக் கடந்து, மதுரையம்பதி யடைந்து பாண்டித்துரைப் பெருமான் சங்கந்தனையுற்று அவர் பலவுதவி புரிந்திட வீற்றிருந்தனர்.

ஔடதிகொண்டுவர நாற்றிசையுஞ் சென்ற பலரும் வாளாவந்துசேரச் சித்தர் பொதியமலையின்கண்ணே தக்கவவுடதி யுளதெனத்தெரிந்து யாவருக்கு முபகாரமாமெனச் சித்தர் புறப்பட்டபோது அங்ஙன மெழுந்தருளுதலை யுணர்ந்த திருநெல்வேலி முனிசிப்பல் கவுன்சிலர் சங்கர குமாருபிள்ளை, சப் மேஜிஸ்டிரேட்டாகவிருந்த சீதாராம்பிள்ளை யவர்கள்குமாரர் முத்தையபிள்ளை, மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சோமசுந்தரம்பிள்ளை, பெரியசாமிபிள்ளை, சகநாதராஜாமுதலிய அன்பர் குழாங்களும் சித்தருடன் புறப்பட்டனர்.

குற்றாலந்தனை யடைய அவ்வமயம் நவராத்திரி நேர்தலும் அத்தலத்து வட வருவித்தீரத்தில் அம்பிகைபூசனை நடத்தித் தன்னையங்கு வந்தடுத்த அம்பாசமுத்திரம் இராயசாமி முதலியாருக்கும் அனுக்கிரகம் புரிந்தனர். பின் சித்தர் கூடலம்பதிக்குப் பிரயாணப்படுஞ் சமயத்துப் பாளையங் கோட்டையில், மீனாட்சிசுந்தரக் குருக்களையா வினுடைய பத்தினியார்க்குச் சிலகாலமாகப் பூதோபாதையாக விருந்ததற்குப் பற்

பல வேடதாரிகளுக்கும், காளிகூளிமுதலிய தேவதைத் கட்கும் எத்தனையோ செலவிட்டும் நீங்காது யாருஞ் சிந்தித்திருக்குஞ் சமயத்து ஒரு மந்திரவாதி வந்து அஞ்சன மூலமாக வதன்வரலாறு தெரிய, அவ்வம்மை யாரைப் பிடித்திருக்கிற கிரகமொவ்வொரு மாந்திரிக ரிடத்தும் ஒவ்வோர்விதமாகச் சொல்லி வந்ததுபோற் சொல்ல, அதுதருணம் மேற்கண்ட குருக்களையாவின் சோதரர் மீது முருகக்கடவுள் ஆவேசித்துப் பிரசன்ன மாகிச் சுற்றத்தார் முதற் பல சூழ்ந்திருந்த யாரையு நோக்கி, இங்கு பாதிக்கிற கிரகம் இயக்கி யென்னும் பெயர்கொண்டது. இதனைவிலக்கும்வல்லமை பொருந் தியவன் இதுசமயம் குற்றாலத்தலத்தில்புவனாம்பிகைத் தாயின் நவராத்திரி மகோற்சவத்தினை நிறைவேற்றி மதுரைமாநகர நாடிச்செல்கின்றான். அவன் பெருமை யறையுந் தரமன்று. நமதருளாலே ஆழ்வார் திருநகரி யென்னும் திருக்குருகூரி லுதித்துச் சிறுபிராயத்திற் றனே வடநாட்டில் வசித்து வருகின்றானென, இன் னும் பற்பல வற்புதங்களையும் விளக்கினது மன்றி நா ளை காலையில் திருநெல்வேலி பாலம் ஸ்டேஷனிலிறங் குவான். ஒருகரத்திற் பொற்பிரம்பும் மற்றொரு கரத் தில் கமண்டலமுந் தாங்கி, நிறைய விபூதி சன்னித்துக் கொண்டு, கண்டத்தி லுருத்திராக்கத்தோடு விளங்கு வன். அம்மகான் பெயர் ஞானசித்தன். நீவிர் சென்று காண்பீர் நுங்குறை நீங்குமென்றனர். அருகிருந்த வனைவரு மிறும்பூதடைந்து உண்மை நாளை தெரிவோ மெனத் தீர்மானித்துக் கொண்டு மறுநாள் காலையில் ஒவ்வொருவரும் ஸ்டேஷன்வந்து சேர்ந்தனர். குருக் களையா முதலியோரு மெதிர்பார்த் திருந்தனர். புகை

வண்டி வந்தவுடன் சித்தமூர்த்திகள் உத்தமோத்தமா கிய சிலமாணவகர்களுடன் வெளிவந்தனர். அனைவருந் தரிசித்தனர். உபாசனையா லுண்டாவ தொன்றில்லை யென்னு நாத்திகரும் மாயாவதியருமாகிய சிலர் நேரிற் கண்டு, பத்தியில் மனஞ் செல்லும் பாக்கியம்பெற்றுப் பரவசமாயினர். குருக்களையா அவர்கள்சொல்லொணு மகிழ்ச்சி வாய்ந்து சித்தபெருமானை யழைத்துக் கொண்டு தமதுகிரகத்துக் கேகினர். அங்குச் சென்ற சில நிமிடங்களுக்குள் அவ்வம்மையாருக் குற்ற கிரகம் ஒ வென்றலர வாரம்பித்தது. சித்தநாதர் தமது கரத்து ற்ற பொற்பிரம்பைச் சிறிதுநேரம் அவ்வம்மையார் முன்னர் வைக்கும்படி கட்டளையிட அக்கணமேபூதோ பாதை நீங்கப்பெற்ற அவ்வம்மையாரும் குருக்களையா முதலிய வனைவரும் துதித்துப் பலவுபசாரம் புரிந்து வணங்க வவர்கட்காசிகூறி மறுநாள் சித்தமூர்த்திகள் திருவாலவாயினுக் கெழுந்தருளினர்.

திருவாலவா யணுகித் தனித்தமிழ்ச் சங்கம் புரக்கும் தோன்றலின் பலவுபசாரமேற்று ஔடதி முடித்து அளவளாவி யன்புடனமர்ந்து வந்தனர். அதுதருணம் காவையம்பதி முத்தீச்சுரத்தில் ஐந்தா வது குருபூசைநேரப் பாண்டித்துரை சித்தருக்குப் பொருளுதவினதேபோல முன்குறும்பலாவில் நவராத் திரி பூசையினையும் தானே நடத்திவைத்தனர், சித்த ரும் ஆனைக்காவடைத்து அக்குருபூசையினை நிறைவே ற்றி மதுரைமா நகரினுக்கேவர, பாண்டித்துரை வள் ளல் சித்தரின் வரவேற்றுப் பல்சிறப்பு நிகழச்செய்து, "வேண்டி னுநன்றுமுயர்ந்தோர் விழுமியோர் காண்டொ றுஞ் செய்வர் சிறப்பு" என்றதற்கேற்ப வுதவிவந்த னர். இதுநிற்க,

சென்ற சர்வதாரி வருடமுதல் சித்தர் செய்துவரும் வேள்வியினுக்கு எண்ணிலர்களாகிய பிரபுக்கள் பலவுபசாரத்துடன் பொருள்தக்கபடி யீந்துவந்தனர். திருவானைக்காவில் சித்தசபையொன்று தாபித்துப் பத்தர் பலருக் கருள்புரிந்து எல்லையிலாப் புகழ்படைத்துச் சித்தரெழுந்தருளியிருக்கு மமயத்து "நலமொன்றடைதற் குறுமிடை யூறுபலவுள" என்றதற்கேற்பச் சித்தமூர்த்திகளை வஞ்சிக்க நினைத்த சிலதுட்டர்களாலிடையிடையே யனேக கலாங்களும் விளைந்தன. அவையனைத்தும் புவனாப்பிகைத் திருவருளா லவ்வப்போது தொலைந்தன. எத்தனையோ சிவநேசச்செல்வர்கள் ஆயிரங்கணக்கான திரவியங்களைச் சித்தர்பிரானடியில்வைத்துச் சேவித்துநிற்க வவற்றிலொரு காசேனும் தனக்கென வைத்துக் கொள்ளாது அவ்வளவையும் தருமத்தினுக்கே செலவழித்த வுண்மை யுலகமெலாமறியும், நடந்த ஈரெட்டு யாகத்தினுக்கும், சாதுக்களுக்கும், வித்துவான்கட்கும், சமாராதனைக்கும், மகேச்சுரபூசைக்கு மாகச் செலவழித்தவை இரண்டிலக்கம் பொன்னுக்கு மேற்பட்டிருக்கலாம். அங்ஙனமிருந்தும் அவ்வவ்வமயம் செலவழிந்துவிடநாளுக்குநாள் திருவருட்சித்தி பலக்கப்பலக்கச் சிறிது வருவாய்மட்டுங்குறைந்திடினும்ஆரம்பித்ததுபோலவேசிறிது ஊக்கங்குறையாது கடன் வாங்கியு மியற்றிவந்தனர். மூர்க்கருக்கு மெய்ஞ்ஞான முழுவிரோத மென்பதுபோல் கார்க்கோடகனிகர்த்த கபடர் சிலர் சித்தர் பெரும்பேற்றைப்பார்க்க மனந்தாளாது பகைகொளவும் நினைந்தனர். அப்பணை நிறைவேறாததுகண்டு புறங்கூறவுமாயினர், இக்கள்வர் செயலனைத்தும் சிறிதுங் கவனியாது புவனாம்பிகைத்

திருவருளொன்றிலேயே நின்று நற்றவத்தினை நடத்தி வந்தனர். சித்தர்க்கிடையூறு நினைத்தா ரவர்கட்கே இடையூறாக பலவிளைந்தன. திருவருட்சகாயங் கொண்டார்க்குத் தீவினையாளர் புரியும் செயல் பலிப்பதுண்டோ? இங்ஙனமாக,

சித்தர் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக் கருகேயுள்ள கண்மணிப்பங்களாவிலெழுந்தருளி யிருந்து தமது ஆசிரியர் கட்டளையின்படி சிற்சில அரியவுளடதங்களை முடித்துக்கொண்டிருக்குங்கால்பதினேழாவதுயாகம்நெருங்கச் சித்தர் காவைக்குச்சென்றனர். அது சமயம் சித்தமூர்த்திகள் செய்த தவமெலாந் திரண்டொரு வடிவெடுத்ததன்ன, சீதா லட்சுமியம்மை திருவயிற்றில் சோபகிருது௵ பங்குனிமீ 24௳ கேட்டை நட்சத்திரமும் மங்கலவாரமும் கூடியசுபதினம் உதையாதி பூர்வம் ஒன்றேமுக்கால் நாழிகை மீனலக்கினத்தில் ஓர்பெண் மகவுதிப்ப, அம்மகவுக்குத் தமது ஆத்மார்த்தமாகவழிபடும் ஸ்ரீபுவனாம்பிகை யம்மையென்றே நாமகரணமுமிட்டனர். அதன்பின்னர்ப்பாண்டித்துரைத் தேவரவர்கள்அனுப்புவித்த திரவியங்கொண்டே காவிரி தீரத்திலிருந்த வைபவத்துடன் வழக்கம்போல நடாத்தி மறுபடியும் மதுரைக்குத் திரும்பி வதிந்து வருகையில், புவனாம்பிகைத் திருவருட் சோதனையாலோ, புதுவையினு மதனையடுத்த திவ்விய தலங்களினு மெழுந்தருளியுள்ள முழுமுதற் கடவுளாகிய பெருமான்மீது பதிகங்கணிறைவேற வேண்டுவதாலோ, புதுவை யன்பர்களும் நேரே தரிசித்து அளவளாவவேண்டியேயோ, இலங்கையாதி தேசத்துச் சிவநேசச் செல்வர்களும் தரிசித்துய்வான் பொருட்டோ? சித்தர் அன்பர் குழாங்க

ளில் தன்னைக் கடைப்பிள்ளையெனப் பற்பல சமயத்தும் நன்கு விளங்க நடந்துவந்த கோயமுத்தூர் வசிக்கும் நாட்டுக்கோட்டை அரு. லெ. வெங்கடாசல செட்டியாரென்பவர் தனக்குச் சித்தர் தரவேண்டிய இரண்டாயிரத்து நூற்றைம்பது ரூபாய்க்காக இரகசியமாய்க் கோர்ட்டின் மூலமாகத் தீர்மானம்பெற்று, சித்தமூர்த்திகள் காவைக்கெழுந்தருளி நவராத்திரி மகோற்சவ நிறைவேற்றுஞ் சமயத்தில் தனது காரியத்தைப் பூர்த்திசெய்து கொள்ளவும் உத்தேசித்திருந்தனர். பாண்டிநாட்டிலே, திருப்பெருந்துறையிலே, குருந்த மரநிழலிலே, குருமூர்த்தியின் தாளிலே, மணிவாசகர் தமது உடல்பொருள் ஆவிமூன்றினையும் சிவார்ப்பணஞ் செய்துபற்றற்றுப் பரமயோகியாய்த்தனித்து நின்ற அவசரத்தும் பாண்டியன்பணத்திற்குப்பாத்திரரெனவேற்பட்டதுபோல், "வெண்டிருநீறுபுனையுபாதவர்க்குவிருந்து செய்துழுய்பெருமிடி" கொண்டாலென்ன யாகத்தின் பொருட்டேவருவாயனைத்தையும் தியாகஞ்செய்துதனக்கெனவோர்காசிபிலும்பற்றிலராகின்றுஞ்செட்டியார் பணத்திற்குப் பாத்திர ராகினர். சித்த மூர்த்திகள்பால் மிகுதியு மன்புபாராட்டிவந்த செட்டியாரிங்ஙனஞ்செய்ததும் பலநன்மைக்கென்றே பலர் சம்மதம். யாவுந்திருவருட்செயலே. இவ்வுண்மையினைச் சித்தமூர்த்திகள் தட்பால் கைம்மாறு பாராது கருணைமேகமென நின்று பொருள்பொழிந்துவரும் பாண்டித்துரையவர்கட்கும் மற்றும் தமக்கு வேண்டிய கனதனவான்கட்கும் தெரிவியாது, புவனைப்பிகைத் திருவருட் குறிப்பையே மேற்கொண்டு, சூரனிடுக்கண் களைவான் காலங்கருதிப் பிரமாதியர் மேருமலையினை யடைந்தாங்கு, ஊதியத்தா

னேர்ந்த வுபத்திரவ நீங்குங்காறும் புதுவையம்பதி யடைவான் சித்தர் சங்கற்பித்த குறிப்பினையுணர்ந்து, மதுரையில்ஆதிமூலம்பிள்ளையக்கிராரமொன்று பிரதிஷ்டித்து அவனியுள்ள வரையில் அபாரகீர்த்தி வாய்ந்தவருக்குச்சொந்தமான, ஆதி. கந்தசாமிபிள்ளை முதலிய சிலஅன்பர்கள் புதுவையடைந்து வேண்டியசௌகரியங்க ளமைத்துச் சித்தமூர்த்திகள் வருகையை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். சுவாமிகளும் திருவருட்செயலி னீடுபட்டுச் சிந்தை மகிழ்ந்து நவராத்திரி மகோற்சவத்தினைக் காவைச்சித்தசபையிலேயே நிறைவேற்றி அடியார் குழாங்களுடன் புதுவைமாநகர்க்கெழுந்தருளினர்.

சின்னாளைக்குப்பின் சித்தநாதர் கொள்ளிடக்கரையில் முத்தீஸ்வரர் திருநட்சத்திர மகோற்சவத்தின் பொருட்டுச் செல்லுகையில் தமது ஆப்த நண்பராகிய செய்யூர் சமீன்தார் சுப்பராயமுதலியார் எதிர்கொண்டடிகளை யழைத்துக்கொண்டு, சேந்தன் குடியில் சிவானுபூதிச் செல்வரும், தருமபுர வாதீனத்து வித்துவ ரத்தினாகரமும், பலதல புராணங்கள் பாடியவரும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் முதலியவரால் நன்கு மதிக்கப் பெற்றவருமாகிய நடராஜகவிராய மூர்த்திகளின் மாளிகைக் கழைத்துவரவும் சித்தநாதர் மகிமையனைத்தையும் முன்னமே பன்னாள்கேட்டு நேரேதரிசிக்க ஆவல் கொண்டிருந்த கவிராயர் உடனேபணிந்து,

புவனும் பிகையெனும் பூரித மனுவினை
கவனும் புதிமறைக் கடித்தளர கரம்வைத்
தவனு நீயென வசிப்பத முடிவுகொள்
சிவனுஞ் ஞானசித் தருவினைத் துதிப்பாம்.

இதுமுதலிய பலசெய்யுள்பாடித் துதித்துத் தனது வண்டியிலேயே சித்தமூர்த்தியினைத் தருமபுரத்துக் கழைத்துக்கொண்டு போகவே, மூர்த்திகள் ஆலயத்தினமைந்துள்ள ஆதிகுருமூர்த்தங்களைத் தரிசித்துக்கொண்டிருக்க, கவிராஜரவர்களுஞ் சித்தமூர்த்திகள் வருகையினை மகா சந்நிதானத்திற் றெரிவிக்க அவ்வமயம் சந்தியாகாலமா யிருந்ததனால் அனுஷ்டானத்தினை முடித்துக்கொண்டு வருவதாகச் சந்நிதானங் குறிப்பிக்கவும் சித்தநாதர் தெரிந்து மற்றோர் சமயம் காணக்கருதித் திரும்பிக் காலை யடைந்து குருபூசைமுடித்து, தமது ஆப்த நண்பரும், மாடம்பிளாவட்ஸ்கியினிடத்து அனுக்கிரகம் பெற்றவரும், சித்தநூல்களில் வல்லுநருமாகிய தாசில்தார் மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்களைக் கண்டு திரும்ப நினைத்து ஆங்குச் சின்னாளமர்ந்திருக்கையில் அன்பு அறிவு பொறையாதிய குணமனைத்தும் பொற்புறவாய்ந்த சிரஸ்தாதார் முத்துசாமி பிள்ளையென்பவர் சந்தித்துச் சுவாமிகளைத் தரிசித்துத் தமக்கு நெடுநாளாக அருமைமகவிலாக்குறையை விண்ணபிக்க, சித்தசுவாமிகள் கருணைகூர்ந்து, அம்பிகையருளாற்புத்திரப்பேறுண்டாமென அனுக்கிரகித்துப் புதுவையம்பதிக்குவந்தனர். அவ்வமயத்தொருநாள் இலங்கைமட்டுக்குஞ் செல்லப்புவனாம்பிகைகுறிப்பிக்கவஃதோர்ந்து, பாஷையும், செய்கையும் தேயமு மாறுபட்டதீவினுக்கெங்ஙனஞ் செல்லுதலென நினைத்தும் அம்பிகையாணையைக்கடவாது சென்றனர்.

சித்தர் வருகையினைச் சத்தியவேத சந்திரோதயப் பத்திரிகாசிரியராகிய திரிசிரபுரம் டேவிட்பிள்ளை இலங்கையில் லேவ் கவர்னரெனும் பட்டம்பெற்றவருக்குத்தெ

ரிவிக்கஅவர்மாளிகைமுதலியதிட்டஞ்செய்து உபசரித்தனர். அங்குவர்த்தக நிமித்தமாகவந்துள்ள தென்னாட்டுச்சைவர்சிலரும் கேள்வியுற்றுவந்து பராவினர். சி-வைகிட்டங்கியின்சொந்தக்காரரும் வந்துசேர்ந்து வணங்கி மகேஸ்வரபூசைநடாத்தினர். சித்தபெருமான் கொழும்பினுக்கு எழுந்தருளி யிருப்பதனைக் கேட்டு, சுவாமிகளிடத்து அதிக அன்பு பாராட்டி வருபவரும், திரிசிரபுரம் ஜோசப் காலேஜ் தமிழ்த் தலைமைப் பண்டிதரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவானும் ஆகிய சவரிராயபிள்ளை கொழும்பு நகரத்திலே பிரபுசிகாமணியாகவும், வித்தியாவிநோதராகவும், இராஜமந்திரதரராகவும் விளங்குபவராகிய பொ. குமாரசுவாமிமுதலியாரவர்கட்குச் சித்தர்மகிமைகளை விளக்கித் தெரிவித்திருந்தனர். அப்பிரபுவும் நேரிற் சித்தநாதரைத் தரிசித்து மூர்த்திகள் அங்குத் தாமதித்த வரையில் செலவிற்குதவி வந்தனர். இதற்கு முன்னமே, பகவற்கீதையை யாங்கிலத்தில் மொழிபெயர்த்தவரும், ஷை முதலியா ரவர்கள் சகோதரரும், நியாயவாதியரும், இந்துதேயத்தின் க்ஷேமத்தின்பொருட் டுழைப்பவரும், சுகஸ்தான் என்னும் பெரியமந்திரத்திற்குரியவருமாகிய ஆனரபில் இராமநாத துரையென்பாரும் வந்து சித்தநாதரைத்தரிசித் ளவளாவித் தமது உயிரேபோல வெண்ணி ஒவ்வொரு தினமும் விசாரித்து வேண்டிய சௌசரியங்க ளனைத்து மமைத்து உபசரிந்துவந்தனர். ஒருநாள் தமது உத்தியான வனத்திற் கழைத்துக் கொண்டுபோய் தனித்திருந்து ஆத்மார்த்தமாகக் கலந்து சித்தர் திருமுக மண்டலத்தினை நோக்கிச் சரியையாதி சாதன நான்கு மொருவனுக்கு அகத்தே உபகா

ரமோ அல்லதூஉர் புறத்தே யுபகாரமோ வென்றனர்
சித்தர் செவிசாத்தி,

பூதி கண்டிடிற் பொங்கிய வன்பதி
நீதி கேட்க விரர்பிய வன்பதை
யோதி நிற்க வுறுத்திய வன்பொடுஞ்
சாது வாய்த்தெளிந் தன்புஞ் சரிதையே.

இலிங்கங் கண்டிடி லெய்திய வன்பதை
யிலங்கக் கற்க வெழுந்திடு மன்பதைத்
துலங்கக் கற்று துணிந்திடு மன்பொடுங்
கலங்கிடா வன்புங் காணிற் கிரியையே.

துதையு மெவ்வுயி ரும்மொக்கத் தண்ணன்போ
டிதையந் தன்னி னிறையறி யன்பவா
விதிதெ ரிந்தது நிற்கமின் னன்புக
முதய மாயொன்று மன்புநல் யோகமே,

அறிவு காணி னளிந்திடு மன்பொடும்
பிறவி துன்பமாய்ப் பெற்றிடு மன்பொடு
மறையு மிவ்வுல கங்கைக்கு மன்பொடுந்
துறவுண் மெய்க்குரு சொற்குறு மன்பொடும்,

கற்கு மன்பொடு கற்ற படியன்பாய்
நிற்கு மன்பொடு நீண்ட புளகிதம்
புக்க வன்பொடு புந்தி குழைந்தளி
மிக்க நண்பொடு மின்னிடு மன்பொடும்,

கம்பங் கம்பலை கண்டந் தழுதழுப்
பெங்கும் வேர்வையு மெங்கும் புளகமு
மங்க மெங்கு முரோமமெ லாமசைத்
தின்ப வாழ்வு மெழுந்தெழுந் தெய்தலும்,

ஓல மீட்டிடும் வாயுத வாமலு
நாலு தோலெலன்பு நெக்கிட நண்ணலு
மேல் தெங்கும் விழிபொழி வெள்ளமுஞ்
சால வும்வருஞ் சோம்புந் தளர்தலும்.

ஏங்கி டாமலு மேங்கலு மேங்கலி
னீங்கி டாமலு நீங்கலு நீங்கலி
னோங்கி டாமலு மோங்கலு மோங்கலிற
றூங்கி டாமலுந் தூங்கலுந் தோய்தலும்

கள்ள மெங்குங் கழறலுங் கண்டிடு
முள்ள மெங்கு மொளிர வொளிக்குளே
வெள்ள வின்ப மெழலும் விழைந்துளங்
கொள்ளை கொள்ளக் குழைந்து முகத்தலும்.

இன்ப மீதிற் றுளைந்தது மெங்கணு
மின்ப மீதி லிருந்தது மெஞ்சலி
லின்ப மாகி யொளிர்ந்ததும வேறற
வின்ப மாயது மியானுமங் கில்லையும்.

நித்த நித்திரை யாயது நீங்கிட
நித்த நித்திரை போயது நின்றிடாப்
பித்தன் பேயனை யொத்ததும் பீதிதீர்
பெத்த னையிடும் பெற்றியு ஞானமே.

னக்கூறினர். கேட்டதுரை யானந்தித்துச் சிலநாள் டனிருக்க விரும்பினர். இச்சீமான் மருகர் முத் குமாரசாமி துரையும் தமது பங்களாவிற் கழைத் கொண்டுபோய் உபசரித்து வழிபடுவாராயினர். வ்வமயத்தில் குளப்பு கவர்னர் செக்டெரியட் சிற் கலாசம்பிள்ளை யவர்கள் வந்து நாதரைத்தரிசித்து

மகிழ்ந்து இவ்வூரில் தங்களுக்குச் சௌகரிய மனைத்தும்
சுகமாக நடந்து வருகின்றனவோ வென,

வீடு கொடுத்தார் விரும்பிய லைவ் கவர்னரும்யான்
நாடும் பொருள் கொடுப்பா ரிராமநா தத்துரையுந்
தேடுமொரு வாகுமவரை செலவினுக்கார் பொன்னு
நீடுபெற மூற்கொடுத்தா ரெல்லார்க்கு மூத்தவரே.

என விடையளித்துக் கொழும்பினை விட்டுப் பிரயாண
ப்பட்டனர். ஸ்ரீ இராமநாததுரை சகோதரரும், திரு
வாசகத்தினை ஆங்கிலேயத்தில் மொழிபெயர்த்தவரும்
இலண்டன்மாநகரிலும் கீர்த்திவாய்ந்தவருமாகிய அரு
ணாசலத் துரையவர்களும் பிரயாண சமயங்கண் டுபசரி
த்தனர். இராமநாத துரையவர்கள் செல்வக்குமாரர்
களும் நியாயவல்லுநருமாகிய மகேசரும் கப்பல்வரை
யில் வந்து உபசாரம் பல புரிந்தேகினர்.

சித்தமூர்த்திகள் திருமந்திர நகரைச்சேர, போ
லீஸ் இனிஸ்பெக்டர் ஈசுரமூர்த்தியா பிள்ளையவர்களு
ம் மற்றும் பல அன்பர்களும் எதிர்சென்று தரிசித்த
ழைத்து வந்துபசரிக்க, மற்றையநாள் சுவாமிகளின்
உத்தம மாணாக்கரும், எட்டயபுரம் பேஷ்காரருமா
கிய எட்டயபிள்ளை யென்பவரும் சுவாமிகள் திருவுருப்
படத்தினையே ஆத்துமார்த்தமாகக்கொண்டு அதனால்
அரிய செயல்களை அன்பர்கட்குக்காட்டிப் பெரும்புக
ழ்படைத்த செந்தில் ஆறுமுகம்பிள்ளையும் வந்து சித்த
ரை யழைத்துக் கொண்டுபோய் சோடச வுபசாரங்க
ளும் புரிந்து வழியனுப்பச் சித்தர் தஞ்சாவூரை யடை
ந்தனர். இவர் வருகையைத் தெரிவிக்குமுன்னமே பல்
லடம் தாசில்தார் அவர்கள் தஞ்சையிற் பிரசித்தியுற்ற

சீனிவாசம்பிள்ளை யவர்கட்கு எழுதிவிடுத்த கடிதத்தை யப்பிள்ளைகண்டு சித்தரின் திருவருட்செல்வப் பேற்றைச் சிறிதுந் தேறாது, புறப்பூசையில் வழிபடுவார் அவ்வளவு சிரேஷ்டரன்றெனப் பலமொழிகள் பகர அம்மொழிகளைக் கேட்டிருந்த அன்பர் சிலர் சித்தமூர்த்திகளிடம் விஞ்ஞாபனஞ் செய்ய அவர் அத்தகையினர்க்கிரங்கி,

புறப்பூசையுநந்தப் போதத்திற் பேதங்
கள் போகுமட்டும், உறப்பாகச் செய்யென
வேயருநூல்க ளுரைத்திருந்தும், வெறுப்
பாகி யுள்ள மடக்கினர் போல்வெளிக் கேயு
ரைப்பர், சிறப்பி னுறுப்பவ மென்னே திரி
புர சுந்தரியே.

எனத் தமது வழிபடு தெய்வத்தை வாழ்த்தி யொருமையுற்ற மனத்தொடும் புதுவையம்பதிக் கெழுந்தருளினர். அதுசமயம் பதினெட்டாவது யாககாலங் கிட்டியது. வழக்கம்போல திருவானைக்காச் சித்தசபையார் ஆகவேண்டுவன முடித்துச் சித்தர் வருகையினை யெதிர் பார்த்திருந்தனர். கொழும்பு இராமநாததுரையவர்களும் தந்திமூலமாகச் சித்தசபைக்குப் பொருளனுப்பினார்கள். இவையனைத்தையும் சித்தசபை உதவிகாரியதரிசியும், தமிழ்ப்பண்டிதருமாகிய ஆறுமுகநயனார் புதுவைக்குத் தெரிவித்திருந்தனர். சித்தமூர்த்தியும் காரையம்பதிக் கெழுந்தருளுஞ் சமயத்துத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம் பெற்றதும், கைலாயவர்க்கத்துப் பதினெண்சித்தர் பரம்பரையினராகிய கடுவெளிச்சித்தர் யாகஞ்செய்து அனுக்கிரகப்பெற்றதுமான திருவிரும்பை மாகாளக்ஷேத்திரத்தில் இவ்

வியாண்டுசெய்யும்யாகத்தினை முடிப்பாயென, தெய்வீக மாகச்சித்தருக்குத்திருவருளுணர்த்துதலுங்கேட்ட அன்பர்கள் அளவிலா மகிழ்ச்சியா யத்தலத்துக்கெய்திமாகாளேசுரர்ஆலயத்தின் பிரகாரத்திலேயேயாகசாலையமைத்துப்புஷ்பத்தொங்கல்களானும், மகரதோரணங்களானும்,மங்கலவிருதுகளானும்திவ்வியாலங்காரஞ்செய்துசித்தநாதருக்குத் தெரிவிக்க உடனே சுவாமிகள் மாணவர்களுடனே அவ்விடமடைந்து அச்சமும் அன்பு மடிக்கடி பெருகத் தமது இச்சையின்படியே யருகேயுற்ற பல கனதனவான்களுடன் திருக்கோயிற்புகுந்து, கோபுரவாயில் முதற்கொண்டு மூன்றுமாவரணம் வரையில் செய்துள்ள கொட்டகையின் சிங்காரிப்பையும் இவ்வரிசையின்பற்பலசிறப்புக்களையுங்கண்டு பரமானந்தமடைந்த சித்தநாதர் கோடி சூரியப்பிரகாசம்போலுள்ள பீடத்தையும் திரிசூலத்தையும் வலம்வரச்செய்து தாபித்து, ஆதிசைவப் பிராமணர்களால் மகாபிஷேகம் ஸ்ரீருத்திரத்துடனடத்தி, பைரவேசர்க்குச் சுகந்த பரிமள செஞ்சந்தனக் கவசம்சாத்திச் செவ்வலரிமுதலிய நானாவித புஷ்பமாலிகைகளா லலங்கரித்து வேதிகையி னருகேயுள்ள கூர்மாசனத்தி லமர்ந்து மந்திரபூர்வகமாக வோமாக்கினி வளர்த்தி முதற்காலத்திற் பூர்ணாகுதி கொடுக்குஞ் சமயத்துக் குயின்மொழியம்பாள் சமேதரான மாகாளேஸ்வரர் வெள்விடைமீது ஆரோகணஞ்செய்து திவ்வியமங்கள கோலாகலமாக வெழுந்தருளி யாகசாலைக் கெதிரில்வந்து காட்சிதரத் தரிசித்த சித்தநாதர் அன்பு மாராமையுங்கொண்டு ஆனந்தக்கடலிலழுந்தி நெஞ்சங்கரைந்து,

திருவி ரும்பையமா காள மேவிய தேவி
யார் குயின் மொழியுடன், பிரிய மோடெ
ழுந் தருள்பு ரிந்தனை பேறு யாக முடித்
தனை, குருமொ ழிப்படி சித்தாலயங் கூட
மார்சபை கூட்டவுந், தருமை யோகிக ரற்ற
ஞானமுஞ் சித்தி யுந்தரல் வேண்டுமே.

எனப்பாடிப் பரவினர். மூன்றாங்கால தீபாராதனைகாலத்தில் புதுவைத் திருக்காம ஐயரவர்கள் ஸ்ரீலலிதா திரிசதி வியாக்கியானத்தினுக்குப் பொருள் விளக்கினர். இதனைக் கேட்டுப் புவனாம்பிகை பக்தியடையாதவர்கள் ஒருவருமில்லை. இவ்வையரவர்கள்ஏறக்குறையஅறுபது வருடங்களாக ஒவ்வொரு நவராத்திரி காலத்தும் விசேஷ சமாராதனை செய்தது பெருங்கீர்த்தி யடைந்ததுமன்றி, க்ஷீராப்தி மர்த்தன விலாசம் முதலிய பலகிரந்தங்கள் ஆந்திரத்திற் செய்துள்ளவர். மிகவயோதிகத் தன்மை யடைந்துள்ள இக்காலத்து மிவர் தமது தேகசிரமத்தினைக் கவனியாது சித்தமூர்த்திகள் சாயைபோலிருந்து அவர் குறிப்பின்வழி நின்றொழுகி வருவரேல் சித்தர் புகழையார்தான்போற்றிப் புகழாதிரார். பூரணாகுதி முடிந்தபிறகு முதனாளில்அன்பர்கள்பலர்விரும்பிய வண்ணம்உடனே அத்தலத்திலெழுந்தருளியபெருமானுக்குச்சித்த ரருளிச்செய்தபதிகத்தைத அன்பேயுருவாய்ப் பத்தியிற்சிறந்த முருகேச செட்டியார் சந்நிதானத்திலரங்கேற்றினர். அவ்வமயம், ஷை தலத்தினுக்கும் அரசிலிமுதலிய பலதலத்திற்கும் தருமகர்த்தாவாகிய ஆலங்குப்பம்வேங்கடசாமிநாயக்கரவர்கள் சித்தமூர்த்திகள்மீது பலவித்துவான்க ளியற்றியபிரபந்தங்களைப் பலருக்கும் விநியோகித்து, வருணாசிரம தருமங்கட்கேற்பு

வந்திருந்தவர்க ளனைவருக்கும் அறுசுவையுடன்கூடிய வுண்டி படைக்கச் செய்தது மன்றித் தானுந் தனது கரத்தாற் பரிமாறியும், மகாசனங்களிடத்து மிக்கவ ன்புபாராட்டி, மாலையில் சித்தர் அவபிருத ஸ்நானஞ் செய்து அன்பர் குழாங்களுடன் புதுவைக்கெழுந்தரு ளக்கண்டு தானுமுடன் சென்று அவராசிரம மடை ந்து வழிபட்டுய்ந்தனர்.

சின்னாளைக் குப்பின் அன்பர் பலர் பிரார்த்தித்த வண்ணம் உலகை முய்யுமாறு சித்தர் தமது அனுபவ நிலையிற் றோற்றிய காட்சிப்படி புதுவையில் கோயில் கொண்ட வேதபுரீசர், திரிபுரசுந்தரி, ஞானம்பிகை இ வர்கட்குத் தனித்தனியே பதிகம்பாடி, வில்வாரண்ணி யம் திருவரசிலி, முருகன்பாக்க முதலிய தலங்கட்கும் பதிகமோதி எழுந்தருளியிருக்குங் காலத்தில் விசுவா வசு வருடம் சித்திரைமாதம் முதல் சென்னைமாநகரத் தில் கூற்றினுங் கொடிய கொள்ளைநோயாகிய வாந்தி பேதி யுற்பத்தியாகி மிகுந்த பயத்தினை யபாரமாக விளைக்கச்சித்தர் கேள்வியுற்று யாதொருகைம்மாறுகரு தாமலும்,சிரமத்தைக் கவனியாமலும்,அமுதினு மினிய தான வொரு சித்தௌடதத்தை முடித்துஅனைவருக்கு முபயோகிக்கும்படி சென்னையிலுள்ள பலரிடத்தும் கொடுத்து இலவசமாகக் கொடுக்கும்படி கட்டளையிட டனர். இம்மருந்தால் ஆயிரங்கணக்காகப் பிழைத்த உண்மையினைச் சித்தமூர்த்திகளின் திருவடிச்சம்பந்த ரான சுந்தர சுவாமிகளுக்குச்சென்னைவாசிகளா லெழு தப்பட்டுத்திவான்பகதூர்இரகுநாதராயரவர்களாலும், வில்சன்கம்பெனி துவிபாஷி 'பதுமநாப நாயகரவர்க ளாலும் முறையே தமிழிலும் தெலுங்கிலும் வெளியி

டப்பட்ட வந்தன பத்திரமென்னும் புத்தகங்களால் தெளிவாகக்காணலாம். அவ்வாயம் சென்னை செங்கழு நீர் விநாயகர் கோயில் வீதியில் ஷெ பதுமநாப நாயக ரவர்கள் மாளிகையில் சித்தமூர்த்திகள் எழுந்தருளி யிருந்தனர். சிற்சில கலைகளை முன்னிட்டுச் சிலவாண் டுகளாக மேற்படி விநாயகருக்கு விழாமுதலிய நடவா திருக்குங் குறைகளை அன்பர் சிலர் சித்தர் சந்நிதானத் திற் றெரிவிக்கக்கேட்டு ஒற்றுமையுண்டாம்படி பதிக மொன்று கட்டளையிட்டருளினர். அதுமுதல் கலாபக ன்று கணபதிக்குச் சகலவைபவமு நடைபெற்றுவரு கின்றன. அன்றியும் சென்னை ஸ்டாண்டர்ட் உதவிபத் திராசிரியரும், சுதேசி பத்திராசிரியருமான ஏ-சங்கரலி ங்கப்பிள்ளை பி-ஏ-அவர்கள் பன்னாளாகச் சித்தசுவாமி கள் பெருமிதங்களைப் பலகாலும் செவியினிப்பக் கேட் டும், தனது ஆசிரியராயிருந்த வித்துவான் முத்தாச்சி தம்பரம்பிள்ளை யவர்களால் பாடப்பெற்ற சித்தர்பெரு மான் நான்மணிமாலையென்னு நூலாற்றெரிந்து முள்ள வராதலால், சென்னையிற் சித்தநாதரைத் தரிசித்து இ வர் சரித்திர பிரபாவத்தை உலகோபகாரமாகத் தனது சுதேசி பத்திரிகையில் எழுதிவந்ததுடன் சுவாமிகண் மீது நவமணிமாலை, விண்ணப்பப்பத்து முதலியநூல் களும்பாடி மகிழ்ந்ததுமன்றி சித்தசுவாமிகள் வைபவம் மேற்றிசையாருங் கண்டுகளிக்க ஆங்கிலத்தும் சுவாமி கள் சரித்திரத்தினை யெழுதிப் பதிப்பித்தனர். இங்ஙன மே பூலோகவியாசன்பத்திராதிபர் முதலியபலஅன்பர் களும்சித்தமூர்த்தியின் திருவடிசம்பந்தமுற்றுய்ந்தனர், சின்னாளைக்குள்முத்தீஸ்வரர்ஏழாவதுகுருபூசை நேரிட வும்சித்தர் திருவாணைக்காவையடைந்தனர்.அதுதெரிந்த

பல்லடம்சிரஸ்ததார்முத்துசாமிபிள்ளை யென்பவர்குரு பூசைக்குவேண்டுந்தொகையைத்தந்திமூலமாக அனுப்பி யதுமன்றித்தேவரீர் கட்டளையிட்டிருந்தபடி சுவாமிகள் அனுக்கிரகத்தால் ஒரு செல்வப்புத்திரனைப் பெற்றேன், தேவரீரிவ்விடமெழுந்தருளி யக்குழந்தைக்குத்திருநாம மிட்டருளவேண்டுமெனவும் விஞ்ஞாபனஞ்செய்துகொ ண்டனர். நீண்டகாலமாகச்சித்தர் பெருமான் அன்பிற்கு வந்த தாசில்தார் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களும் சிறிது தொகையை யனுப்பிச் சித்தர்வருகையினை யெ திர்பார்த்தனர். குருபூசை முடிந்தபின் சித்தர் தாசில் தார் மாளிகைக் கெழுந்தருளிக்கொங்கு நாட்டிலுள்ள திருமுருகன் பூண்டி அவிநாசி முதலிய தலங்களைத் தரி சித்துக்கொண்டு பொள்ளாச்சியைச் சமீபிக்கச் சுவா மிகளின் வருகையைத் தெரிந்த புரவிப்பாளையம் ஜமீன் தாரவர்கள் சித்தமூர்த்திகளின்பால் வந்து தரிசித்துத் தனது நகரத்தினுக்கழைத்துப்போய்ச் சகலவிதவுபசா ரமும் புரிந்து வேண்டும் பொருளுதவித் தானும் தனது இல்லறக் கிழத்தியும் போற்றிப் புகழ்ந்தனர். அதன் பின் பல்லடம் வருமுனமே எதிர்பார்த்திருந்த சிர ஸ்ததார் முத்துசாமிபிள்ளை யவர்கள் ஆராமையுடன் வந்தடிபணிந்து போற்றிப்புகழ்ந்து தேவரீரனுக்கிரகத் தாலுண்டானபாலகனுக்கு நாமகரணஞ்செய்யவேண்டு மெனவேண்டஅங்ஙனமேசெய்தருளித்திருப் பூருக்குவ ந்துதாசில்தாரவர்களுடன்சிலநாள்அளவளாவிக்கருவூர் மார்க்கமாகவரும் வழியில் சித்தமூர்த்திகளிடத்து அத் தியந்த நண்புவாய்ந்த சால்ட் இனிஸ்பெக்டர் ஸ்ரீநிவா சையரவர்கள்கண்டு, அடங்காமகிழ்வடைந்து “என்ன மாதவஞ்செய்ததிச்சிறுகுடில்” எனக்கூறியழைத்துப்பல

வுபசாரம் புரிந்து வழிவிடச் சித்தமூர்த்திகள் புதுவை யை நோக்கினர். வழியில் பாதிரியாரொருவர் சுவாமி களை நோக்கிச் சிலவினு நிகழ்த்தி ஞானசித்தரெனத்தே ர்ந்து "ஐய! சென்னையிலுற்பத்தியான கொள்ளைநோயி னுக்குத் தங்கள் மாத்திரை மிகவுபயோகப்பட்டதா கக் கேள்வியுற்றேன். நானறிந்தவளவில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் சுகமடைந்ததாகத் தெரியவருகிறது. இத்தகைய மகிமையை விளைத்த அந்த அவுடதத்தை உலகோபகாரமாக அடியேனுக்கும் அருள்புரிதல் கூடு மோ" எனக்கேட்கச் சித்தமூர்த்திகள்,

எட்டிவட வேர்வித் திரண்டுஞ் சிவனன்னீர்
விட்டதனைமூன்று நாள் வெய்யலில்வைத்-தட்டபின்பு
பூவழலே சேர்த்தே புகழ்குன்றி வீதமுணிற்
தாவறுவி டேசியும்போந் தான்.

என்னுமொரு பாசுரத்தாற் செய்முறையை யனுக்கிர கித்துப் புதுவையம்பதியை யடைந்தனர்.

சென்னைமாநகரினுக்கு வேல்ஸ் இளவரசரும் இள வரசியும் எழுந்தருளும் வைபவத்தினைக்காணச் சென் னைச் செங்கழுநீர்ப்பிள்ளையார்க்கோயில் வீதியில் மாளி கையமைத்துச் சித்தரை வரும்படி சென்னையன்பர் பலவேண்ட அங்ஙனமறுபடியும் சென்னைக்கு வந்தனர். அவ்வமயம் ஆத்தங்குடி நாகப்பசெட்டியா ரென்பவர் தமக்குண்டாயிருந்த காரகநோயைத் தீர்த்தருளவேண் டுமெனக் காணிக்கையாக வைந்நூறு ரூபாய்வைத்துச் சித்தரைப் பிரார்த்திக்கச் சுவாமிகளும் அவர் வேண்டு கோளுக் கிரங்கிஔடதமுடித்துக் கொடுக்குந் தருணத் தில் திருவருட்குறிப்பாற் சிலகாலஞ் செல்லுகவென்ற தைத்தேர்ந்து,

தெய்வபலத் தாலேனுஞ் சித்தந் தனைத்திருத்தி
மெய்யுணர்ந்தே நம்மை விரும்புவையே-லையமின்றிச்
சொன்ன மொழிப்படியே தொலைப்போம் நின்னோ
யென்னவுளத் தேகொ ளினி. [யை

என்றபாடலையுங் கையிற் கொடுத்தனுப்பினர். ஷெ செட்டியார் பட்டினத்துச் சுவாமிகளுக்கு வொருபதிகம்பாடித் தந்தருளவேண்டுமென இரங்கூனிலிருந்து சித்தசுவாமிகளுக்கு விஞ்ஞாபனஞ்செய்ய அங்ஙனமே முடித்துத் தந்தருளினர். இங்ஙனமாகத் திவ்வியமங்கள கோலாகலராய், வைதிகசித்தாந்த செல்வராய், ஸ்ரீபுவனும்பிகை திருவருட்பேற்றினை யுடையராய் விளங்கி வருகின்றனர். சுபம்.

## வாழி.

சுத்தபுவ னும்பிகையின் றிருவருளி னிற்றிளைத்துப்
பத்திவள மெண்ணிலநற் பதிகங்கள் பாடியெண்
சித்திகளும் வேண்டாதே திருமுனமா மெனுஞான
சித்தரிரு திருவடிகள் சீர்த்தியுற வாழியவே.

அறுபான் மும்மை நாயன்மார்களிலொருவராகிய வாயிலார் நாயனார் பரம்பரையில் வந்தவரும், சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவசமய பிரவர்த்தகாசாரியரும், மதுரைத்தமிழ்ச் சங்கத்து வித்துவான்களிலொருவரும், சென்னை மெய்கண்ட சந்தானசபை அக்கிராசனாதிபதியுமாகிய சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரவர்க ளியற்றிய

## ஞானசித்தப்பிரபாவம்

முதற்பாகம்

முற்றியது.

திருவருட்சகாயம்.

ஸ்ரீமத். ஞானசித்தசுவாமிகள் தமது திருத்தந்தையார்
முத்தீஸ்வரரது இரண்டாவதுதிருநட்சத்திரகாலத்தில்
அடியார் வேண்டுகோளுக்கிரங்கி
உபதேசித்த

# யோகஞானசாரம்.

யோகஞானசாரம்; அதாவது யோககாட்சியை யறிந்து சுருக்கிச் சொல்லிய நூலெனவும், யோகத்தின் சாரம் ஞானத்தின் சாரம் எனவெளிப்படும் நூல் எனவும் பொருள்படும். அநாதி யமலசித்துருவாகிய ஸ்ரீ பரமேசுவரன் திருவடியை ஜீவான்மாக்கள் அடைவதற்கு ஏதுவாகிய மார்க்கங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம். இவற்றுள் யோகத்தை விளக்கி ஞானத்தைச் சூசிப்பாம்.

யோகம்—மனம் பஞ்சேந்திரியங்களின் வசம் சாராது கடவுள் திருவடியில் ஒருமித்து நிற்றல். விசேஷதர்மமாகிய சம்சாரத்தை விடாதசற்குணஸம்பன்ன ஓர் புருஷன் அப்பியசிக்குன்முன் நாடிசுத்திசெய்யல் வேண்டும். ஏனெனில் சுழுமுனைநாடியின் வியாப்தியையும் மூலாதாரம் துவக்கி த்வாதசாந்த பரியந்த மிருக்கும் கமலங்களின் தளகணக்கையும் பரமசிவத்துக்கு ஆசனமாகிய கமலத்தின் சொரூபத்தையும் அறிந்து யோகம் செய்யவேண்டியபடியால் நாடிகளெழுபத்

தீராயிரத்தில் முக்கியநாடி முப்பத்திரண்டு. அவற்றுள் சுழுமுனை, பிங்கலை இடையென்னும் நாடிகள் முக்கிய மாகும். பிங்கலை இடைஇரண்டும் சுழுமுனையோடு கூடித்தனியாகவே இருந்து கொண்டு துவாதசாந்தத் திற்குக்கீழே பிர்மரந்தர பரியந்தமாயிருக்கும். இந்தச் சுழுமுனை நாடியானது கீழிருந்து தேகமத்யமாகியகந் தஸ்தானம் வரையில் இருகிளையாகவும், அதற்குமேல் பிர்மரந்தரம் வரையில் ஒரு கிளையாகவும், மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை என்னுமாறுதாரசக்ரங்களையும், அதற்குமேல் த்வாதசாந்தம் வரையில் நாலு சக்ரங்களையும் வியாபித்து பிர்மரந்தரம் வரையில் சகளரூபையாகவும், அப்பால் த்வாதசாந்தம் வரையில் நிஷ்களரூபையாகவும் இருக்குமென்றறிக. சோம்பல், விஷயேச்சை முதலான துர்குணங்களைவிட்டு, குரு, தேவபக்தி வைராக்கியமுதலான நற்குணங்களைப் பெற்றிருப்பவன் நாடிசுத்திசெய்ய யோக்கியனவன். அதாவது ரேசகபூரக கும்பகஞ் செய்யவேண்டும். இதனை மற்றோரிடத்தில் விளக்கவேண்டி யிருத்தலால் இம்மட்டில் நிறுத்தியோகமுறையினை எடுத்துப்பேசுவாம்.

யோகபுருஷன் பூமியிலிருக்கும்போது நோயினல் வருந்தான். நரைதிரையினையையும், யமவாதனையையும் கர்ப்ப வாசத்தையும் அடையான். யோகமார்க்கமே ஞானமடைந்து மோக்ஷமடைவதற் கேதுவாகும். இம் மார்க்கத்தைவிட்டு மோக்ஷநெறியில் செல்வான் நீர்த்தடத்தில் பருந்து உழல்வதை யொப்பான்.

இவ்வியோகம் பல பகுதியது. அவற்றுள் கருமயோகம் அறுபது பிரிவினையுடையது. அவை, ஹட

யோகம், லயயோகம், லம்பிகாயோகம், கேசரியோகம் முதலியன. இன்னும் நானுவித முத்திரைகளும் பற்பல தரிசனங்களும் யோகத்தைச்சார்ந்தனவே. இவைகளை யென்புருகும்படி நெடுநாட் பழகவேண்டும். இவ்வாறு செய்து கஷ்டத்தாலேனும் அறியாமையாலேனும் குற்றம்வரின் அநேகதோஷங்கள் உண்டாகும். நிற்க, ஞானயோகம், சிவயோகம், ராஜயோகம், பக்தியோகம் அல்லது மந்திரயோகம் எனும் நான்கே மோக்ஷத்துக்குரியவைகளாம்.

ஞானயோகமாவது நிஷ்காமபுண்ணிய பரிபாகத்தினுற் சாதனசதுஷ்டயம் வாய்ந்து பிரபஞ்சத்தை முற்றத்துறந்து ஆசாரியனே பொருளெனக் கண்டு வழிபடும் தீவிரதரமுள்ள பக்குவாத்மாவாகிய சிஷனது இருதயத்திற்சென்று தீக்ஷிப்பது. இது நயன தீக்ஷை, ஸ்பரிச தீக்ஷை, மாநஸதீக்ஷை என மூன்று விதமாம். நயனதீக்ஷையாவது மீன் தனது சினையைக் கண்ணுறப்பார்த்த மாத்திரத்தில் இரக்ஷிப்பதுபோல ஆசாரியன் நயனத்தாற் கடாக்ஷிப்பதாம். ஸ்பரிஸ தீக்ஷையாவது கோழியானது தனது சினையைச் சிறகாற்றழுவிக்காத்தல் போலத்தனது கரத்தால் தொட்டனுக்கிரகிப்பதாம். மாநஸதீக்ஷையாவது ஆமையானது தனது சினையை நினைத்த மாத்திரத்தி லிரக்ஷிப்பதுபோல அநுக்கிரகிப்பதாம்.

சிவயோகமாவது யோகசாஸ்திரத்திற் சொல்லிய முறையே இயமநியமாதிகளின் நெறிகடவாமல் நடக்கும் சிலர்கள் தங்கள் சவுகரியத்துங்கிசைந்தவண்ணம் சுகாசனமாகப் புலித்தோல் அல்லது மான்தோல், மீ

துட்கார்ந்து விபூதி உத்தூளனஞ்செய்து ஜபதியானத் துடன் செய்வதாகிய ஸகற்ப பிராணயாமத்தை முத லிற்செய்து மனந்திடப் பட்ட பின்பு அகற்பமார்க்க பிராணயாமத்தால் ஐம்பொறியையு மடக்கிய ஜீவாத் மாவை க்ஷரம் அக்ஷரம் எனும் இரண்டுக்கு மேலான கோடிசூரியப் பிரகாசமாய்ச் சுரோத்திர துவாரங்களும் கந்தத் துவாரங்களும் எவ்விடத்திற் சேர்க்கின் றனவோ அவ்விடத்தின் வழியாய், பரமாத்மா விடத்தி லிரண்டறக்கலப்பதே. இரண்டு புருவங்களின் மத்தியில் எவ்வளவுகாலம் பார்வையிருக்குமோ அவ்வளவு காலம்வரை வாய்வும் மனமுமடங்கி யிருக்கும். அதுவரை எமபயமுமணுகாது. மேற்சொல்லிய ஞானயோகம், சிவயோகமாகிய இரண்டினையும் பக்குவம்நோக்கிஅநுக்கிரகிக்கவேண்டியதுபற்றி இராஜயோகத்தின் நுட்பத்தைச்சொல்லுதும். அதனை வாசனைவீசுகின்ற பரிசுத்தமான இடத்திலிருந்து இயற்றவேண்டுமேயன்றி நீர்க்கரை நெருப்புள்ளவிடம், பஹிரங்கமான சபை வனம் இவ்விடங்களி லிருந்து செய்யவுஞ் சொல்லவுங்கூடாது ஆகார நித்திரை யிரண்டைக் குறைக்கினுங் கூட்டினுந் தீங்காய் முடியும். சுரைக்காய், மோர், கடுகு, புளி, எண்ணெய் முதலியவற்றை நீக்கவேண்டும். சுழல்கின்றவாயுவை நிறுத்தினலல்லது பனதை நிறுத்தமுடியாது. ஆகையால் புசித்த அன்னம் ஜீரணித்தபின் காலைவேளையில் சுபமுகூர்த்த லக்கினத்தில் தனது தேக பலானுசாரமாக குளிர்காற்றுநீங்கும்பொருட்டு ஒன்று அல்லது இரண்டு மூன்று பிராகாரங்களினல் சூழக்கட்டப்பட்ட கிரகமத்தியிலாவது உபத்திரவ மில்லாத வனத்திலாவது பட்டுவஸ்திரம், நூல்வஸ்திரம் மான்

தோல் முதலானவைகளால் பரப்பப்பட்ட ஸ்வேச்சா விஷய சௌக்கியமான ஆசனத்தில் வடக்குமுகமாய்ச் சுகமாக உட்கார்ந்து சரீரத்தைக் கோணலில்லாது நேரேயுடையவனு யிருக்கவேண்டும். இவ்வாறிருந்து வாயுவை அடக்குதற்கு ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியென்னு மிவ்வாறும் அதற்கு அங்கங்களாம். ஆசனத்தை விரிக்குமிடத்து ஸ்வஸ்திகம், கோமுகம், பத்மம், பத்திரம், மயூரம், குக்குடம், வீரஸிம்ஹாஸனம், கூர்மம், சித்ரம் இவைமுதல் அனந்தமாம். அவற்றுள் சித்ராசனமும், பத்மாசனமும் சிறப்புடையன. சித்ராசனமாவது இடதுகாலைப்பிடித்து குதத்தில் அமுக்கி கையிரண்டையும் மார்பிற்கட்டிக்கொள்வது. பத்மாசனமாவது வலது தொடையில் இடது காலையேற்றி இடதுதொடையில் வலது காலையேற்றி பின்புறமாய் இரண்டு கைகளையும் மாறிப் பெருவிரலைப்பற்றுதல். இத்தகைய ஆசனத்தில் உட்கார்ந்து வாயை மூடிக்கொண்டு கண்களைக்குவித்து வெளியிற்செலுத்தாது ஐம்புலன்களையுமடக்கி, உண்ணாக்கின் துவாரத்தில் நாவின் நுனியையேற்றிப் பல்லுடன் பல் கூடாது அகற்பமார்க்கத்தில் மூன்று பிரிவாயுள்ள பிராணயாமம் செய்யவேண்டும்.

பிராணயாமமாவது ரேசகபூரக கும்பகஞ்செய்தல். ரேசகமாவது பிங்கலையினால் உள்ளிருக்கும் பிராணவாயுவை வெளியில் எட்டங்குலம் தள்ளுதல். பூரகமாவது இடையாகியசந்திரகலையினால் வெளிக்காற்றைப் பதினறு அங்குலம் உள்ளே பூரித்தல். கும்பகமாவது பூரித்த மூன்று வாயுவை வெளியில் விடாமல் உள்ளே பன்னிரண்டு மாத்திரை காலஅளவுஸ்தம்பிக்கச்செய்து

சூரியகலை சந்திரகலை சமப்படுத்தப்பழகுதலாம். யாத்திரை கைநொடிப்பொழுதும் கண்ணிமைப்பொழுதும் மாத்திரைக்களவாம். இதனை அதமம் மத்திமம் உத்தமம் என்பர் யோகநூலார் கும்பகமானது அகற்பமென்றும், சகற்பமென்றும் இருவகைப்படும். மந்திரத்தியானமில்லாதது அகற்பமென்றும், மந்திரத்தியானமுள்ளது சகற்பமென்றும் சொல்லப்படும். மந்திரங்கள் பிரணவமந்திரம், பிரசாதமந்திரம், ஹம்சமந்திரம், காயத்திரி வியாகிருதிமுதலானவையாகும். இவ்வாறு ரேசக பூரக கும்பகஞ்செய்தல் பிராணாயாமம். பன்னிரண்டு மாத்திராகாலம் வரையில் கும்பித்தல் கனிஷ்டப் பிராணாயாமமென்றும், இருபத்துநான்குவரையில் கும்பித்தல் மத்யப் பிராணாயாமமென்றும், நாற்பத்தெட்டுவரையில் கும்பித்தல் உத்தமப்பிராணாயாமமென்றும் சொல்லப்படும்.

கனிஷ்டப் பிராணாயாமத்தில் வியர்வை உண்டாகும். மத்திமத்தில் நடுக்கம் வரும் உத்தமத்தைச்செய்யும்போது முதலில் வியர்வை அரும்புதல் முதலிய துர்க்குணங்கள் உண்டானாலும் பழக்கத்தினால் விலகிவிடும். இவ்வாறு மந்திரதியாந சூந்யமாகில் இந்திரியங்கள் நாசமடையா. மந்திரதியாந ஸஹிதமாயிருக்குமாகில் மந்திரஜபத்தோடு கூடிய சிவத்தியானத்தினாலே இரவிலுண்டான சமஸ்த பாபங்களும் நசித்துப்போகும். இதுப்ராதகால யோகத்தின் பலமாகும். சாயங்கால யோகமானது மத்யானத்தி லுண்டானபாபங்களைத் தொலைக்கும். இப்படி நாடோறும் காலையிலும் மாலையிலும் அப்பியாசஞ் செய்யப்படும்போது தேகத்தில் பிருதுவிபிரத்தியக்ஷமானால் வெளியிலுள்ள கந்தத்

திலாசை நீங்கும். அக்கிபிரத்தியக்ஷமாகில் திவ்யரூப தெரிசனமாகும் அக்கிதாபமிராது. வாயுவு பிரத்தியக்ஷமாகில் திவ்யஸ்பரிசந்தெரியும். அணிமாதி எண்குண முஞ்சித்திக்கும். ஆகாசம் பிரதியக்ஷமாகில் திவ்யநாத தரிசனமாகும் ஆகாச சஞ்சாரியாவன். இவை முதலான குணங்கள் யோகாப்பியாசத்தாலுண்டாகுமென்றறிக.

இப்படிப்பன்னிரண்டு வருஷம் பழக ஆகாயத்தில் மனோவேகத்தைக் காட்டிலும் சரீரத்துடன் துரிதமாய்ச்செல்வான். மேற்கூறியபடி இடகலையில் ரேசித்துப் பூரித்து, கும்பித்து, சந்திரனைத்தியானித்து, பிங்கலையில்விட்டுப் பிங்கலையில் முறைப்படி ரேசகபூரக கும்பகஞ்செய்து சூரியனைத்தியானித்து இடகலையில் விட்டு மூன்றுமாதம் சாதனை செய்தால் நாடிசுத்தமாகும் நாடியை மற்றொரிடம் விளக்குகிறோம் என்றது இதுவே. இந்தப்படி நாடியைப் பரிசுத்தஞ்செய்தால் சிறிதும் வாயுவைப் புறம்போக்காம லிருத்தலுமாம்; வாயுவின்றால் கொடியவியாதிகள் வரமாட்டா; உண்ட அன்னத்தும் உடனே ஜீரணமாகும். சித்தசொரூப மென்கிற ஞானப்பொருள் எக்காலமும் மயங்காமல் விளங்கும். பன்னிரண்டு பிராணாயாமம் செய்கிறகாலத்தை பிரத்தியாகாரமென்று சொல்லுவர் பெரியோர். அப்பிரத்தியாகாரம் பன்னிரண்டு செய்கிற காலத்துக்குச் சமாதியென்றுபேர். சந்திரன் மேல்வாயிலிருந்து பொழிகின்ற அமிர்தத்தை உந்தியின் மேல்நோக்கிப் பொருந்திய சூரியனுண்பான். தலை கீழாகவும், கால் மேலாகவும் நின்று வாயைக்காக்கையின் மூக்கைப்போல் குவித்துக்குளிர்ச்சியுற்ற வாயுவை உட்கொண்டால் நரை திரை

வரமாட்டாது. உண்ணுவின் துளையில் நாநுனியை யேற்றி ஆறுமாதகாலம் அமுதமுண்டானுல் நரைவராது. மரணவஸ்தையும் நீங்கும். நாவினுல் உண்ணுவின் தொளையை நெருக்கிச்சந்திர மண்டலத்தே சகஸ்திரதளகமலத்திற் கோடிசூரியப்பிரகாசமாக எழுந்தருளிய புவனேசுவரியைத் தியானித்தால் திருவருளாற் கவிமாரிபொழியும் வல்லபம்வரும். இவ்விதம் மூன்று வருஷம் பழகினுல் அமிர்தவடிவேயாகும். கார்க்கோடகனது பற்கள் ஊடுருவக்கடித்தாலும் விஷமேற மாட்டாது. இதன்மேல் தாரணையிற் பழகவேண்டும். ஐம்பூதங்களையும் தனித்தனி மனதிற்றரித்தலே தாரணை அதாவது ரேசகபூரக வாயுக்களைத் தடுத்துக் கும்பகத்திலிருந்துபிராணவாயுவைச்சுழுமுனையில் நிறுத்திச் சரீரத்துள்ள பூதநிலை, பத்மதளம் அதிதேவதை அக்கரங்களாகிய பொருளையறிந்து பிர்மரந்திரத்துக்கு அதிதேவதையாகிய சதாசிவனைச் சதாதியானித்து முகூர்த்தகாலம் மௌனமாக சீவனுடன் சேர்த்தால் மோட்சவாசல்திறக்கும். இதுவுமன்றிப்பிருதிவிதாரணையால் உறுதியும், சலதாரணையால்ஈரமும், அக்கினிதாரணையால் தகனமும், வாயுதாரணையால் பிராண னழியாமையும், ஆகாயதாரணையாற் சமானப்படுத்தலு முண்டாகும்.

தியானமாவது சிந்தித்தல், அதாவது தத்துவத்தைமனதிலெண்ணிச் சலியாதிருத்தல். அதுசகுணமும் நிர்க்குணமுமாக இரண்டு விதமுண்டு. சகுணமாவது ஈசுவரனது திருமேனியை மனதில்பதித்து முற்கூறிய மந்திரங்களைத் தியானித்தல். நிர்க்குணமாவது பூதமுதல் நாதமீறுகப்பொய்யென்று கண்டு புருவமத்தியில் நாட்டம்வைத்து ஆத்மதரிசனஞ்செய்து தானும் பர

மாத்மாவும் நிற்கும் முறைமையுந்தெரிந்து அருளே நா வாகமுத்தி பஞ்சாக்ஷரத்தைச் செபியாமல் தியானித் தலே. அன்றித்தன்மாத்திரையாகிய சத்த ரிசரூபரசப கந்தத்தை முறையே செவி முதலிய வைந்திலும் பொ ருந்தச்செய்வது தியானம். இப்படி முப்பது நாழிகை பரியந்தம் நாட்டம் வைத்தால் லவணத்துடன் ஜலம் கூடுவதுபோல மனத்துடன் ஆன்மாகூடுவதும், பிராண னும் மனமுஞ்சேரலும், சீவாத்மா பரமாத்மா சமநிலை யாதலும் சமாதி. இப்படியாக குளிர்ச்சி, உஷ்ணம், சுகம், துக்கம்விலகி மனதின்சம்பந்தமுழுதுமற்று பிர மஸ்வரூபமாக நிற்பவனைத் தீ, நீர், படை, மிருகமுத லியன துன்புறுத்தமாட்டா. நீடூழிகாலம் அசைவற நிர்விகற்பத்தில் நின்று விடுதலும் எக்காலம் சமாதிகலை ந்து விழிப்பானோ அப்பொழுது இருதயகமலம் விரி ந்துநாடிகளுக்குச் சலனமுண்டாய் சுவாசம் திரும்பி அசைவற இந்திரியங்கள் தன் தன் தொழில்களைச் செ ய்யத்தொடங்கும். இந்தநிலைபெற்றவன் பாலுடன்பால் கூடுமா போலும்காகம் அம்சப்பக்ஷிகளின் ஒற்றுமை போன்றும் ஒத்து வாழ்வான்.

பிராணவாய்வு மேலிழுக்கவும், அபானவாய்வுகீழி ழுக்கவும் மிருகின்ற துன்பத்தால் வாதனையடையாமற் சமாதிகூடுபவனே யோகியாவான். அகரவெழுத்துக் குட்பிறந்து சகரவெழுத்துக்குட் செல்லும் அசபாமந் திரத்தை இருபத்தோராயிரத்தறு நூறுஉருநல்லஜீவன் ஏற்கவேண்டும்.

இத்தியாதி இராஜ யோகநிலையை அப்பியாசிப் போர்க்கு சாஸ்திரங்க ளெல்லாவற்றையு முணர்தல், க்ஷணப்பொழுதில் உலகமுழுதுஞ் சஞ்சரித்தல், சூக்கு

மமாகுதல், ஸ்தூலமாகுதல் அடிக்கடிசரீரத்திலுள்ள பிரகாசங்களைக் காணநினைத்தல், எத்தேசத்துப் பாஷையு முணர்தல், ஆகாசத்திற் சேர்தல்,பரகாயப் பிரவேசஞ் செய்யல், சர்ப்பனமாஷையு மறிதல், தூரத்திலுள்ள எல்லாப் பொருளையும் பார்த்தல், இறந்தோரை எழுப்பித்தல் முதலியசித்திகளனைத்தும் ஒவ்வொரு காலத்தில் மிகுந்த இடையூறுகளையே கொடுக்கும். அன்றியும் இத்தகைய சித்திகள்எத்தனையடைந்த போதிலும் முத்தியை யடைதற்கு இன்றியமையாச் சாதகமாகிய பக்தியின்றி பயனில்லை யெனக்கருதி விச்ராந்தி யடைந்தவனே சிவன் முத்தன். இதுவுமன்றி சித்திகளனைத்தும் விஞ்ஞைவித்தைக் கிணையெனச் சிறிதும் மனதைச் செலுத்தாதுப் பேதைபோலும்பித்தன்போலும் உலகுக்குக்காட்டி நிற்பதே பெரியோர்கடன். இத்தனை தொந்தரவுகளில்லாமலும், சரீரம் வருந்தாமலும் சஞ்சிதபுண்ணிய மிகுதியால் விரைவில்மோக்ஷக் கடலிற்குளிக்க நினைத்தோன் பக்தியோகத்திலே சித்தம்வைக்க வேண்டும். அதிற்பழகப்பழகச்சிவஞானயோக நிலைமையையும் பெறலாம். ஸ்திரீசூத்திர சண்டாளர் முதலிய அனைவராலும் அநுஷ்டிக்கக் கூடியது.

பக்தியோகமென்பது ஈசுவரனிடத்தன்பு பாராட்டலேயெனச் சாண்டிலியமஹரிஷி இயற்றிய பக்தி மீமாம்ஸையில் இரண்டாவது சூத்திரம் விளக்குகிறது. அக்கினிசம்பந்தத்தால் பொன்னுக்கு மாற்றுயர்வது போலச் சஞ்சிதபுண்ணியத்தால் தனக்குத்தானேபக்தி யுண்டாகவேண்டும். உண்டாகவே இல்லறத்திலுண்டாகிய சிற்றின்பத்தில் வெறுப்புண்டாகும் ஒருகாமியானவன் தனக்கிசைந்த மாதரிடத்தன்புடன் இடைவிடாது

நினைத்து அவள்குணங்களையே கொண்டாடுவனேயல்லது அதற்கிடையூறானவற்றை நினைக்கவே மாட்டான் அதுபோல் பக்தனும் எங்கும் ஈசுவரசொரூபத்தையே பாவிப்பானேயல்லது விருப்பு வெறுப்பு ஆகிய யாதொன்றையுங் கவனிக்கமாட்டான். உலகத்தில் காணப்படுவதெல்லாம் பரப்பிர்ஹமமே என்று சுருதிகூறியவாறு எங்கும் கடவுள் சொரூபமாகவே நினைப்பான். கோபிகாஸ்திரீகள் அன்புபோல்வது என்று மூன்றுவது சூத்திரத்தில் கோபிகைகளின் பக்தியை உதாரணமாகக் கூறினமையால் அவர்கட்கு ஸ்ரீ கிருஷ்ணபகவானிடத்து மிக்க அன்புள்ளதென்பதைக் காட்டுகிறது. அதனாற்றான் அவர்கள் எவ்வித அவஸ்தைகளினும் புலன்களின் தொழிலை முற்றுந் துலைத்துப் பகவானையே ஹிருதயத்தில் தியானித்தார்கள். அவ்வண்ணமே லீலாசுகயோகீந்திரர், ஒரு கோபிகன்னிகை தயிர் மோர்விற்க விருப்பங்கொண்டு கண்ணன் திருவடியிலேயே மனதை நிலை நிறுத்தினமையால் “தயிர்மோர்” எனக் கூறவேண்டியிருக்க மதிமயங்கிக் “கோவிந்த தாமோதர மாதவ என”க் கூறினளென்றுரைத்தார். பக்தியானது பகவானைச் சரணடைவதேயாம். சரணடைவதிலும் காயிகம், வாசிகம், மானஸீகம் என மூன்றுவகைப்படும் இம்மூன்றினுள் நடுவேயுள்ள வார்த்தையால் உச்சரிப்பதும் பாடுவதுமே கடவுளுக்கு மிகப்பிரீதியானது. இம்மூன்றாலும் பணிவோரடையும் நன்மைக்களவில்லை.

இக்கலிகாலத்தில் நம்போன்றவர்கள், பரலோகத்துக்குச் சிறந்த சாதகம் சுகமாய் அடையக்கூடியது பக்தியோகமே. கன்மயோகம், ஞானயோகம், சிவயோ

கம், பக்தியோகமென்னும் நான்கில்கன்மயோகபேதகஷ்டம், ஞானயோகம் சிவயோகம். இக்காலத்தில் அபூர்வம் எல்லாரும் ஞானிகள் யோகிகள்போல் நடிக்கிறார்கள். பக்தியோகமோ ஞானயோகத்தின் அங்கம். யாதொரு கஷ்டமுமின்றி அளவற்ற பயனையும் விளைவிக்கும், ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் ஸஹஸ்ரநாமபாஷியத்தில் ஸ்ரீபரமேசுவரன் தன்னைத்தியானிக்கப்பட்டவர்களுக்கு முக்தியையும் நோயற்ற வாழ்வையும் நல்லுருவத்தையும் மற்றுமனேக போகங்களையும் கொடுப்பாரெனவும், இதனால் ராஜயோகமுறையே கலாசோதனையால் நாடிசுத்திசெய்யப்பட்ட பலன் கிடைக்குமெனவும் ஒருவன் அளவற்ற மஹாபாதகங்களைச்செய்யினும் கணப்பொழுதுபகவானைச்சிந்தித்தானானால்மீண்டும்பத்திபாவநரான அந்தணர் மனைகளையும் பரிசுத்தஞ் செய்யத்தக்க தவம் பொருந்தியவனாகிறான் எனவும் இடைவிடாது பிரணவத்தை ஜபித்து ஈசுவரனைத்தியானித்து அப்பரனைத் தெரிசித்தால் ஹிருதய கிரந்தி பேதித்துச்சகலசமுசயங்களுமற்றுக் கன்மங்களனைத்துந் தொலைந்து காமியத்தை விரும்பாது பாவங்களெல்லாவற்றையும் சிங்கத்தைக்கண்ட மிருகங்கள்போல நசித்து விடக்கூடுமெனவும், ஈசன் நாமஸ்மரணைசெய்தால் நீரிற்கலந்த உப்புப்போல சகல பாவங்களும் போய்விடுமெனவும், கிருதயுகத்தில் தியானித்தும், திரேதாயுகத்தில்யாகஞ்செய்தும், துவாபரயுகத்தில் பூசித்தும் எப்பலனைப்பெறக்கூடுமோ அப்பலன் இக்கலியில் நாமசங்கீர்த்தனத்தாற் பெறுவான் எனவும், துஷ்டசித்தனாயினும் பகவானைத்தியானித்தானாகில் அவனது பாவங்கள் பகவானால் விலகுவானெனவும், அறிவின்றி அக்கினியைத் தொட்டானாகில் சுடு

வதுபோல் பற்றக்கவலைகளை நீக்கி க்ஷணப்பொழுதே னும் ஈசுவரனைத்தியானித்தவன் சகல சித்திகளையும் பெறுவானாகில் முற்றும் அவன் திருவடியின்கண்ணே பற்றுளோரைப்பற்றிச் சொல்லவேண்டுமோ எனவும் தொண்டர்கள் வீட்டுவேலையாவும் பகவானே நிறைவே ற்றுகிறானென்ற திடநம்பிக்கையுள்ளவற்கருகிலே நின் று பகவான் காரியங்களைச் சாதிக்கின்றானெனவுங்கூறி னர். சுகரோபாஸ்தி செய்தவருக்கு இந்தச்சரீரத்தின் முடிவில் மோக்ஷமில்லையென்றாலும் பிறதுன்பத்தை விளைக்கும் பிராப்தகன்மந்தொலைந்தவுடன் மோக்ஷம் என்று பிர்மசூத்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. பகவானுடைய அவதாரத்தையுந்திரு விளையாட்டையு மறிந்தவர்க்கு மீண்டும் பிறவித்துன்பமில்லையென சா ண்டிலிய பத்திசூத்திரத்திற் சொன்னவாறே கீதையி னுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான பிர ணாயாமஞ்செய்து அதனாற்றொலையும்பாவம் க்ஷணநேரம் ஈசுவரத்தியானம் செய்ததற்கொப்பென சாதாதபர்கூறி யதால் இங்ஙனம் உபாசித்து அநேகர் முத்திபெற்றார் கள். ஒரு தெய்வத்துக்கு உண்மை பக்தர்களானது மெ ய்யானால் எந்ததெய்வத்தையும் இகழார்கள். அரசமரத் தின்மூலம் பிர்மாவென்றும் நடுவிஷ்ணுவென்றும், மேல் உள்ளது சிவனென்றுங்கூறியதுபோல் எல்லா தெய்வமும் ஒன்றே எங்கும் பகவத்ஸ்வரூபத்தைப்பாவி ப்பதனால் சிவஞானயோகங்களின் நிலைமையையும் இவ னே அடைகின்றான். அன்றிக் குலகோடிகள் உத்தார ணமாகுமென்று புரந்தரர் முதலியபுமான்கள் சொல்லு வதாலும்.

"அருண்மலிவெண்ணீ றணிந்துகண்மணிபூண்டைந்தெழுத்தும் வாய்க்கணிந்து, தெருள்பொலி பத்தியிற் சிவவுபாசனை செய்பவர்முத்தி சேர்வரென்று, பொருள்விரவுபெரிய சாபாலவுபநிடத நன்குபுகலா நிற்கு, மருளகல் காலாக்கினி ருத்திரவுபநிடதமு மிதே வகுத்துக்கூறும்" என்று உபநிடதங்களிற் கூறித்துதிக்கின்றமையாலும்.

பக்தியோகத்தில் ஈடுபடுவதேஞானமென்று

"யாதுசெய்யினுந்தீர்த்தெமக்கருளீந்திடும
கத்தீசனிப், போதும் வந்தடியாக்கினையெனிற்புக
ல்வதென்னப்பூவுளீர், சாதுசங்கமும் வேதவங்க
முந்தமிழ் நிறைந்தநற்காங்கயம், ஓதுமின்சிவயவ
சியென ஊனுடம்பருளாகுமே"

எனவுரைத்து இதன்விரிவையினிவெளியிடும் ஞானசித்த யோகாநந்த பிரகாசிகையில் சவிஸ்தாரமாய்க் கண்டு ஆனந்திக்கலாம். ஆதலால் அடியார்கள் ஸ்ரீ புவநாம்பிகையின் திருவடிதியானபரர்களாயிருக்கத்திருவருளைச் சிந்திக்கின்றனமென்றனர். உடனே இவ்வமுத வசனத்தைக்கேட்ட அனைவரும், ஹர, ஹர எனுமொலிகடலொலியெனமுழக்கி ஆர்ப்பரித்து நமஸ்கரித்தார்கள். சுபம்.

திருவருட்சகாயம்.

திருவருட்சகாயம்.

## திருக்குருகூர்ச் சித்தமூர்த்திகள் திருவாய்மலர்ந்தருளிய நூல்களின் பெயர்.

### சாத்திரக்கோவைகள்.

| | | |
|---|---|---|
| 1 | கலைஞானதீபம் | 1000 |
| 2 | சுத்தாத்துவித சித்தாந்த பூஷணம் | 1000 |
| 3 | மஹாஜாலிகாமர்மம் | 1000 |
| 4 | ஆயுர்வேதரத்திநச்சுருக்கம் | 500 |
| 5 | சித்தர்கைமுறைவெண்பா | 400 |
| 6 | சித்தசாத்திரச் செய்யுட்டிரட்டு | 300 |
| 7 | சடாதாரவிளக்கமென்னும் திருமந்திரம் | 200 |
| 8 | தபோதனம் | 105 |
| 9 | உத்தரபோத சங்கரகம் | 100 |
| 10 | வைத்தியகும்மி | 100 |
| 11 | முப்பூவிளக்கமும்மணிக்கோவை | 30 |
| 12 | சுத்தசலத்தெளிவெட்டு | 8 |
| 13 | விஷஜ்வரநிக்ரக பஞ்சரத்நம் | 5 |

### க்ஷேத்திரக்கோவைகள்.

| | | |
|---|---|---|
| 1 | ஞானபாஸ்கரோதயம் | 1000 |
| 2 | திருக்குற்றாலப்பதிகம் | 30 |
| 3 | திருமலைப்பதிகம் | 30 |
| 4 | அகத்தியரகவல் | 1 |
| 5 | சித்தர்கள்பாமாலை | 42 |
| 6 | பாபநாசப்பதிகம் | 30 |
| 7 | கன்னியாகுமரிப்பகவதியந்தாதி | 100 |
| 8 | திருச்செந்திற்பதிகம் | 30 |
| 9 | ஆற்றார்ப்பதிகம் | 20 |
| 10 | சோமசுந்தரிமாலை | 30 |
| 11 | கூடுதுறை | 100 |
| 12 | சாந்தீஸ்வரப்பதிகம் | 30 |
| 13 | திருக்குருகூர் நவதிருப்பதி மஞ்சரி | 100 |
| 14 | திருவருமாமலைப்பதிகம் | 30 |
| 15 | திருநெல்வேலிப்பதிகம் | 20 |
| 16 | காந்திமதியம்மன்காட்சிப்பதிகம் | 10 |

| | | |
|---|---|---|
| 17 | செப்பரைப்பதிகம் | 10 |
| 18 | சதுரகிரிமஹாலிங்கர்பதிகம் | 10 |
| 19 | திருப்பரங்குன்றப்பதிகம் | 30 |
| 20 | மதுரைமீனாம்பிகைமாலை | 32 |
| 21 | இராமேஸ்வரப்பதிகம் | 30 |
| 22 | உத்தரகோசமங்கைப்பதிகம் | 10 |
| 23 | பழனியாண்டவர்மாலை | 30 |
| 24 | கருளிமலைப்பதிகம் | 10 |
| 25 | வெள்ளியங்கிரிப்பதிகம் | 10 |
| 26 | மருதமலைப்பதிகம் | 30 |
| 27 | கோயமுத்தூர்க் கோட்டைக்குகன்பதிகம் | 10 |
| 28 | பட்டீசுரப்பதிகம் | 30 |
| 29 | அவிநாசிப்பதிகம் | 30 |
| 30 | திருசிராப்பள்ளிபதிகம் | 10 |
| 31 | திருவானைக்காப்பதிகம் | 40 |
| 32 | அகிலாண்டேஸ்வரிமாலை | 30 |
| 33 | பச்சைமலை சற்குருபாமாலை | 30 |
| 34 | திருப்பிடவூர்ப் பதிகம் | 100 |
| 35 | திருவரங்கத்திருமாலை | 64 |
| 36 | கடம்பர் கோயிற்பதிகம் | 20 |
| 37 | இரத்நகிரிப்பதிகம் | 20 |
| 38 | திருவீங்கோய் மலைப்பதிகம் | 20 |
| 39 | கருவூர்ப்பதிகம் | 30 |
| 40 | இளம்பள்ளிஸ்தலப்பதிகம் | 140 |
| 41 | திருச்செங்கோட்டுப்பதிகம் | 100 |
| 42 | நாரிக்கணபதிமாலை | 30 |
| 43 | குமரமங்கலப்பதிகம் | 100 |
| 44 | சேலப்பதிகம் | 40 |
| 45 | பாகநகர்ப்பதிகம் | 20 |
| 46 | காங்கேயப்பதிகம் | 30 |
| 47 | சிவன்மலைப்பதிகம் | 10 |
| 48 | திருவனந்தகிரிப்பதிகம் | 10 |
| 49 | பச்சைமலைப் பரமசற்குருபிரசாதமாலை | 30 |

| | | |
|---|---|---|
| 50 | கொல்லிமலைப்பதிகம் | 30 |
| 51 | திருவொற்றியூர்ப்பதிகம் | 30 |
| 52 | திருவிற்கோலப்பதிகம் | 10 |
| 53 | திருவாலங்காட்டுப்பதிகம் | 20 |
| 54 | திருமணலூர்ப்பதிகம் | 20 |
| 55 | சாமளவல்லியார்பதிகம் | 20 |
| 56 | வடதிருமுல்லைவாயிற்பதிகம் | 30 |
| 57 | சென்னைக்காசி விசுவநாதர்பதிகம் | 20 |
| 58 | சி. காமலவிநாயகர்மாலை | 32 |
| 59 | ,, தில்லைவிநாயகர்பதிகம் | 10 |
| 60 | ,, கங்காதரேசுவரர்பதிகம் | 10 |
| 61 | ,, சித்திவிநாயகர்பதிகம் | 10 |
| 62 | ,, செங்கழுநீர்விநாயகர்பதிகம் | 50 |
| 63 | பாலசுப்பிரமணியர்பதிகம் | 10 |
| 64 | திருக்கழுக்குன்றப்பதிகம் | 30 |
| 65 | திருவான்மியூர்ப்பதிகம் | 20 |
| 66 | திருமயிலாப்பூர்ப்பதிகம் | 40 |
| 67 | பாதிரிப்புலியூர்ப்பதிகம் | 20 |
| 68 | கந்தகோட்டமாலை | 100 |
| 69 | வடபழநித்தாண்டகமாலை | 20 |
| 70 | காஞ்சிகாமகோடிபீட நவரத்னமாலை | 9 |
| 71 | திருவண்ணாமலைப்பதிகம் | 30 |
| 72 | சிற்சபைப்பதிகம் | 30 |
| 73 | வைத்தீஸ்வரர்பதிகம் | 20 |
| 74 | பிரமபுரப்பதிகம் | 20 |
| 75 | சட்டநாதர் பஞ்சரத்நக்கவசம் | 5 |
| 76 | திருமாற்பேறுப்பதிகம் | 20 |
| 77 | மாயூரநாதர்பதிகம் | 10 |
| 78 | கும்பகோணம் மாமகப்பதிகம் | 10 |
| 79 | திருவையாறு சப்தஸ்தானப்பதிகம் | 10 |
| 80 | திருநள்ளாற்றுப்பதிகம் | 10 |
| 81 | திருமாகாளப்பதிகம் | 10 |
| 82 | திருவம்பர்ப்பதிகம் | 10 |

| | | |
|---|---|---|
| 83 | திருப்பழூர்ப்பதிகம் | 10 |
| 84 | திருவிதாங்கோட்டுப்பதிகம் | 10 |
| 85 | கதிர்காமவேலர்பதிகம் | 10 |
| 86 | திருவிரும்பைமாகாளப்பதிகம் | 10 |
| 87 | ஞானம்பிகைப்பதிகம் | 10 |
| 88 | திருவாசிலிப்பதிகம் | 10 |
| 89 | வில்வாரண்ணியப்பதிகம் | 20 |
| 90 | முருகன்பாக்கப்பதிகம் | 20 |
| 91 | வேதபுரிப்பதிகம் | 20 |
| 92 | திரிபுரசுந்தரிமாலை | 3) |
| 93 | பட்டினத்தடிகள்தோத்திரம் | 20 |


---

சித்த மூர்த்திகள்மீது தற்காலவரை பலவித்வான்களியற்றிய பிரபந்தகளாவன.—

திருநெல்வேலிஜில்லா திருக்குருகூரென்னும் திருநகரி தெற்கு ரதவீதி ஆ. லெ. சுந்தரசாஸ்திரிகளியற்றிய ஞானசித்தோபாக்கியானம். 1

ஷ யாகப்பிரகரணம். 2

ஷ ஜில்லா ஷ யூர் கச்சை திரவியசுந்தரம்பிள்ளையவர்கள் குமாரர் முத்தையபிள்ளையவர்களியற்றிய தோத்திரப்பா. 3

ஷ ஜில்லா கயத்தாறு உபாத்தியாயர் தெ-முத்தையபிள்ளை யவர்களியற்றிய அருட்பெரும்பதிகம் 4

ஷ யாரியற்றிய ஞானசித்தானந்தாமிர்தரசகீர்த்தனை. 5

ஷ ஜில்லா செக்காலைக்குடி வடக்கரண்மனைசுப்பிரமணியதுரையவர்களியற்றிய கொம்மி 6

ஷ யாரியற்றிய ஞானசித்தரத்நாகரமாலை. 7

ஷ ஜில்லா ஆத்தூர் ஸ்கூல்மாஸ்டர் நெல்லையப்பஅய்யரவர்களியற்றிய விடுதிப்பாட்டு 8

திருநெல்வேலி ஸ்ரீமத்தண்டபாணி சுவாமிகள் சோதரர் சித்திரபுத்திர பிள்ளையவர்களியற்றிய போற்றிப்பதிகம் 9

திருநெல்வேலிக்கடுத்த வண்ணார்பேட்டை வேலாயுதசாமிகளியற்றிய பள்ளு. 10

திருநெல்வேலி ஜில்லா குலசேகரம் பட்டணம் பள்ளிவாசல் மோதீன் சாகிபுதம்பி அவர்களியற்றிய ஊஞ்சல்பாட்டு 11

திருநெல்வேலி பிரமானந்த சுவாமிகளியற்றிய ஆனந்தக்களிப்பு 12

திருநெல்வேலி, தெற்குப்புதுத்தெரு வித்வான் அழகிய சொக்கநாத பிள்ளையவர்களியற்றிய ஞானசித்த ரம்மானை 13

செப்பறைக்கடுத்த வெள்ளிமலை மகாதேவ யோகீந்திரரியற்றிய ஞானசித்தசதகம் 14

மதுரை, இராமேஸ்வரம், தேவஸ்தானம் சூபிரண்டாண்டு பகவந்தனை நாகலிங்கம்பிள்ளை யவர்களியற்றிய யாக இயல்பு 15

௸ சங்கிலிசுவாமிகளியற்றிய திருவருட்பாமாலை

மேற்படி ஜில்லா திருப்பரங்குன்றம் நாராயண சரணரவர்களியற்றிய ஏகாதசமாலை 17

மேற்படி முத்துசுவாமி முனிவரியற்றிய சித்தநாதர் பஞ்சரத்தினம் 18

திரிசிரபுரம் டிராபிக்மானேஜர் ஆபீசு ரயிட்டர் இராமசாமி நாயுடு அவர்களியற்றியவேள்விப்பதிகம்

மேற்படி யூர் ஜோசப்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் முத்துச்சிதம்பரம் பிள்ளையவர்களியற்றிய நான்மணிமாலை 20

மேற்படி வயாட்டுபாதிரி ரயிட்டர் முத்துப்பிள்ளையவர்களியற்றிய ஞானசித்தானந்தகொம்மி 21

௸ திருவானைக்கா வித்வான்சோமசுந்தரம் பிள்ளையவர்களியற்றிய யாகமாலிகை 22

மேற்படி கொண்டயம்பேட்டை சேஷய்யர் அவர்களியற்றிய யாகக்கும்மி 23

மாயூரம் வித்வான் கிருஷ்ணய்யரவர்களியற்றிய ஸ்தோத்திரப்பதிகம் 24

ஷை ஷை பஞ்சரத்தினம் 25
ஷை ஷை நவரத்தினமாலை 26
ஷை ஷை மும்மணிக்கோவை 27
மேற்படி ஸ்கூல்மாஸ்டர் வெங்கடாசலமய்யரவர்களியற்றிய யாகவெண்பா 28
திருநயமம் வித்வான் நரசிம்மபாரதியாரியற்றிய நவரிசிமாலை 29
திருவையாறு முத்துசாமி பாரதியவர்களியற்றிய பிள்ளைத்தமிழ் 30
தருமபுரவாதீனம் வித்துவான் சேந்தன்குடி நடராஜகவிராய மூர்த்திகள் இயற்றிய முத்தீசர்பதிகம் 31
சேலம்ஜில்லா தர்மபுரிவக்கீல் சுப்பிரமணிய அய்யரவர்களியற்றிய பஞ்சகம் 32
சேலம் வடிவேலு முதலியாரியற்றிய கீர்த்தனம்
சேலம் கிருஷ்ணகிரிதாலுக்கா ஒட்டம்பட்டி ஓவர்சீயர் தி-பொன்னம்பலம் பிள்ளையவர்களியற்றிய உலா
ஷை ஞானசித்தானந்த கீர்த்தனைகள் 35
ஷை திருச்செங்கோடு சுப்பிரமணிய செட்டியாரவர்களியற்றிய விண்ணப்பப்பதிகம் 36
சென்னை ஜீவரக்ஷார்த்த சித்தர்சபையாரியற்றிய வேட்கைப்பதிகம் 37
ஷை கிரிஸ்டியின்காலேஜ் தமிழ்த்தலைமைப் பண்டிதர் திருவாரூர் சின்னசாமிபிள்ளையவர்களியற்றிய ஞானசித்தபுராணம் 38
ஷை சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம், பூவை-கலியாண சுந்தரமுதலியா ரவர்களியற்றிய வண்ணம் 39
ஷை யாரியற்றிய ஞானசித்தப்பிரபாவம் 40
ஷை ஆன்வாயில் சந்தப்புலமை தங்கவேலுபிள்ளையவர்களியற்றிய வண்ணத்தோத்திரம் 41
ஷை வண்ணக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முதலியாரவர்களியற்றிய வண்ணத்தோத்திரம் 42
ஷை பெரம்பூர்வொர்க்ஷாப் ரயிட்டர் செங்கல்வராய முதலியாரவர்களியற்றிய துவாதசமாலை 43

ஷை பிளாக்டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் வேலாயுதமுதலியாரவர்களியற்றிய நவமணிமாலை 44

ஷை ஷை இரட்டைமணிமாலை 45

காங்கேயம் அஷ்டாவதானம் சேஷாசலநாயுடு அவர்களியற்றிய வண்ணப்பதிகம் 46

சொர்கி, மாஜிபோலீஸ் இன்ஸ்பெக்டர் சின்னசாமிபிள்ளையவர்களியற்றிய நவகம் 47

கோயமுத்தூர் ஜில்லா உடுமலைப்பேட்டை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் கந்தசாமிக்கவிராய ரவர்களியற்றிய பரோபகார விளக்கம் 48

ஷை ஷை யாகபஞ்சரி 49

கன்னிவாடி ஜமீன்பாளையாண்டிசாமி துரையவர்களியற்றிய பலைந்தச் செந்துறைப்பா 50

பாஞ்சாலங்குறிச்சி மாஜிஜமீன் காரியஸ்தர் ஆள்வார் திருநகரி திருவேங்கடஞ் தாத்தாசாரியரியற்றிய ஆனந்தக்களிப்பு 51

திருவரங்கம் பெரியகோவில் வித்வானும் பென்ஷன் ரெவின்யூ இன்ஸ்பெக்டருமாகிய சுந்தரராஜபய்யங்காரவர்களியற்றிய ஞானசித்தர்நாமப்பதிகம் 52

அயோத்தி இராமதாசெனனும் ஒரு வைஷ்ணவராலிந்துஸ்தானி பாஷையிலியற்றி நாகரவெழுத்தால் காசித்தேசத்திலச்சியற்றியதான யாகவைபவம் 53

மேற்படியாரியற்றிய குருபூசாத்வயம் 54

திரிச்சிராப்பள்ளி பாரஸ்டுரேஞ்சர் ஸ்ரீநிவாஸதேசிகரியற்றிய அடைக்கலப்பத்து 55

திரிசிரபுரம் மஹாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளைமாணாக்கரும் பிரசங்கசாகரருப் திருச்சிநேசன் பத்திராசிரியருமாகிய வித்வான் திருக்கண்ண மங்கை தன்வந்தரி திரு-ஸா இராகவாசாரியாரவர்களியற்றிய திருஞானசித்தசப்பு 56

ஸ்ரீ ரங்கம் அமிர்தவசனிப் பத்திராதிபரவர்கள் அன்பில் மேற்படி வெங்கடாசாரியார் அவர்களியற்றி யவசனாமிர்தம் 57

மதுரைஜில்லா முரையூர் ஸ்ரீமான் பழ. கி. ஷண்முகஞ்செட்டியார் சமுகவித்வான் கொட்டாம்பட்டி எம். கருப்பை ராப்பாவலரியற்றிய நவமணிமாலை.

திருச்சிராப்பள்ளி செண்ட்ஜோசப் காலேஜி தமிழ்ப்பண்டிதர் டேவிட்பிள்ளையவர்களியற்றிய சித்தராரூதி 59
திருமயிலைச் செந்தோம் காலேஜி தலைமைப்பண்டிதர் சண்முகம் பிள்ளையவர்களியற்றிய திருக்குருகூர்ச்சித்தமான்மியம் 60
சீர்காழியைச்சார்ந்த திருநகரி பண்டிதர் பாலபாரதி கிருஷ்ணமாசாரியாரியற்றிய ஞானசித்தர் நான்மணிமாலை 61
கலியாணகிரிபாலசந்திர சரஸ்வதி பி. ஏ. அவர்களியற்றிய திருவெழுகூற்றிருக்கை 62
மதுரையடுத்த பசுமலை அமேரிக்கன்மிஷன் தமிழ்த்தலைமைப்புலமை சிவபுரம் வித்வான் வேலாயுதமுதலியாரவர்களியற்றிய பதினெட்டாம் யாகப்பாமாலை 63
பிருங்கிமலை உமாபதிசர்மா பி. ஏ. அவர்களியற்றிய யாகமஞ்சரி 64
சுதேசி பத்திராதிபர் எ-சங்கரலிங்கம்பிள்ளையவர்கள் பி-ஏ-இயற்றிய நவமணிமாலை 65
சென்னை வியாசர்பாடி சாமியார் சின்னையாமுதலியாரவர்ளியற்றிய தோத்திரமஞ்சரி 66

இவையன்றி திருவாவடுதுறை, தருமபுரமுதலிய ஆதீனவித்துவான்களாலும், ஸ்ரீமத்தண்டபாணி சுவாமிகளாலும், பற்பலசாஸ்திரிகளாலும் மியற்றிய சாத்துக்கவிகளுமளப்பில. இப்புத்தகத்திற் காணாத பற்பலதேசங்களிலும் சிற்சில வித்வமணிகள் சித்தமூர்த்திகளைத் துதித்து ஆங்கிலம் தெலுங்கு முதலிய பாஷைகளிலும் சில பிரபந்தங்கள் செய்திருக்கின்றனர். அவைகளும் சீக்கிரத்தில் வெளிவரும்.

திருவருட்சகாயம்.